www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 20
දිනමුරසු වාරමලර්
மே.19–25,1996
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 153



## கரும் புலிகள் கையில் தளப்பாதுகாப்பு இறுதிப் போர்முனை!

சுவாரசியங்கள்



சூடான தமிழகம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

கபில்தேவ் பாய்ச்சல்

மைக்டைசன் மீண்டும் சிறையா?

## மனிஷாவின் மயக்கம்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## முதற்படி

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

யாழ்ப்பாணத்தில்
மக்களுடன் மிகவும் திருப்திகரமாக
படையினர் நடந்துகொள்கின்றனர்,
என்பது முரசுக்கு
கிடைத்துள்ள தகவல்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு
படையினர் நன்கு உதவுகின்றனர்;
தாமாக வலியச் சென்று
உதவி புரிகின்றனர்
என்றெல்லாம் அறிய முடிகிறது.

மக்களை மதிப்பது,
மக்களுக்கு உதவுவது
என்பவை வரவேற்கப்பட வேண்டியதே!

கடந்த காலத்தில்
இனப்பிரச்சனை தீவிரமடைந்தமைக்கு
நீரூற்றியவர்கள் அரசியல்வாதிகள்.

இனப்பிரச்சனைத் தீர்விற்கும்
தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பிற்கும்
ஆயுதம் ஏந்துவதே வழி என்னும்
சிந்தனை தோன்ற
நெய்யூற்றியதில்
படையினருக்கும் பங்குண்டு!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற
உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில்
பொலிசார்
நடத்திய வன்முறை
ஆயுதப் போராட்ட சிந்தனைக்கு
போடப்பட்ட விதைகளில் ஒன்று!

தமிழ் பேசும் மக்களுக்கு
பாதுகாப்பு படையினர் மீது
நம்பிக்கையில்லாமல் போன நிலையில்
ஆயுதப் போராட்ட அமைப்புகளுக்கு
வரவேற்பும்-வலுவும் கிடைத்தன!

சுயநல அரசியல்வாதிகளால்
வளர்க்கப்பட்ட இனப்பிரச்சனையும்,
ஆயுதப் படையினரின்
வரம்புமீறிய நடவடிக்கைகளும்
ஏற்படுத்திய விளைச்சல்தான்
இன்றைய யுத்தம்!

அதனை உணர்ந்து
அணுகுமுறைகள் மாற்றப்படுமானால்
வரவேற்கத் தக்க மாற்றங்களுக்கு
வழிகோல முடியும்!

புதிய இராணுவத் தளபதி
இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு
என்பதை வலியுறுத்தியுள்ளார்.
இராணுவவாதக் கண்ணோட்டமில்லாத
அவரது கருத்தை வரவேற்கலாம்!

ஆனால், மக்களைப் பொறுத்தவரை
இராணுவத் தலைமையில் உள்ளவர்களது
கருத்துக்களைவிட
களத்தில் உள்ள படையினரின்
மனப்போக்குத்தான் முக்கியம்!

அவர்கள் தம்மோடு நடந்துகொள்ளும்
முறைகளில் இருந்துதான்
மக்களின் மதிப்பீடுகள்
உருவாக்கம் பெறுகின்றன.

உதாரணமாக,
தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து
வரும் கடிதங்களில்
படையினர் தொடர்பான
நல்லபிப்பிராயங்கள் காணப்படுகின்றன.

ஆனால், கவனிக்க வேண்டிய
முக்கிய விடயம் யாதெனில்,
தற்போது யாழ்ப்பாணத்தில்
ஓரளவு அமைதி நிலவுகிறது.

இந்த அமைதியை
துப்பாக்கிச் சத்தங்கள்
உடைத்துப் போடும் போது
படையினர் எவ்வாறு தமது
அணுகுமுறைகளை மேற்கொள்வர்?
அப்போதுதான்
நிதானம் தேவை!

மாறாக-முன்னர் போல
புலிகள் மீதான கோபத்தை
மக்களை நோக்கி திருப்பினால்
'பழைய குருடி கதவைத் திறவடி.'
என்ற கதையாகிவிடும்.

இப்போது தாமும்
விரும்பி அழைக்கும் மக்களை
வருந்தச் செய்யாத வகையில்-
நெருக்கடி வேளைகளிலும்
படையினரின் அணுகுமுறைகள்
அமைவதுதான் முக்கியமானது!

கடந்த கால அனுபவங்களிலிருந்து
நல்லதை கற்றுக் கொள்ளவும்
தவறானவற்றை விட்டுத் தள்ளவும்
முன்வரவேண்டிய யாவரும்
முன்வந்தால்-பிரச்சனைகள் தீர
அதுவே முதற்படியாகிவிடும்!

❑❑

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
ஆசிரியர்

## ஆசை-பேராசை

சமூகவாழ்வில் மானுடராய்ப் பிறந்தவர்கள், மாக்களாய் வாழாமல் மக்களாய் வாழ சில நற்குணங்களும் நற்பண்புகளும் இருக்க வேண்டும் என்பது யாவரும் அறிந்ததே.

அன்பு, நம்பிக்கை, உண்மை, நேர்மை, சாந்தம், அடக்கம், பொறுமை, போதும் என்னும் மனம், கருணை, கண்ணியம், கட்டுப்பாடு போன்றவை. இவ்வாறான நற்பண்புகளை மக்கள் மறந்து விடும் போதுதான் நம் நாட்டில் இன்று நிகழ்வதைப் போன்ற மனதுக்கு வேதனை தரும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இவை எல்லாவற்றிற்கும் மனிதனின் பேராசைதான் காரணமோ என்று எண்ணவேண்டியுள்ளது. யாத்திராகமமே இவ்வுண்மையைக் கூறுகின்றது. மனிதனின் குணமறிந்து அதில் கீழ் கண்டவாறு கூறுகின்றது: (யாத்திராகமம் 20:13,17) கொலை, களவு பற்றி சொல்லிவிட்டு-

"பிறருடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக, பிறருடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், பின்னும் பிறருடைய யாதொன்றையும் இச்சியாதிப்பாயாக" (யாத் 20:17)

கீழ்காணும் உண்மையையும் சிந்தித்துப் பார்ப்போம். "நியாய விசாரணையிலும், அளவிலும், நிறையிலும், படியிலும் அநியாயஞ் செய்யாதிருப்பீர்களாக"-(லேவி 19:35) பிறருக்காக வியாபாரம் செய்வோர் நேர்மையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதை நியாயமாகக் கூறுகிறது இக்கூற்று. இதற்கு விரோதமான நடவடிக்கைகளை நாம் இன்று ஏராளமாகக் காண்கிறோம் இல்லையா? மேலும்- யோவானிடம் ஒரு போர்ச்சேவகன் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டதற்கு, "நீங்கள் ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும் பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும், உங்கள் சம்பளமே போதும் என்றிருங்கள்" (லூக் 3:14) இன்றைய சூழலுக்கு நன்று பொருந்துகின்றதல்லவா?

இவைபற்றி சிந்தித்து இயல்பாய் நடப்பது நம் ஒவ்வொருவரின் கடமையல்லவா?

ஏ.பி.வி. கோமஸ்.

## ஆன்மீகம்



## நபிமணியின் நற்பண்புகள்!

* மற்றவர்கள் உரையாடிக் கொண்டிருக்கும்போது அதை முறித்துப் பேசியதில்லை.
* மற்றவர்களின் இரகசியங்களினை அறிய விரும்பவில்லை.
* பிறருடைய பெயர்களைச் சொல்லி அவர்களின் குற்றங்களை வெளியிடவில்லை.
* மற்றவர்களின் மனம் நோகும்படி பேசியதில்லை.
* நபிமணி தமக்குத் தீங்கிழைத்தோருக்கும் தீமைசெய்வதில்லை: அதை மறந்து மன்னித்து விடுவார்கள்.
* அடிமைகளையும், பணியாட்களையும், பெண்களையும், பிராணிகளையும் தம் கைகளால் அடித்ததில்லை.
* மக்கள் மத்தியில் அமரும்பொழுது தம் கால்களை நீட்டிக்கொண்டு அமருவதில்லை.
* தம்மைப் பற்றி மற்றவர்களின் புகழ் வார்த்தைகளை விரும்பியதில்லை.
* யாருடனும் கைகுலுக்கும்போது தம் கையை முன்னதாக எடுத்துக்கொள்வதில்லை.
* தம்மிடம் இருக்கும் பொருளை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்காமல் வீட்டிற்குத் திரும்புவதில்லை. (ஆதாரம்:கிஸஸுன் நபி)

நபியவர்களின் அழகிய வாழ்க்கை வழிமுறைகளினை அறிந்து நடப்பதன் மூலம்தான் ஈருலக வெற்றியும் உள்ளது. எனவே, அவைகளை அறிந்து செயல்பட முயற்சி செய்வோமாக!

எம்.ஏ.எம். மசூத் அஹ்மத்-காத்தான்குடி-03.

## கவிதைப் போட்டி இல.150

### பரிசுக்குரிய கவிதை

**************************

### தொட்டில்

இது-
மரண தேவதையின்
தொட டில்!
விரும்பியோர்
அவளை
உதட்டில் போட்டு
தாலாட்டலாம்!

சு. விநாயகமூர்த்தி- ஹம்டன் லேன், கொழும்பு-06.

### வியப்பால்....

உதட்டிலே
கொடுத்தேன் சரசம்.
வியப்பிலே மனிதன்
தந்தது இந்த
ஆசனம்!
நாம் தருவோம்
மரண சாசனம்!

பொ. சிறீலதாதேவி-மட்டு/
மொறக்கொட்டாஞ்சேனை.



### சந்தர்ப்பம்?!

இறந்தபின் பார்க்கமுடியாத
அஸ்தியை; மனிதன்
இறக்குமுன் பார்த்துவிட
இறைவன் தந்த சந்தர்ப்பம்!

ச. மகாலிங்கம்-வெலிமடை குரூப்,
வெலிமடை.

### ஓ.... சிகரட்

நெருப்பிற்கும்
"ஃபில்டருக்கும்"
இடையில் ஆயுளை
கொண்டிருப்பவனே!
உன் சாம்பலுக்கு ஒரு மயானம்
இருக்கிறது....
எங்கள் சனங்களுக்கு
அதுவும் காலி இல்லை!

பாலகமலன்- வவுனியூர்.

### முடிவு

என்னை பற்றவைக்கிறாய்-சாம்பலை
ஆஸ்ட்ரேயில் தட்டிவைக்கிறாய்;
மூச்சில் என்னை ஒட்டிக் கொள்கிறாய்:
முடிவை நீயே தேடிக்கொள்கிறாய்!

எஸ். சந்திரபோஜ்- வத்தளை.

### ஒத்திகை

நாளைய சிதைக்கு
இன்றைய
ஒத்திகை!

என்.சதீஸ்குமார், வவுனியா.

## கவிதைப் போட்டி இல–153



**கவனியுங்கள்** எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.05.1996.

-முகவரி-
கவிதைப் போட்டி இல.153,
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல-1772,
கொழும்பு.

### பரிசு

உதடு முழுக்க
உன் ஞாபகம்.....
அடியே வெள்ளையம்மா!
உனக்காகத்தான்
இந்தக் காதல் வாகனம்!

ம. ஜெஸ்மின்-கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.

### ஒரு நந்தவனம் பாலைவனமாகிறது

நந்தவன வாழ்க்கையதை.
பாலைவன நிலையாக்கும்
நெருப்பு தோட்டாக்களின்,
பிரத்தியேக கழிப்பறை!!

எஸ். ராஜ்கமல்-திஹாரிய.

### ஓய்வு

உயிரைப் பறிக்க வந்த
உனக்குக்கூட
கொஞ்சம் ஓய்வெடுக்க
ஒரு ஆசனம்!

பி. கண்ணன்-சென்.பெனடிக்ட்
மாவத்தை, கொழும்பு-13.

### சுடுகாடு

வீட்டுக்கு வீடு
சுடுகாடு வைத்திருக்கிறார்கள்-
ஆஸ்ட்ரே!

பா. சம்சுதீன்- பிரதானவீதி, புத்தளம்.

## வாசக(ர்)சாலை



அன்பின் முரசே! அரசியல் அரங்கை திரைவிலக்கிக் காட்டும் துல்லியம் உனது தனித்துவம். நிற்க, தமிழக அரசியல் பக்கமும் முரசு தன் பார்வையைத் திருப்பியதற்கு பாராட்டுக்கள். ரஜினியை பற்றிய விமர்சனம் நன்று.

கா. சுதாகர்- கலஹா.

தமிழகத் தேர்தல் காட்சிகளை சுருக்கமாகவும், சுவையாகவும் தந்து அசத்திவிட்டீர். காட்டூன் கணைகள் பிரமாதமாக இருந்தன. பாவம், ஜெயலலிதா! முரசாவது அவரை விட்டுவைக்கக்கூடாதா?

செல்வி. ஏ.சுபத்திரா- கொழும்பு-07.

காதிலை பூ கந்தசாமி இந்த சாத்துச் சாத்துகிறாரே. முரசின் பிரதிகளை தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களுக்கும் அனுப்பிவையுங்கள். காதிலை பூ கந்தசாமியை விடுமுறை எடுக்க வேண்டாம் என்று சொல்லவும்.

ஜெ.ஜெனிபர்- திருகோணமலை.

நாரதருக்கும், இராஜதந்திரியாருக்கும் ஸ்பெசல் பாராட்டுக்கள். இருவரும் போட்டி போட்டுக் கொண்டு விமர்சனப் போர் நடத்துகிறார்கள். இருவரது கண்ணோட்டமும் வேறுபாடாக இருப்பதுபோல எனக்குத் தெரிகிறது. என்ன, உண்மை தானா?

ஆர். விநாயகமூர்த்தி- களுவாஞ்சிக்குடி.

அன்புள்ள ஆசிரியருக்கு.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள தமிழ் மக்களது பிரதிநிதிகள் போன்று கூட்டணியினர் தம்மை நினைக்கிறார்கள். அம்பாறைத் தொகுதியை விட்டுக் கொடுக்கலாமா கூடாதா என்று முடிவெடுப்பதற்கு இவர்கள் யார்? தமிழ் ஈழம் கேட்டவர்கள் தமிழ் நிலத்தை தாரைவார்க்க நினைக்கலாமா? முரசுதான் இடித்துரைக்க வேண்டும்.

கே. மகாலிங்கம்- திருக்கோவில், அம்பாறை.

கார்லோஸ் ஒரு தனிமனிதப் புயல். நாடுகள் மத்தியிலான பனிப்போரில் அவன் ஒரு பகடைக்காய். கதாநாயகனாக இருந்திருக்க வேண்டியவன் வில்லனாக்கப் பட்டுவிட்டானே என்று கவலையாக இருக்கிறது. கார்லோஸ் வில்லன்தான். குசியான வில்லன்.

ஜெ. அப்துல் கரீம்- கல்முனை.

ஐந்து தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டு இருதரப்பையும் போர்நிறுத்தம் கோரியுள்ளன. அதனை முரசு முக்கியத்துவப்படுத்தத் தவறிவிட்டது என்று நினைக்கிறேன். மேலும், தற்போது தேவையானது அரசியல் விவேகமே தவிர தமிழ் கட்சிகள் மத்தியில் போட்டியல்ல. விடுதலைப் புலிகளும் அதனை உணரவேண்டும்.

கே. மகேஸ்வரன்-வவுனியா.

நீ! நீயா! தொடர் அசத்தல்தான். ராஜேந்திரகுமாரின் கைவண்ணம் பளிச்சிடுகிறது. கொலையாளி யார் என்பதை சஸ்பென்சாக நகர்த்தும் விதம் அருமை.

வா. சாந்தகுமார்-கண்டி.

காதிலை பூ கந்தசாமி வாராவாரம் நகைச்சுவை தடவி சொல்லும் கற்பனைகள் சூப்பர். நடக்கமுடியாதவையல்ல அவை என்பதுதான் யதார்த்தம் அதனால் வேதனையோடு சிரிக்கிறோம். வேதனை அரசியலை எண்ணித்தான்.

மீரா எட்வேர்ட்- நீர்கொழும்பு.

நம் காதுகளில் பூவைக்கும் அரசியல்வாதிகளை காதிலை பூ கந்தசாமி கற்பனையால் தோலுரிக்கிறார். பாராட்டுக்கள்.

செல்வி. பானுமதி-நுவரெலியா.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு போர் மூலமாகவே பதில் சொல்ல அரசு நினைப்பது வெற்றியாகாது. நஷ்டம் நாட்டுக்குத்தான். அதனை இராஜதந்திரி சுட்டிக்காட்டியிருப்பது தகும்.

திருமதி லோறன்ஸ் பாக்கியா-கொழும்பு-05.

ரிவிரெச 2 இன் விளைவுகள் முன்கூட்டியே எக்ஸ்ரே ரிப்போர்ட்டில் சுட்டிக்காட்டியதை ஒட்டியதாக இருக்கின்றன. எனினும் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ளோர் தம்மால் வென்றெடுக்கப்பட்டவர்கள் என்ற மனோபாவம் அரசுக்கு ஏற்படுவது தவறானதேயாகும்.

எஸ். நல்லையா-திருகோணமலை.

என் இதயத்தைத் திருடிய தினமுரசே!

உன்னால் அடங்கிவரும் அம்சங்கள் அனைத்தும் ரொம்பப் பிரமாதம்.... அதிலும் மக்சீம் கார்க்கியின் 'தாய்' எனும் தொடர்கதை எல்லோரையும் கவர்ந்து வருகிறது.

ஏ.பர்ஸானா, மஹீந்துரை-கிண்ணியா-04.

காலமறிந்து தகவல் பெட்டியில் ரஜினியை பவனி வரவைத்துவிட்டாய். பாராட்டுக்கள். தி.மு.க. கூட்டணிக்குத்தான் முரசும் ஆதரவு என்று என் நண்பர்கள் சொல்கிறார்கள். பக்க சார்பு வேண்டாம். ஜாக்கிரதை.

ரி. விஜயகுமார்- மாத்தளை.

இல்லத்தில் உள்ள பொருட்களை பராமரிக்கும் யோசனைகளை தரும் லேடீஸ் ஸ்பெஷல் அருமைதான். ஒரு குறை, அழகுக் குறிப்புக்களை குறைத்துவிட்டு, பெண்களின் தன்னம்பிக்கைக்குரிய கருத்துக்களைத் தாருங்கள்.

கமலேஸ்வரி- கொழும்பு-10

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ளவரை பெயர் பதிவு செய்யப்பட முடிந்தவர்கள்:

* செல்வன் தியாகராஜா, நமுனுகல பஜார்.
* சுரேந்திரன் நமசிவாயம், ஹல்தொட்ட.
* பரீட், எம். றிஸ்வான், மடவளையூர்.
* எஸ்.என்.எம். தாஹா, கிண்ணியா.
* ராஜன் சுமதி, நீர்கொழும்பு.
* ஏ.எச்.ராஸீன் மொகமட், ஏத்தாலை.
* என்.எஸ்.பாபு, ராகல.
* ஆர். ரம்சின், நாவலப்பிட்டி.
* எம்.எஸ். மனோகரன், அப்புத்தளை.
* ச. விக்கினேஸ்வரன், துறைநீலாவணை-08.
* செல்வி.ந. கலா, நமுனுகல.
* எஸ். கண்ணன், தச்சன் குளம்.
* ஆறுமுகம் நிலாதேவி, கலஹா.
* என். பஞ்சாட்சரம், கொழும்பு-05.
* எம்.என்.எஃப். ரினோசா, பேருவளை.
* கே. கணேசமூர்த்தி, கண்டி.
* எஸ். கே. டீன், புத்தளம்.
* எஸ். யசோதா, இறக்குவானை.
* முஹமட் ஷாமில், கனேவல்பொல.
* அ. ஜெயந்தி, கொழும்பு-15.
* ப. தீபவதனன், தெகிவளை.
* சி. மோகன், செட்டிகுளம்.
* ஹபீடியா ஹசன், கொழும்பு-2
* எம்.எம். ஜாபிர், மன்னார்.
* எம். ஹரிச்சந்திரன், கொழும்பு-4.
* செல்வன். ஆர். சுரேந்தர், கொழும்பு-12
* பாத்திமா ரிப்தா பாரிஸ், நுவரெலியா.
* றசீட் காசிம், புதிய காத்தான்குடி-03.
* கே. சுதர்சன், செங்கலடி.
* திருமதி. த. தனம், கொழும்பு-15.



படிப்பகம்

www.padippakam.com

# கரும்புலிகளிடம் பிரபாவின் பாதுகாப்பு!

# தலைமைப்பீடப் பாதுகாப்பில் புலிகள் தீவிரம்

## மூன்றாவது மத்தியஸ்தத்தில் சிக்கல்

விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடம் தற்போது நிலைகொண்டுள்ள வன்னித்தளப்பிரதேசத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளை புலிகள் கடுமையாக்கியுள்ளனர். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பாதுகாப்பு கரும்புலிகள் படையணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

### வன்னியில் பாதுகாப்பு

யாழ்-குடாநாட்டில் படையினர் தமது நிலைகளை ஸ்திரப்படுத்திவரும் அதே வேளையில், புலிகளும் வன்னியில் தமது தலைமைப்பீடப் பாதுகாப்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

அண்மையில் பத்திரிகைகளுக்கு கருத்துத் தெரிவித்த இராணுவ உயரதிகாரி ஜானக பெரேரா, புலிகள் வன்னிக்காடுகளில் ஒன்று திரண்டு கெரில்லா நடவடிக்கைகளுக்கு தயாராவதாகத் தெரிவித்திருந்தார்.

வன்னியின் அடர்ந்த காட்டுப்பகுதிகளுக்குள் தமது தற்காப்பு நிலைகளை புலிகள் பலப்படுத்தி வருகின்றனர். பாதுகாப்பு நடவடிக்கைகளில் கரும்புலிகளே பெரும்பாலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

புலிகளின் தலைவர் பிரபாகரனை பாதுகாக்கும் விதமான பாதுகாப்பு வேலிகளாக கரும்புலிகள் படையணியே செயற்படும் என்று தகவல்கள் கூறுகின்றன.

கரும்புலிகள் இயக்கத்தின் பிரதான முகாமும் வன்னிக்காட்டுப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

தமது தலைமைப் பீடத்தை பாதுகாப்பதே உடனடியான முக்கிய கடமை என்று புலிகளது வட பகுதி தளபதிகள் கருத்துக் கொண்டுள்ளனர்.

இந்திய அமைதிப்படை இங்கு நிலைகொண்டிருந்த காலகட்டத்தில் வன்னிக் காட்டுப் பகுதியில்தான் பிரபாகரன் தங்கியிருந்தார்.

அக்காலகட்டத்தில் வன்னி தளப்பிரதேச பாதுகாப்பு புலிகளது பிரதித்தலைவர் மாத்தையாவின் பொறுப்பில் இருந்தது. தற்போது புலிகளது இராணுவ துணைத்தளபதி பால்ராஜின் பொறுப்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### கண்டனம்

இதேவேளையில் புலிகளின் உத்தியோக பூர்வ வெளியீடான விடுதலைப் புலிகள் பத்திரிகையில், இலங்கை அரசின் கொள்கைக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'அரசியல் ரீதியான தீர்வு முயற்சிகளுக்கு இராணுவ நடவடிக்கைகள் முற்றுப்புள்ளி வைத்துவிடும். மூன்றாம் தரப்பு சமர சத்திற்கும் குந்தகமாகிவிடும்' என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக புலிகள் தற்போது பரவலாகப் பேசத் தொடங்கியுள்ளனர். புலிகளுக்கு சார்பான அமைப்புக்கள் மற்றும் பிரமுகர்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை வெளிநாடுகளில் வலியுறுத்தி வருகின்றனர். தன்னிச்சையாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் போன்றே முயற்சிகள் செய்யப்படுகின்றன.

அதேவேளையில் புலிகளது சர்வதேச தலைமையகம் உத்தியோகபூர்வமாகக் கருத்துத் தெரிவிக்கும்போது, "யாழ் குடாநாட்டில் படையினர் நிலை கொண்டுள்ளவரை பேச்சுக்கு சாத்தியமில்லை. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஏற்படவேண்டுமானால் அதற்கான சூழல் உருவாக வேண்டும்" என்று தெரிவித்துள்ளது.

புலிகளின் கருத்துத் தொடர்பாக அரசியல் அவதானிகள் கூறும்போது, 'பேச்சுவார்த்தை ஒன்று ஆரம்பிக்கப்படவேண்டுமானால் இரு தரப்புக்களும் தற்போது உள்ள நிலையில் இருந்து கொண்டுதான் பேச்சு நடத்தவேண்டி இருக்கும். இரு தரப்பில் எந்தவொரு தரப்பும் தமது நிலைகளை விட்டுக்கொடுத்துவிட்டு பேச்சில் ஈடுபடுமாறு மத்தியஸ்தம் வகிப்பவர்கள் கோரமுடியாது

பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட பின்னர்தான் அவை தொடர்பாக பேச முடியும். இரு தரப்பும் முன் நிபந்தனைகளை விதிக்காமல் பேச உடன்பட்டால் மட்டுமே சர்வதேச மத்தியஸ்தம் ஏற்படலாம்' என்று தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், இந்தியா தவிர்ந்த வேறொரு நாட்டை மத்தியஸ்தம் வகிக்குமாறு புலிகள் கோரினால் புதிய அரசுடனும் பகைப்பதாகிவிடும் என்றும் கூறப்படுகிறது.

### இந்திய அரசியல்

"இலங்கைத் தமிழர் பிரச்சனைக்கு புதுடில்லி உதவ வேண்டும். அதற்கான முயற்சி எடுக்கப்படும்" என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி கூறியுள்ளார்.

இந்நிலையில் இந்தியாவை ஒதுக்கிவிட்டு வேறு ஒரு நாட்டின் மத்தியஸ்தத்தை கோருவது தமிழக அரசின் எதிர்ப்பையும் சம்பாதிப்பதாகிவிடும். எனவே-மூன்றாவது மத்தியஸ்தம் தொடர்பாக எந்தவொரு நாட்டையும் குறிப்பிட்டுப் பேசுவது புலிகளது வெளிநாட்டுக்கிளைகளுக்கு சிரமமாகியுள்ளது.

தமிழ்நாட்டில் தி.மு.க.அணிக்கும், அதன் தோழமைக் கட்சிகளுக்கும் 39 பாராளுமன்ற ஆசனங்கள் உள்ளன.

இந்நிலையில் புதிய இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சனை தொடர்பாக முன்புபோல மௌனம் அனுஷ்டிக்க முடியாது என்று அரசியல் அவதானிகள் பலர் ஒரே கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் தமிழ் கட்சிகளுக்கு முக்கிய பாத்திரம் இருப்பது போலவே, இந்திய பாராளுமன்றத்திலும் இம்முறை தி.மு.க. கூட்டணிக்கு தீர்க்கமான பாத்திரம் வகிக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

## யாரென்று பாருங்கள்!

யார் இந்த மூன்று பேரும்? கூர்ந்து பாருங்கள்! முரசின் மூன்றாம் பக்கத்தில் இடம்பெறுமளவுக்கு முக்கியத்துவமுள்ள இவர்கள் வேறு யாராக இருக்கும்? சிறு பையனாக இருப்பவர்தான் இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி. அவரோடு இருப்பவர்கள்தான் கலைஞர் என்ற சுறுசுறுப்பான தமிழ் தேனியை பெற்றெடுத்த முத்துவேலரும், தாயார் அஞ்சுகமும்.

தி.மு.க. என்றால் என்ன என்பதற்கு மதுரை மாநாட்டில் எம்.ஜி.ஆர். சொன்ன விளக்கம் புதுமையானது. அப்போது தி.மு.க. பொருளாளராக இருந்தார் எம்.ஜி.ஆர்.

கலைஞர் கருணாநிதி பிறந்தது திருக்குவளை என்னும் ஊரில். தந்தை பெயர் முத்துவேலர். அதனை வைத்து எம்.ஜி.ஆர் சொன்னார், "தி.மு.க. என்றால் திருக்குவளை முத்துவேலர் கருணாநிதி என்று அர்த்தம். கலைஞரே தி.மு.க.வாக இருக்கிறார்," என்றார் எம்.ஜி.ஆர்.

தமிழக முதல்வர் கலைஞருக்கும் புதிய அரசுக்கும் முரசின் வாசகர்கள் சார்பாக இனிய வாழ்த்துக்கள்.



## மட்டக்களப்பு கொதிக்கிறது!

(ஏறாவூர் நிருபர்)

சமீப நாட்களாக மட்டக்களப்பில் அதிகளவான உஷ்ணம் உணரப் பட்டு வருகிறது. முற்பகல் பத்து மணிக்கும் பிற்பகல் 3 மணிக்குமிடையில் வெளியில் எங்குமே செல்ல முடியாமல் தவிக்க வேண்டியுள்ளது.

அதிகரித்த வியர்வையும் ஒரு வித அழர்ச்சி, மயக்கம் என்பன அனல் கக்கும் வெயிலின் தாக்கத்தினால் ஏற்படுகிறது.

மட்டக்களப்பு வாவி உட்பட மேட்டு நிலக் கிணறுகள் யாவும் வற்றிக் காணப்படுகின்றன.

குறித்த அனல் வெப்ப வேளையின் போதே இங்கு மின் வெட்டு அமுல் செய்யப்படுவதனால் காலை பத்துமணிக்கு மேல் காரியாலயங்களில் பணியில் ஈடுபடமுடியாதுள்ளது. மட்டக்களப்பில் அளவுக்கதிகமான மின்வெட்டு பலவேளைகளில் அமுல் செய்யப்படுவதுண்டு.

முன்னறிவித்தலின்றி திடீர் திடீரென மின்வெட்டு இடம் பெறுவதால் கம்பியூட்டர் மூலம் முன்னரே செய்யப்பட்ட அனைத்து வேலைகளும் இல்லாமற் போய்விடுகின்றன.

●—(ஏறாவூர் நிருபர்)

## யாழ்-குடாநாட்டில் தமிழ் கட்சிகளின் பிரசன்னம்!

## புலிகளின் குற்றச்சாட்டுக்கு மறுப்பு

(நமது நிருபர்)

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்-குடாநாட்டுப் பகுதிகளுக்கு சென்று நிலமையை அறிந்துவர ஈ.பி.டி.பி. ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈரோஸ், புளொட் ஆகிய அமைப்புக்கள் தங்கள் பிரதிநிதிகளை அனுப்ப உள்ளன.

இதேவேளை ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா பா.உ. தலைமையில் அக்கட்சியினர் ஜனாதிபதி சந்திரிக்காவை சந்தித்து வடபகுதி நிலவரம் குறித்து பேச்சு நடத்தினார்கள்.

பாதுகாப்புக் காரணங்களின் நிமித்தமே எந்தவொரு தமிழ் கட்சி உறுப்பினர்களையும் யாழ் குடாநாட்டுக்கு அழைத்துச் செல்லவில்லை. பாதுகாப்பு ஏற்பாடுகள் பூர்த்தியான பின்னர் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் யாழ் செல்ல முடியும், என்று ஜனாதிபதி தெரிவித்ததாக ஈ.பி.டி.பி. கூறியுள்ளது.

"யாழ் குடாநாட்டில் உள்ள மக்களது நிலை தொடர்பாக அரசாங்கம் கூறும் செய்திகளை மட்டுமே நாம் அறியக் கூடியதாக இருக்கிறது. தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் சென்றுள்ள மக்களின் அன்றாடத் தேவைகள் எந்தளவுக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பவை தொடர்பாக நேரில் கண்டறிந்தால் மட்டுமே நாம் திருப்தி கொள்ள முடியும்" என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தார் டக்ளஸ் தேவானந்தா.

"யாழ்-குடாநாட்டில் உள்ள மக்களது உறவினர்கள் கொழும்பில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் நம்முடன் தொடர்பு கொள்கிறார்கள். தமது உறவினர்களது நிலை தொடர்பாக அறிய விரும்புகிறார்கள். ஏனைய தமிழ் கட்சிகளுக்கும் இதே நிலைதான் இருக்கிறது. அதனால் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் யாழ் சென்று நிலமையை அறிந்து வர வேண்டியது அவசியமாகும். வேறு போக்குவரத்துக்கள் இல்லாத நிலையில் அரசாங்கம்தான் போக்குவரத்து வசதியை அவர்களுக்கு செய்து கொடுக்க வேண்டும்" என்று ஈ.பி.டி.பி. ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சூரியக்கதிர் 2 இராணுவ நடவடிக்கையில் தமிழ் கட்சிகள் படையினருக்கு உதவியதாக இலண்டனில் புலிகள் குற்றம் சாட்டியிருந்தனர். அதனை சகல தமிழ் கட்சிகளும் திட்டவட்டமாக மறுத்துள்ளன.

முரசுக்கு கிடைத்த தகவலின்படி, கிழக்கில் மட்டுமே சில தமிழ் கட்சிகள் படையினரின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைத்து வருகின்றன. யாழ் குடாநாட்டில் சூரியக்கதிர் 1, சூரியக்கதிர் 2 நடவடிக்கைகளுக்கு தமிழ் கட்சிகளின் உதவி எதுவும் பெறப்படவில்லை.

## ஆறுமுகம் தொண்டமானுக்கு எதிராக பிரேரணை

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எஸ்.தொண்டமானின் பேரன் திரு ஆறுமுகம் தொண்டமான் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்படவிருக்கிறது. சிறிமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய (லலித்) முன்னணியே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவரப் போவதாக 'சண்டே ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

இ.தொ.காவின் வேலை நிறுத்தத்தினால் நாட்டின் தேசிய பொருளாதாரம் முடங்கியது. நாளொன்றுக்கு 50 கோடி ரூபா வரையிலான நட்டம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. அதனால்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவர தாம் யோசிப்பதாக டி.யூ.என்.எல்.எஃப் தெரிவித்துள்ளது

## கவிஞரின் மகளுக்குப் புலிகள் தண்டனை!

பிரபல கவிஞராக விளங்கிய காலஞ்சென்ற சோமலிங்கம் அவர்களின் மகளான வாணி (30)க்கு புலிகள் மரண தண்டனை வழங்கினர்.

கடந்த 22.02.96 அன்று புலிகள் இவரை விசாரணைக்கென அழைத்துச் சென்றிருந்தனர். அவர் கொல்லப்படும்வரை புலிகளின் பிடியிலேயே விசாரணையில் இருந்து வந்தார். 10.05.96 அன்று வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்திற்குச் சமீபமாக அவரைச் சுட்டு சடலத்தையும் அவரது உடுப்புப் பொதியையும் விட்டுச் சென்றனர். சடலத்தினருகே "காட்டிக் கொடுப்போருக்கு இதுதான் தண்டனை" என்று பதாகையும் காணப்பட்டது.

இவர் புலிகளால் பிடித்துச் செல்லப்படும் வரை மட்டக்களப்பு பொது மருத்துவமனையில் இருதய ரேகைப் பதிவாளராகப் (ECG) பணியாற்றினார்.

## உரித்த வாழைப்பழமும் சின்னமானது

மொடக்குறிச்சி சட்டசபைத் தேர்தலுக்கு சுயேச்சைகளுக்காக ஒதுக்கப்பட்ட சின்னங்களில் சில:

நோயாளி, அலைகள், சிகரெட், ஃபீடிங் போத்தல், பேண்ட், ட்ரவுசர், ஜாக்கெட், ஃபிரொக், மேக்ஸி, ஸ்கேர்ட், சேர்ட், பை, பனியன், ஸ்வெட்டர், கிளவுஸ், எலும்பு, செய்தித்தாள், இதய வடிவில் குறுக்கே அம்பு, டூத் பிரஷ், ஜீப், கார், ஹெலிகொப்டர், கேபிள்கார், ட்ரக், ஹைட்ரோலிக்வான், ரொப்லெஸ் ட்ரக், ஸ்பேட், டைமன், ஆட்டின், கிளாவர், ரேசர், கத்தி, பூண்டு, இஞ்சி, கரட், பச்சைப்பட்டாணி, முட்டைக்கோவா, பேரிக்காய், அன்னாசி, திராட்சை, பூண்டுசெடி, உரித்த வாழைப்பழம்.

பெருந்தொகையான சுயேச்சை வேட்பாளர்கள் போட்டியிட்டதால்தான் இவ்வாறான சின்னங்களையும் ஒதுக்கவேண்டி ஏற்பட்டது.

## வழிமறிக்கப்படும் பயணிகளின் பஸ்கள்!

## வாயைத் திறவாத பாராளுமன்ற உறுப்பினர்கள்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு, வாழைச்சேனை, கல்முனைப் பகுதிகளில் பெரும் போக்குவரத்துச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. நாளாந்தம் பல அலுவல்களுக்காகச் செல்லும் ஆயிரக்கணக்கான பயணிகள் தவிக்கின்றனர். முண்டியடித்துக் கொண்டு எவ்வாறோ பயணம் செய்தால் அது பெரும் சாதனையான செயலாகும். குறிப்பாக நோயாளிகள், மாணவர்கள், உத்தியோகத்தர்கள் போன்றோரின் பாடு பெரும் திண்டாட்டமாக உள்ளது.

இப்பகுதி பஸ் டிப்போக்களிலுள்ள புதிய பல பஸ்களை படையினர் எடுத்துச் சென்றுள்ளனர். அதேவேளை சேவையில் ஈடுபடும் ஒரு சில பழைய பஸ்களையும் தேடிப்பிடித்துப் படையினர் கொண்டு செல்கின்றனர். கண்ட இடத்தில் பயணிகளை இறக்கி விட்டு பஸ்களை எடுத்துச் செல்வது சம்பந்தமாகவோ, மட்டக்களப்புப் போக்குவரத்தில் ஏற்படும் சொல்லொண்ணாத் துயரங்கள் சம்பந்தமாகவோ மட்டக்களப்பின் தமிழ்-முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதுவித கவனமும் எடுத்ததாகத் தெரியவில்லை.

சமீபத்தில் மட்டக்களப்பு பெரியபாலத்தடியில் பயணிகளின் பஸ்களைப் படையினர் எடுத்துக் கொண்டு நின்றனர். அப்போது வாழைச்சேனையிலிருந்து வந்து கொண்டிருந்த பஸ் சாரதி, இச்சம்பவத்தைக் கேள்வியுற்றதும் பயணிகளை சின்ன ஆஸ்பத்திரிச் சந்தியில் அவசர அவசரமாக இறக்கி விட்டு படையினரின் கண்ணில் படாமல் பஸ்ஸைக் கொண்டு மறைந்தார். பயணிகளுக்காக பஸ்சைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தினாலேயே சாரதி இவ்வாறு செய்தார்.

இப்பொழுது மட்டக்களப்பிலிருந்து உள்ளூர்களுக்கும் வெளியூர்களுக்கும் நடத்தப்பட்ட பல சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. நிலைமை இவ்விதம் நீடித்தால் நிருவாக ஸ்தம்பிதம் ஏற்படலாமென அஞ்சப்படுகிறது.

இதனிடையே சேவையிலீடுபட்ட கூட்டுறவுச் சங்க மற்றும் இ.போ.ச. பஸ்களைப் புலிகளும் வழிமறித்து பயணிகளை இறக்கி விட்டு பஸ்களை எடுத்துச் சென்று விடுகின்றனர். மட்டக்களப்பில் இரு பகுதியினராலும் பயணிகளின் பஸ் சேவைக்கு பெரும் தடங்கல் ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்புக்கான புகையிரத சேவைக்கும் புலிகளின் அச்சுறுத்தல் தொடர்ந்து இருந்து வருகிறது.

## தொண்டா கொடுத்த உத்தரவாதம்!

## இழுபட்டுச் செல்லும் நம்பிக்கையில்லா பிரேரணை

அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்காவுக்கு எதிராக கொண்டுவரவிருந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை இ.தொ.கா. கைவிடவில்லை; தள்ளிவைத்திருக்கிறது, என்று இ.தொ.கா. வட்டாரங்கள் கூறியுள்ளன.

நம்பிக்கையில்லாப் பிரேரணையை விலக்கிக் கொள்வதாக அறிவிக்காமல், அதனை எப்போது விரும்பினாலும் கொண்டு வரலாம் என்பதுபோல அரசை மிரட்டுகிறது இ.தொ.கா. என்று அரசாங்க கட்சியினர் சிலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

"முன்வைத்துள்ள கோரிக்கைகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்தை தூண்ட வேண்டியுள்ளது. அதனால்தான் நம்பிக்கையில்லா பிரேரணையை வாபஸ் வாங்கிக் கொள்வதாக இ.தொ.கா. அறிவிக்கவில்லை" என்று இ.தொ.கா. வட்டாரங்கள் கூறியுள்ளன.

இதேவேளையில் கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், "நம்பிக்கையில்லாப் பிரேரணையை வாபஸ் பெறுவதாகவோ, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டாமென்றோ இ.தொ.கா. அறிவிக்கவில்லை. அப்படி அறிவிக்க வேண்டிய தேவையும் இல்லை" என்று அமைச்சர் தொண்டமான் கூறியிருந்தார்.

ஆனால், இ.தொ.கா. பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜன், பாராளுமன்ற செயலாளருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். எதிர்வரும் பாராளுமன்ற கூட்டத்தொடரில் தமது நம்பிக்கை இல்லாப் பிரேரணையை விவாதத்திற்கு எடுக்க வேண்டாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவருவதில்லை என்று இ.தொ.கா. தலைவர் ஜனாதிபதிக்கு உத்தரவாதம் கொடுத்துவிட்டார். அப்படியிருந்தும் நம்பிக்கையில்லா பிரேரணை விடயத்தை தொடர்ந்து செய்திகளில் அடிபட வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.



படிப்பகம்

www.padippakam.com



# அம்மணி! இதுதான் மரண அடி!

மரண அடி என்றால் இதுதான்!

தமிழ்நாட்டில் திருவாளர் பொது ஜனம் ஜெயலலிதா அணிக்கு கொடுத்த அடிதான் மரண அடி.

அளவுக்கு மீறிய தன்னம்பிக்கை நான் என்ற அகங்காரத்தை தந்துவிடும்.

பேரறிஞர் அண்ணா ஒரு முறை சொன்னார்: 'நாம்' என்பது ஜனநாயகம். 'நான்' என்பது சர்வாதிகாரம்.

**ஜெயலலிதா எதிர்ப்பு அலை பத்திரிகையுலகம்-ரஜினி ஆதரவு மூப்பனார் ஆதரவு ஆகியவை இல்லாமல் இந்த மகத்தான வெற்றி சாத்தியமாகியிருக்காது**

'நாம்' என்று சொல்லும் போது நம் உதடுகள்கூட ஒட்டிக்கொள்கின்றன. 'நான்' என்று சொல்லிப்பாருங்கள்- உதடுகள்கூட ஒத்துழைக்க மறுத்துவிடும்.

'நான்' என்ற ஆணவத்தில் தலைகால் தெரியாமல் ஆடினார் அம்மணி.

எம்.ஜி.ஆர். காலத்திலிருந்தே கட்சியை வளர்த்தவர்களை எட்டி உதைத்தார்.

தனக்கு விசுவாசமான தளபதிகளாக விளங்கிய முன்னணித் தலைவர்களை பூச்சியமாக்கினார்.

இறுதியாக, எம்.ஜி.ஆர். என்ற பெயரைக்கூட ஒதுக்கித் தள்ளத் தொடங்கினார்.

தனிநபர் புகழ்பாடுவது தற்கால அரசியலில் வழக்கம்தான். ஆனால் ஜெயலலிதா அளவுக்கு தனிநபர் புகழ் பாடலை தலையசைத்து இரசித்தவர்கள் இருக்க முடியுமா என்பது சந்தேகம்தான்!

அன்னை வேளாங்கன்னி என்றார்கள்; ஆதி பராசக்தி என்றார்கள்.

பூனை கண்ணை மூடிக்கொண்டதுபோல புகழ் போதையில் தன்னிலை மறந்தார். தன்னை வளரவைத்தவர்களைத் துறந்தார்.

அந்தோ பரிதாபம்! தனது தொகுதியில் கூட 'தானைத் தலைவி' யால் தலை நிமிர முடியவில்லை.

ஏறிவந்த ஏணியை எட்டி உதைப்பவர்கள், தாமும் ஒருநாள் தலை குப்புறக் கவிழ்வார்கள் என்பதை தமிழக தேர்தல் முடிவுகளும் திரும்பவும் ஒருமுறை தெட்டத் தெளிவாக்கியுள்ளன.

தமிழக தேர்தல் வரலாற்றில் தி.மு.க. பெற்றுள்ள மகத்தான வெற்றி இது.

இந்த வெற்றிக்கு தி.மு.க. தனித்து உரிமை கோரமுடியாது.

பத்திரிகையுலகம்,
ரஜினி ஆதரவு,
மூப்பனாரின் முடிவு
போன்ற காரணிகளும் மகத்தான வெற்றிக்கு மாபெரும் காரணங்கள்.

ஆனால், முழு முதல் காரணம் யார் என்று கேட்டால், அது ஜெயலலிதாதான்.

ஊழல் புரிந்தது மட்டுமல்ல, அந்த ஊழலை ஊருக்கே வெளிச்சம் போட்டுக் காட்டவும் துணிந்தவர் அவர்.

அதன் வெளிப்பாடுதான் வளர்ப்பு மகன் திருமணம்.

சுருட்டிய சொத்துக்கு கணக்குக் காட்டவில்லையே தவிர, சுருட்டியதற்கான ஆதாரத்தை திருமணப் பகட்டில் தெளிவாகக் காட்டியிருந்தார்.

யோசித்துப் பார்த்தால், அவரது செயல் பைத்தியக்காரத்தனமாகத் தோன்றும்.

ஆனால், அவர் தமிழக மக்களை பைத்தியக்காரர்களாக நினைத்துவிட்டார் என்பதுதான் சரியானது.

தான் என்ன செய்தாலும் புரட்சி என்று பாமரர் நினைப்பர் என்று தப்புக் கணக்குப் போட்டுவிட்டார்.

விளைவு:

வெட்கப்பட்டு, தனிமையில் கிடந்து அழவேண்டியளவுக்கு தூக்கி வீசப்பட்டுள்ளார்.

'காலில் விழுந்தவர்களுக்கு கதி மோட்சம் கொடுப்பவர்' என்று இனிமேல் அவரது கட்சிக்காரர்களே அவரை கௌரவம் செய்ய மாட்டார்கள்.

ஜெயலலிதா தமிழகத்துக்கு எதுவும் பெரிதாக செய்யவில்லையானாலும், தனது தொகுதியான பர்கூருக்கு நிறையச் செய்தார்.

அப்படியிருந்தும் பர்கூர் மக்களே வெறுத்துப்போய் உதைத்திருக்கிறார்கள்.

தெளிவான தீர்ப்பு.

தமிழக மக்கள் வெறும் சினிமாக் கவர்ச்சிகளால் மட்டும் மயங்குபவர்களல்ல.

தேவையான நேரத்தில், தெளிவான முடிவுகளை தெரிவிக்கத் தயங்காதவர்கள் என்பதைக் காட்டிவிட்டார்கள்.

வீழ்ந்தது ஆணவம்.

வென்றது ஜனநாயகம்.

இனி ஆளப் போவோருக்கும் 'தாம் கவனிக்கப்படுகிறோம், தப்புச் செய்தால் தண்டிக்கப்படுவோம்' என்ற எச்சரிக்கை மணியையும் சேர்த்தே அடித்திருக்கிறார்கள் தமிழக வாக்காளர்கள்.

## பிரதேச சபையில் ஊழல்!

1996ம் ஆண்டுக்கான பிரதேச அபிவிருத்தி வேலைக்கென பொது விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான கொந்தராத்து, ஜயா வீதி கிராமோதய சபைத் தலைவரான ஜனாப் நிசாம் மாஸ்டர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி ரூபா 183,000/- ஆகும். சும்மா பெயரளவில் மாத்திரமே அவரது பெயருக்கு இக்கொந்தராத்து கொடுக்கப்பட்டுள்ளது. அதன் வேலைகளைச் செய்வதெல்லாம் பிரதேச சபைத் தலைவரேயாகும். கிடைக்கக்கூடிய லாபம் எல்லாமே தனி நபருக்கே. இப்போ அங்கு எல்லாமே அவர்தான்.

இங்கு மேற்படி விளையாட்டு மைதான அமைப்பு வேலைகளுக்கு பிரதேச சபைக்குச் சொந்தமான டிராக்டர் வேலை செய்வதும், பிரதேச சபையில் மாதாந்த அடிப்படையில் நாட் சம்பளத்திற்குக் கடமையாற்றும் சிற்றூழியர்களை (வீதி துப்புரவு செய்வோர்கள்) முழுமையாகப் பயன்படுத்துவதுமே மன்னிக்க முடியாத குற்றமாகும்.

வேலைக்கென நாளாந்தம் பிரதேச சபையினால் வழங்கப்படும் கூலிகளைப் பெற்றுக்கொண்டு கொந்தராத்து வேலையில் கடமையாற்றும் தொழிலாளர்களுக்கு மேலதிகமாக ஏதாவது கொடுப்பனவுகள் செய்யப்பட்டாலும் வரவேற்கலாம். ஆனால், அதுவுமில்லை. இவ்வாறான முறையற்ற செயற்பாடுகள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது எதிர்க்கட்சிகள் மௌனமாக வாய்மூடி இருப்பது வியப்பாகவுள்ளது!.

புனிதமான முஸ்லிம் மக்களின் ஏகோபித்த நம்பிக்கைக்குரியதான கட்சியால் பொறுப்பு கொடுக்கப்பட்டவர்களின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகளை தலைமைத்துவம் காணத்தவறின் ஏமாறுவது தலைமைத்துவம் மட்டுமல்ல; அப்பாவி முஸ்லிம் மக்களும்தான்.

மூதூர் பிரதேச முன்னேற்றச் சங்கம்.

## சுகாதார அமைச்சு கவனிக்குமா?

செங்கலடியின் மத்தியில் அமைந்திருக்கும் வைத்தியசாலைக்கு தனியான அம்புலன்ஸ் வண்டி இன்மையால் பல நோயாளர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். இரவு வேளையிலும் சரி பகலிலும் சரி இங்கு வரும் மிகவும் கடுமையான நோயாளர்கள் ஏறாவூருக்கு எடுத்து செல்லுமாறு வைத்திய அதிகாரிகளினால் பணிக்கப்படுகின்றனர். அல்லது தொலைபேசி மூலம் அறிவித்தே அம்புலன்ஸ் வண்டி வரவழைக்கப்பட்டு நோயாளர்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

இதனால் நோயாளர்கள் இறக்க வேண்டிய நிலையும் உள்ளது. பல கிராமத்து மக்கள் இவ்வைத்தியசாலையை நம்பி வருகின்றனர். இருப்பினும் நீண்ட நாள் தேவையாக இருக்கும் இந்த தேவையை சுகாதார அமைச்சு நிறைவேற்றியதாக தெரியவில்லை. இனிமேலாவது நடவடிக்கை எடுக்கப்படுமானால், பல பொதுமக்கள் நன்மை அடைவர்.

இ.பத்மசீலன், செங்கலடி.

## முஸ்லீம் விவாகப் பதிவாளர்கள்
### சமாதான நீதவான்களாக நியமனம்

நாட்டில் உள்ள சகல முஸ்லிம் விவாகப் பதிவாளர்களும் சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் கௌரவ ரத்னசிறி விக்ரமநாயக்கா அவர்களின் வேண்டுகோளின் பேரில், இலங்கைத் தீவில் முஸ்லிம் விவாகப் பதிவாளர்களாக கடமைபுரியும் சுமார் 350 க்கும் மேற்பட்ட முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள், பெப்ரவரி மாதத்தில் இருந்து சமாதான நீதவான்களாக செயல்படும் விதத்தில் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை வெளிவந்துள்ளது.

1996 பெப்ரவரி 01-ம் திகதி வியாழக்கிழமை கஸட் இலக்கம். 908/13 -ம் இலக்கம் கொண்ட அதிவிஷேச வர்த்தமானி கஸட் மூலம் இப்பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டு காலமாக அகில இலங்கை முஸ்லிம் விவாகப்பதிவாளர் சங்கம் மேற்படி வேண்டுகோளை முன்னைய அரசிடம் வேண்டிய பொழுதும், இவ்வருடமே இவ்வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ஹாஜி எம்.எல்.எம்.பாருக் தெரிவித்துள்ளார்.

1996 ஜனவரி மாதம் சங்கத்தின் தூதுக் குழுவொன்று உள்நாட்டு அலுவல்கள் பொது நிர்வாக அமைச்சரை பேட்டி கண்டு, முஸ்லிம் விவாகப் பதிவாளர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் முன் வைக்கப்பட்டன. அதன் நிமித்தம் வருடாந்த கொடுப்பனவுகள், சமாதான நீதவான் நியமனம், கச்சேரிகளில் நிலவும் பத்திரங்களின் தட்டுப்பாடு நீங்கியமை குறிப்பிடத்தக்கதாகும்.

அகில இலங்கை முஸ்லிம் விவாகப் பதிவாளர்களின் வருடாந்த மகாநாடு 1996 மே 26ம் திகதி கொழும்பில் உள்ள தெமட்டகொட வீதி பாஷா விலாவில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர் ஹாஜி எம்.எல்.எம்.பாருக், மாநாட்டு உப குழுவின் சார்பில் மௌலவி யூஸுப் நஜ்முத்தீன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

## தமிழில் எடுப்பதில்லை தந்தி!

புத்தளம் மாவட்டத்தில் இயங்கி வரும் அஞ்சல், உப-அஞ்சல் அலுவலகங்களில் தமிழில் தந்தி எடுப்பதில்லை. புத்தளம், கற்பிட்டி, சிலாபம் தவிர்ந்த ஏனைய அஞ்சல், உப-அஞ்சல் அலுவலகங்கள் தமிழில் தந்தி ஏன் எடுப்பதில்லை என்று கேள்வி கேட்டால், 'தமிழ் பேசும் அஞ்சல் அதிபர் இல்லை' என காரணம் காட்டி விடுகிறார்கள்.

தமிழ் பேசும் தபால் ஊழியர்கள் இருக்கிறார்களே! இனிவரும் காலங்களில் தமிழில் தந்தி எடுக்க மாவட்ட அஞ்சல் அதிபர் நடவடிக்கை எடுக்குமாறு மக்களின் சார்பாக முரசு மூலம் வேண்டுகிறேன்.

கொத்தாந்தீவு- யுனூத்.

## பாதையின் அவலநிலை

அக்கரைப்பற்று-அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் புரிவுகளை பிரிக்கும் எல்லை வீதியான வடிச்சல் வீதி பல தசாப்தங்களாக கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

மேற்படி இரு கிராமங்களிலிருந்தும் காலங்காலமாக வெள்ள நீர் வடிந்தோடி, வெறும் மணல் வீதியாகக் காட்சி தரும் இவ்வீதி போக்குவரத்துக்கு லாயக்கற்று சீரழிந்துள்ளது.

அக்கரைப்பற்று பிரதேச செயலகம் அவ்வப்போது கிறவல் போட்டு சில திருத்த வேலைகளைச் செய்தாலும், சட்டவிரோதமாக கடல்மண் ஏற்றுவதற்காக செல்லும் நூற்றுக்கணக்கான உழவு இயந்திரங்களினாலும், கொல்தளத்திலிருந்து இறைச்சி ஏற்றவரும் மாட்டு வண்டிகளினாலும் வெகு சீக்கிரம் உருக்குலைந்து விடுகிறது. எனவே, இவ்வீதியை- வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்று தார் வீதியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களை இப்பகுதி பொதுமக்கள் சார்பாக வேண்டிக்கொள்கிறேன்.

முழுமதி எம். முர்தளா,
அக்கரைப்பற்று.

## பரீட்சைத் திணைக்களத்தை
### சாடும் பரீட்சாத்திகள்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் தராதரப் பத்திரமற்ற தொழில் நுட்பத்திறன் (கைப்பணி) ஆசிரியரை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை கடந்த ஆண்டு 28-1-1995 இல் நாட்டின் பல பாகங்களிலும் நடத்தப்பட்டன.

ஆனால் ஓர் ஆண்டு கடந்தும் இப்பரீட்சைக்கான பெறுபேறுகள் சம்பந்தப்பட்ட பரீட்சாத்திகளுக்கு இதுவரை அனுப்பிவைக்கப்படாத போதிலும் காலதாமதத்திற்கான காரணங்கள் வெகுஜன தொடர்பு சாதனங்கள் மூலம் அறிவிக்கப்படவில்லை.

எனவே, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இப்பரீட்சைக்கான முடிவுகளை இனியும் காலம் தாழ்த்தாது வெளியிட வேண்டுமென பரீட்சாத்திகள் கேட்கின்றனர்.

எம்.சி.கலீல், கல்முனை-05


**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S. மணி**

மூலம் அறிய வாருங்கள்
சந்திரன்
144 2/1, காலி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு 6
T.P : 586218, 078-63611
Fax : 503030

**மெய்ஞான ஜோதிட சிந்தாமணி**

மாதத்தோறும் வெளிவரும் திரு.பி.கே. சாமி அவர்களின் வெளியீடான மெய்ஞான ஜோதிட சிந்தாமணியை பெற முடியாதவர்கள் வருடசந்தா ரூ.240 அனுப்பினால் உங்கள் கை வசம் கிடைக்கப்பெறும். மெய்ஞான ஜோதிட சிந்தாமணி தொடர்பாக விற்பனை பிரதிநிதிகள் உடன் தேவைப்படுகின்றனர். தேவைகளுக்கு

ஆசிரியர்
இல.162, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13.

FM. 99 வானொலியில் திரு. பீ.கே சாமி அவர்களின் ஜாதக ரீதியான-தெட்டத் தெளிவான பலனையொட்டி எண்ணற்ற கேள்வி பதில் வந்து குவிவதால், அவசரமானவர்கள் நேரில் வரவும்.

**ஆயுள் கண்ணாடி ஜாதகம்**

உங்கள் ஜாதக அமைப்பின்படி 9ம் வீட்டில் எந்த கிரகம் நிலை பெற்றுள்ளது. அதன் முன் விளைவு பின் விளைவு எப்படி அமையும்? கணவர் மனைவி எப்படி அமைய வாய்ப்புள்ளது? அத்துடன் மாத வாரி பலனுடன் நீங்கள் எழுதி எடுக்க இந்த பாரத்தை பூர்த்தி செய்து ரூ.1500 மணி ஆடர் செய்தால், பிற ஜோதிடர் உதவியின்றி நீங்கள் உங்கள் வீட்டில் இருந்தபடியே ஜாதகத்தை கண்ணாடி போல் தெரிந்து கொள்ளலாம்.

வெளிநாட்டவர்கள் ரூ.2750 அனுப்பவும்

முழுப்பெயர்-
பிறந்ததிகதி-
நேரம்.................. காலை-மாலை............
பிறந்த மாவட்டம்......................
ஆணா பெண்ணா.........................
தமிழ், ஆங்கிலம், மலையாளம், சமஸ்கிருதம், தெலுங்கு, இந்தி, அரபு எந்த மொழியில் தேவை......................

முகவரி: ஜோதிட மாந்திரிக சக்கரவர்த்தி
டாக்டர் பி.கே. சாமி [J.D.G.A.N.]J.P.
பி.கே. சாமி அஸோஸியட் பிரைவேட் லிமிட்டட்
இல. 162, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13
கொழும்பு தொலை பேசி இல. 01-342463-342464-344831-344832
நுவரெலியா தொலை பேசி இல-052-2508-3093-3336-3570

**"மந்திரயோகி" மாந்திரீக மருத்துவம்**



காதல், திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப்பிரயாணம் வேறு காரியங்களிலும் தடைகளும், காதலர்கள் ஒன்றுசேரமுடியாமை, கணவன்-மனைவி குடும்பப் பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், தீயசக்திகளின் தொல்லைகள் தீவினைகளினால் தீராத உடல்-மனநோய்களும் ஏற்படலாம் இவைகளுக்கு இறைவன் அருளி, முனிவர்கள் கையாண்ட, பர்மமான மருந்து, மந்திர ஐந்திர வசிய தாயத்துக்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ ஆண்-பெண் ஜனராஜ வசியங்கள், பாதுகாப்பு ரட்சைகள், வேறு நன்மையான காரியங்களுக்கு, வேண்டிய மந்திரம் வசியங்கள் செய்துகொள்ள அரசாங்கத்தினால் பதிவுசெய்யப்பட்ட மலையாளம் புகழ் மஹாசக்தி உபாசகர் மந்திரயோகியிடம் வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் சம்பந்தப்பட்டவர்களினதும், தாய் அல்லது தந்தையர்களினதும் பெயர்களுடன் தங்கள் கோரிக்கைகளை எழுதி 10 ரூபா 50 சத முத்திரைகள், 2 பதிவுத்தபாலில் வைத்து அனுப்பி தெய்வீகமருத்துவ ஆலோசனைகளை பதிவுத்தபாலிலும் இறை பரிகாரப்பொருட்களை (வி.பி.பி) பார்சல்களிலும் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றலாம், YOGI.DR.SACKTHYANANTHEBABA என்ற பெயருக்கு விரும்பிய குருதட்சனை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் உடன் கவனிக்கப்படும். விலாசம்:-



YOGI.DR.SACKTHYANANTHEBABA
INDIAN CLINIC, GURUSACKTHY CENTRE
KALLADY-BATTICALOA (P.O)
குருசக்தி நிலையம், கல்லடி-மட்டக்களப்பு.



**மின்சார வேக மலையாள மாந்திரீக சக்தி**

ஆத்மாக்களின் எண்ணங்கள் எண்ணியபடி நிறைவேறினால் மாத்திரமே ஆத்ம திருப்தி அடைகிறார்கள். கேட்டவருக்கு கேட்டவரம் தரும் ஸ்ரீ துர்கா தேவியின் அற்புத அருள் கொண்ட உலக மாந்திரிக சக்கரவர்த்தி திரு.பி.கே.சாமி அவர்களை அணுகினால் கோரிக்கை கொடுக்கும் அன்பர்களுக்கு இத்தனையாம் திகதி இத்தனை மணிக்கு தங்கள் வேலை பூர்த்தியென சான்றிதழ் வழங்கப்படும். அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டதும் வரையறுக்கப்பட்ட தனியார் லிமிடெட் கம்பனி இது ஒன்றேயாகும். எத்தனை யெத்தனையோ வெளிநாட்டவருக்கும் உள்நாட்டவருக்கும் எம்மால் வெற்றிபெற்ற சான்றிதழ்கள் ஆயிரக்கணக்கில் உண்டு. சான்றிதழ்களை நேரில் பார்வையிடலாம். எம்மாதமும் 20 முதல் மாதக் கடைசிவரை கொழும்பு ஸ்ரீதுர்கை தேவஸ்தானத்திலும் இதர நாட்களில் நுவரெலியா ஸ்ரீ துர்கை தேவஸ்தானத்திலும் திரு. சாமி அவர்களை சந்திக்கலாம். உள்நாட்டவர் நேரில் சந்திக்க ஆரம்ப அனுமதி கட்டணம் ரூ.250. வெளிநாட்டவர்கள் பிரச்சினைகளை கூறி பிறந்த திகதி மாதம் வருடம் இவைகளை குறிப்பிட்டு அனுப்பி ஆரம்ப கட்டணமாக ரூ.1000 அனுப்பினால் அவர்கள் வேலைக்குரிய கட்டணமும் எண்ணங்கள் பூர்த்தியாகும் திகதியும் கொண்ட கார்டும் அனுப்பப்படும்.

Dr.பி.கே.சாமி (J.D.G.A.N.)JP
பி.கே.சாமி அஸோஸியட் பிரைவேட் லிமிடெட்
இல.162, மே பீல்ட் ரோட்,
கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13

கொழும்பு தொலைபேசி இல - 01342463-342464-344831-344832
- FAX-0094134264
நுவரெலியா தொலைபேசி இல - 052-2508-3093-3570-3336
- FAX-0094523093

**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHIATRIST)**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி, உங்களை நீங்களே வெற்றி கொள்ள பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்.

இளம் சமுதாயத்தினர் மெலிந்து, சக்திமிழந்து, ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், பீதி, நித்திரையின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்களை மனோதத்துவ சிகிச்சை மூலம் உடனே நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும், 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 11/2 மணித்தியாலத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத்தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம்.

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளைபோதல், குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்கமுடியாத வியாதிக்கும் மருந்து உண்டு.

மே 19 முதல் 28 வரை Dr.P. ARUMUGAM, AHMED TOURIST INN. BANG BANG BULDING NO: 10, RECLAMATION ROAD, (ENTRANCE BANKSHALL ST.,) COLOMBO 11. T.P. 436383, 436390 ஜூன் 3, 4, Dr. முகைதீன் டிஸ்பென்ஸரி, ஓட்டமாவடியிலும், ஜூன் 9, 10, 11 தினங்களில் கல்முனை T.M.M. பாமசியிலும், மற்ற நாட்களில் DR. P. ARUMUGAM No: 50, TISSA WEERASINGAM SQ., BOUNDRY ROAD, BATTICALOAவிலும் சந்திக்கலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# முதலாம் கட்டமும் மூன்றாம் கட்டமும் புலிகள் இழந்த சாதகங்கள்



வடபுலத்தில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் அரசியல், இராணுவ ரீதியில் புலிகளின் எதிர்காலம் தொடர்பான கேள்விகளை எழுப்பியுள்ளன.

யாழ்-குடாநாட்டிலிருந்து 95 வீதமான புலிகளது அணிகள் வன்னி நிலப்பரப்புக்கு தமது நிலையை மாற்றியுள்ளன.

இவ்வாறு யாழ் குடாநாட்டிலிருந்து புலிகளின் அணிகள் வெளியேறியது இது முதற் தடவையல்ல.

இந்திய அமைதிப்படையுடன் போர் நடைபெற்ற காலத்திலும் புலிகளது அணிகள் யாழ் தளப்பிரதேசத்தை விட்டு வன்னிக்கு பின்வாங்கிச் சென்றிருந்தன.

முக்கிய தலைவர்களை பாதுகாப்பது, கெரில்லாப் போருக்கான திட்டங்களையும், உத்தரவுகளையும், விநியோகங்களையும் மேற்கொள்வது போன்றவற்றை வன்னியில் இருந்தே புலிகளது தலைமைப்பீடம் செய்துகொண்டிருந்தது. வன்னித் தளப்பிரதேசத்தில் தலைமைப்பீடத்தை பாதுகாத்து நிற்கக்கூடிய தொகையிலான உறுப்பினர்களை வைத்துக்கொண்டு, ஏனைய அணிகளை நடமாடும் கெரில்லா அணிகளாக புலிகள் மாற்றியிருந்தனர்.

இந்திய அமைதிப்படையின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளுக்குள் மக்களோடு மக்களாக இருந்து, வாய்ப்புக்கு ஏற்ப தாக்குதல்களை தொடுப்பதே நடமாடும் கெரில்லா அணிகளுக்கு இடப்பட்ட கட்டளையாகும்.

இந்திய அமைதிப்படைக்கு எதிரான தாக்குதல்களை தொடுப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், இந்திய அமைதிப்படைக்கு ஆதரவான தனிநபர்களை தீர்த்துக் கட்டும் வேலையையும் புலிகள் மேற்கொண்டனர்.

> "முதலாம் கட்ட ஈழப்போரில் புலிகளுக்கு இருந்த அரசியல், இராணுவ சாதகங்கள் மூன்றாம் கட்டப் போரில் காணாமல் போயுள்ளன. நண்பர்கள் இல்லாத நிலையில் சொந்தப் பலமே ஒரே கதி."

பாடசாலை மாணவர்கள் போல புத்தகங்களுக்குள் கைத்துப்பாக்கிகளை மறைத்துச் சென்று புலிகள் தாக்குதல் நடத்தினார்கள்.

பல்வேறு தந்திரங்களைப் புலிகள் கையாண்டதால் இந்திய அமைதிப்படையினருக்கு சகலர் மீதும் சந்தேகம் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

பாடசாலை மாணவர்களைக்கூட கடும் சந்தேகத்தோடுதான் பார்க்க வேண்டியிருந்தது. பெண்களைக் கண்டால்கூட சந்தேகப்பட வேண்டி ஏற்பட்டது.

எந்த ரூபத்தில், எந்த வழியில் புலிகள் வருவார்கள் என்பதை தீர்மானிக்கவோ, ஊகிக்கவோ முடியாதளவுக்கு புலிகள் தமது ஊடுருவல் உத்திகளை தினமும் மாற்றிக் கொண்டிருந்தார்கள்.

எனவே- ஆரம்பத்தில் பொது மக்களோடு நல்லவிதமாக நடந்துகொள்ள முற்பட்ட இந்திய அமைதிப்படையால், தொடர்ந்து அவ்வாறு நடக்க முடியாதளவுக்கு சூழல் மாறியது.

பரவலான தேடுதல்கள், சந்தேகப் பார்வைகள், கைதுகள் போன்றவை படிப்படியாக இந்தியப் படைக்கும் பொது மக்களுக்கும் இடையே விரிசல்களை தோற்றுவித்தன.

சமாதானம் நிலவும்போது தமது படையினரைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அதிகாரிகளுக்கு சுலபமாக இருக்கும். தாக்குதல்களும், பதட்டமும் நிலவும் சூழ்நிலையில் படையினரின்மீது ஒரு வரையறைக்கு மேல் அழுத்தம் கொடுக்க அதிகாரிகளே விரும்பமாட்டார்கள். படையினருக்கு அதிருப்தி ஏற்பட்டால் அவர்களது நடவடிக்கைகளது வேகத்தை கட்டுப் படுத்துவதாக அமைந்துவிடும் என்று கருதப்படுவதே அதற்கு காரணமாகும்.

அவ்வாறான ஒரு சூழலில்தான் இந்திய அமைதிப்படையில் சில பிரிவுகள் வரம்புமீறி நடந்துகொண்டன. பெண்கள்மீது பாலியல் வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டன.

புலிகளது கெரில்லாத் தாக்குதல்கள் அதிர்ச்சியைக் கொடுத்தபோது, அதற்கெல்லாம் காரணம் மக்கள் கொடுக்கும் ஆதரவுதான் என்ற முடிவுக்கு வந்தனர். விளைவு; புலிகள் மீதான ஆத்திரத்தில் பாதி மக்கள் மீதும் திரும்பியது.

அதனால் என்ன நடந்தது என்றால், இந்தியப் படைமீது புலிகள் அவசரப்பட்டு போர் பிரகடனம் செய்துவிட்டார்கள் என்று கருதியவர்கள்கூட படிப்படியாக இந்தியப் படைமீது நம்பிக்கையிழக்கத் தொடங்கினார்கள்.

புலிகள் எதிர்பார்த்தது அதனைத்தான்.

கெரில்லா போர் முறையில் இரண்டு முக்கிய நோக்கங்கள் உள்ளடக்கமாக இருப்பதுண்டு.

ஒன்று; எதிரி மீது தாக்குதல் நடத்துவது.

இரண்டு; மக்களை எதிரிக்கு எதிராக அணிதிரட்டுவது.

இரண்டாவது நோக்கத்தை முதலாவது நோக்கத்தால் நிறைவு செய்ய முடியும். மக்கள் மத்தியில் வைத்து படையினரைத் தாக்கினால், ஆத்திரமூட்டப்பட்ட படையினர் மக்களைத் தாக்குவார்கள். தாக்கப்படும் மக்கள் கெரில்லாக்களுக்கு ஆதரவானவர்களாக மாறுவார்கள். இதனை 'குவிவுமையத் தத்துவம்' என்று அழைப்பார்கள்.

கியூபா போன்ற நாடுகளில் நடைபெற்ற போராட்டங்களில் இந்த 'குவிவுமையத் தத்துவம்' பிரயோகிக்கப்பட்டது.

ஆயிரம் துண்டுப்பிரசுரங்களும், நூறு பொதுக்கூட்டங்களிலும் எதிரிக்கு எதிராக செய்ய முடியாத பிரசாரத்தை ஒரே ஒரு துப்பாக்கிக் குண்டு செய்துவிடுகிறது என்பது கியூபா புரட்சியாளர்களது கருத்தாக இருந்தது.

மையமாக இருக்கும் கெரில்லாக்களைச் சுற்றி மக்களை திரளவைப்பதே எதிரிக்கு ஆத்திரமூட்டும் தாக்குதல்களின் நோக்கங்களில் ஒன்றாகும்.

இந்திய அமைதிப்படைக்கு எதிரான போரில் குவிவு மையத் தத்துவம் நன்றாக வேலை செய்தது.

ராஜீவ்காந்தியை புலிகள் கொலை செய்தமையைக் கண்டிப்பவர்கள்கூட இந்திய அமைதிப்படைமீது புலிகள் நடத்திய தாக்குதல்களை கண்டிப்பதில்லை. அந்தளவுக்கு இந்திய அமைதிப்படை தனது ஆத்திரங்களையும், வெறுப்பையும் மக்கள் மீது திருப்பியிருந்தது. குறிப்பாக சீக்கிய ரெஜிமெண்ட், கூர்க்காக்களின் ரெஜிமெண்ட் ஆகியவை மக்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதில் முன்னின்றன.

வெறுப்படைந்த மக்கள் புலிகளது அணிகளுக்கு உதவத் தொடங்கினார்கள். வடக்கு-கிழக்கை இந்திய அமைதிப்படை கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோதும், புலிகளது கெரில்லாத் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்கச் சிரமப்படவே செய்தது.

வேறு மொழி, வேறு இனம் என்ற ரீதியில் இந்தியப்படை செய்த ஒவ்வொரு செயலும் 'அந்நியப்படை' என்ற உணர்வையும் ஏற்படுத்தியிருந்தது. அதுவும் இந்தியப்படைக்கு பெரும் பலவீனமாக அமைந்தது.

ஆக, இந்தியப் படையின் அசுர படைபலத்தை இராணுவ, அரசியல் ரீதியில் புலிகள் முகம் கொடுத்ததோடு, தமக்கு ஏற்பட்ட பின்னடைவில் இருந்து மீளவும் முடிந்தது.

இந்தியப் படை வெளியேற்றத்துக்கு மூன்று காரணங்கள் முக்கியமானதாக இருந்தன.

1. புலிகள்-பிரேமதாசா பேச்சுவார்த்தை.

2. இந்தியப்படையின் நடவடிக்கை தொடர்பாக தமிழ் நாட்டில் ஏற்பட்டுவந்த அதிருப்தி.

3. இந்திய ஆட்சி மாற்றம்.

இதில் இந்திய ஆட்சி மாற்றம்தான் மிகத் தீர்மானகரமான பாத்திரம் வகித்தது. தேசிய முன்னணியில் முக்கிய அங்கம் வகித்த தி.மு.க.வும் இந்தியப் படை திரும்பிவர வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

இலங்கையில் யாருக்கிடையில் சமாதானம் ஏற்படுத்த வேண்டும் என்று இந்தியப் படை வந்ததோ, அந்த இரு தரப்புக்களுமே 'போதும் போ' என்று சொன்னதுதான் இந்தியாவுக்கு ஏற்பட்ட தர்ம சங்கடம்.

பிரேமதாசாவுடன் புலிகள் நடத்திய பேச்சுவார்த்தை பல வழிகளில் உதவியது. எப்படியாவது இந்தியப் படையை வெளியேற்ற வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்றார் பிரேமதாசா. அதனால் ஆயுதங்களையும் புலிகளுக்கு கொடுத்து உதவினார்.

தெற்கில் ஜே.வி.பி. கிளர்ச்சியும் புலிகளை நட்பாக வைத்திருக்கும் தேவையை பிரேமதாசாவுக்கு ஏற்படுத்தியிருந்தது.

ஆக, மொத்தத்தில் முதலாம் கட்ட ஈழப்போரில் இலங்கை, இந்திய அரசியல் சூழல்களும், ஆட்சி மாற்றங்களும் புலிகளுக்கு கைகொடுத்து உதவின.

அதனால் உலகின் மிகப் பெரிய இராணுவங்களில் ஒன்றான இந்திய இராணுவத்திடம் பறிகொடுத்த தளப்பிரதேசத்தை புலிகள் மீண்டும் பெற்றுக்கொண்டனர். நெருக்கடியிலிருந்தும் மீண்டனர்.

இப்போது அதே போன்றதொரு நெருக்கடி புலிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இலங்கை அரசின் ஆயுதப்படைகள் புலிகளது பிரதான பகுதியாக இருந்த யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவந்துள்ளன.

இந்தியப் படையை எதிர்கொள்ள புலிகள் மேற்கொண்ட அரசியல் காய்நகர்த்தல்களுக்கு இப்போது வாய்ப்பில்லை.

எதிரிக்கு எதிரி நண்பன் என்ற ரீதியில் வேறொரு சக்தியோடு நட்பை ஏற்படுத்தி இராணுவ ரீதியில் உதவி பெறக்கூடிய நிலையும் புலிகளுக்கில்லை.

இலங்கையில் தெற்கிலும் சரி, இந்தியாவிலும் சரி அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும்கூட புலிகளை முற்று முழுதாக நம்பி கைகொடுக்கக் கூடிய சூழல் காணப்படவில்லை.

எனவே-தமது சொந்த ஆயுத பலம், நிதி பலம், ஆட்பலம் என்ற மூன்றையும் மட்டுமே புலிகள் இம் முறை நம்பியிருக்க வேண்டியுள்ளது.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சிமாற்றமும் புலிகளுக்கு சாதகமானதாக இல்லை.

இந்தியாவில் மத்திய ஆட்சியைப் பொறுத்தவரை காங்கிரஸ் கட்சியைவிட பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வருவதை புலிகள் விரும்பலாம்.

ஆனால், மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் ஜோதிபாசு பிரதமர் பதவிக்கு வந்தால் புலிகள் தொடர்பாக கிட்டத்தட்ட காங்கிரசின் நிலைப்பாட்டையே அவரும் மேற்கொள்வார்.

ராஜீவ் காந்தி கொலை விவகாரத்திற்கு முன்பிருந்தே புலிகளது நிலைப்பாடுகள் தொடர்பாக இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுக்கு நல்லபிப்பிராயம் இருந்ததில்லை.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஜோதிபாசுவும் வரவேற்றிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதுதவிர ஜோதிபாசு பிரதமரானால் காங்கிரஸ் கட்சியின் ஆதரவை அவர் நம்பியிருக்க வேண்டும். அதனால் புலிகள் விடயத்தில் காங்கிரசுக்கு மாறான நிலைப்பாட்டுக்கு அவர் செல்ல முடியாது. வேறு யார் பிரதமரானாலும் அதுதான் நிலை.

இம்முறை தி.மு.க.வும் அதன் கூட்டணிக் கட்சியான தமிழ் மாநிலக் காங்கிரசும் 39 பாராளுமன்ற உறுப்பினர்களை கையில் வைத்துள்ளன. மத்திய ஆட்சியில் இருப்பவர்கள் அவர்களது ஆதரவைச் சார்ந்து இருக்க வேண்டும்.

ஆனால், தி.மு.க.வுக்கும் கலைஞர் கருணாநிதிக்கும் புலிகள் தொடர்பாக எந்தளவுக்கு கசப்பு இருக்கிறது என்பதைவிட, இனிமேல் புலிகளை நம்பும் அளவுக்கு அவர்களது நடவடிக்கைகள் அமையப்போவதில்லை என்பதே உண்மை.

இலங்கைத் தமிழ் மக்கள் மீது பொதுவான கரிசனை என்றளவில் மட்டுமே தி.மு.க.வின் நிலைப்பாடு இனிமேல் மட்டுப்படுத்தப்படும்.

தமிழ் மாநிலக் காங்கிரஸ் தலைவர் மூப்பனாரைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். அவர் முன்னரே புலிகளை ஆதரிக்கவில்லை. போதாக்குறைக்கு "ராஜீவ் கொலையில் மூப்பனாருக்கு தொடர்பு" என்று ஜெயலலிதா புரளி கிளப்பியிருந்தார்.

ராஜீவ் குடும்பம் மீது பற்றுக்கொண்ட மூப்பனார் புலிகள் தொடர்பாக ஆதரவான நிலைப்பாட்டை ஒருபோதும் மேற்கொள்ளப் போவதில்லை.

எனவே-தமிழக அரசியல் நிலவரமும் மத்திய அரசை புலிகள் தொடர்பாக சாதக நிலைப்பாடு எடுக்குமளவுக்கு தூண்டப்போவதில்லை.

புலிகளை நேரடியாக ஆதரித்து பிரசாரம் செய்தவர் வை.கோபாலசாமி. அவரது பலத்த தோல்வியானது இலங்கைத் தமிழர் பிரச்சனை தமிழ்நாட்டில் புளித்துப்போன கதையாகி விட்டதைத்தான் கோடிட்டுக் காட்டுகிறது.

காரணம், இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் எழுந்த உணர்வு அலையை புலிகளும் சரி, ஏனைய தமிழ் அமைப்புக்களும் சரி முறையாகப் பயன்படுத்தத் தவறிவிட்டன.

இறுதியாக ராஜீவ் கொலை நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

இந்தியப் படையோடு புலிகள் மேற்கொண்ட மோதலை தமிழ்நாட்டிலோ, இந்தியாவிலோ எவருமே மறக்கமுடியாத விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை. மாறாக புலிகள் தொடர்பாக மதிப்பும் வியப்பும் ஏற்பட்டன.

ஆனால், ராஜீவ் கொலை விவகாரம் தமிழக மக்களிடமும், இந்திய மக்களிடம் என்றென்றும் மறக்கமுடியாத தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

மிக முக்கியமாக இந்திய அரசியல்வாதிகள் புலிகளை அருகே அழைக்க பயப்படுமளவுக்கு ராஜீவ் கொலை காரணமானதுதான் புலிகளுக்கு பெரிய பாதகம்.

இவ்வாறான நிலையில் புலிகள் அரசியல், இராணுவ ரீதியில் தனிமையான நிலையை எதிர்நோக்கியுள்ளனர். ஆனால் அதன் பாதிப்பு முழு இலங்கைத் தமிழர்களையும் சேருகிறது என்பதுதான் கவனிக்க வேண்டிய விஷயம்.

புலிகளும் பலவீனமாகி, இலங்கைத் தமிழர்களுக்கு உடனடியாக ஆதரவுக் குரல் கொடுக்கும் தமிழகமும் மௌனமாகிவிட்டால் ஒட்டுமொத்தமாக இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரதும் அரசியல் அபிலாசைகள் பின்னடைவைச் சந்திப்பது தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

இந்நிலையில் ஏனைய தமிழ் கட்சிகள் தமிழக அரசியல் கட்சிகளுடன் சுமுகமான உறவுகளை ஆரம்பிக்க வேண்டியது முக்கியமாகியுள்ளது.

அதன் மூலமாக தமிழக மக்களது கவனத்தை இலங்கைத் தமிழர்கள்மீது திருப்புவதற்கு முயற்சி எடுக்கப்பட வேண்டும்.

ஐந்து தமிழ் கட்சிகள் சார்பாக தமிழக முதல்வருக்கு அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தியை அரசியல் ரீதியில் விவேகமான நடவடிக்கையாகக் கொள்ளலாம்.

1989இல் நடைபெற்ற தேர்தலில் மு.கருணாநிதி வெற்றிபெற்றபோது பிரபா

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

கரனிடமிருந்து உடனடியாக ஒரு வாழ்த்துச் செய்தி பறந்தது.

'உலகத் தமிழர்களது தலைவர்' என்று கருணாநிதியை வாழ்த்தியிருந்தார் பிரபாகரன்.

இம்முறை உடனடியாக வாழ்த்து அனுப்புவதில் பிரபாவுக்கும் சங்கடம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. அப்படி ஒரு வாழ்த்தை அனுப்பியிருந்தாலும் அதனைப் பெறுவதற்கு கருணாநிதியும் சங்கடப்பட்டிருப்பார்.

தமிழக அரசியல் நிலவரம் தமக்குச் சாதகமாக மாறுகிறதோ இல்லையோ, வெளிநாடுகளில் இருக்கும் இலங்கைத் தமிழர்கள் மூலமாக அங்குள்ள அரசுகளின் கவனத்தை கவருவதற்கு புலிகள் முயற்சிக்கிறார்கள்.

வெளிநாடொன்று தலையிட்டு போர் நிறுத்தம் ஏற்படுமானால் உடனடி நெருக்கடியில் இருந்து மீளலாம் என்பது புலிகளது எண்ணமாக இருக்கலாம்.

ஆனால், அதற்கான சாத்தியங்கள் எதுவும் உடனடியாகத் தெரியவில்லை.

இந்நிலையில் இந்தியப் படைக்கு எதிராக மேற்கொண்டதுபோல 'குவிவு மைய தத்துவத்தை' புலிகள் பிரயோகிப்பர்.

அதன்மூலம் புலிகள் செய்யக்கூடியதெல்லாம் தமது இருப்பை வெளிப்படுத்துவது மட்டும்தான்.

இனப்பிரச்சனை தீர்வில் புறக்கணிக்க முடியாத தமது பாத்திரத்தை புலிகள் தக்கவைத்துக்கொள்ள முடியும். ஆனால், யாழ் குடாநாட்டில் மீண்டும் புலிகள் தமது கொடியைப் பறக்கவிட கெரில்லாப் போர் முறை மட்டும் போதுமானதல்ல.

இந்தியப் படையை எதிர்நோக்கிய போது அரசியல்ரீதியான சதுரங்கத்திற்கு புலிகளிடம் காய்கள் இருந்தன. நகர்த்தி

## நாரதர்

விளையாட முடிந்தது.

முதலாம் கட்ட ஈழப்போரில் இருந்து மூன்றாம் கட்ட ஈழப் போர் வரையான காலகட்டத்தில் புலிகளது சொந்தப் பலம் உயர்ந்துள்ளது. அணிகள் விரிவாகியுள்ளன. தாக்குதல் பலம் கூடியுமுள்ளது. உலகில் உள்ள தலை சிறந்த கெரில்லா அமைப்பு என்று பார்த்தால் அது புலிகள்தான் என்பதில் ஐயமில்லை.

ஆனால், முதலாம் கட்டப் போரில் புலிகளுக்கு சாதகமாக இருந்த அரசியல் காரணிகள் மூன்றாம் கட்டப்போரில் இல்லாமல் போய்விட்டன. அதுதான் பாதகம்.

எனவே-முழுக்க முழுக்க தமது இராணுவ பலத்தை மட்டும் சார்ந்தே மூன்றாம் கட்ட ஈழப்போரின் தலைவிதியை புலிகள் தீர்மானிக்க வேண்டியுள்ளது.

அதேநேரம், இலங்கை அரசு வெளியுலகில் இருந்து கிடைக்கும் அரசியல், இராணுவ, பொருளாதார உதவிகள் என்ற சாதகங்களை கொண்டுள்ளது.

உள்நாட்டில் குறிப்பாக வடக்கு-கிழக்கில் புலிகள் தமது இருப்பை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டிருந்தாலும், இராணுவ சம பலம் என்ற நிலையை எட்டுவதோ, முன்புபோல வடக்கில் பெரும் நிலப்பரப்பில் தனி ஆட்சி நிர்வாகம் நடத்துவதோ தற்போதைய நிலவரப்படி சாத்தியமல்ல.

புலிகளை எத்தகைய வழிமுறையில் தளப்பிரதேசங்களில் இருந்து பின்வாங்கச் செய்ய முடியும் என்பதை படைத்தரப்பு கண்டுபிடித்துவிட்டது. எனவே நிரந்தர தளப்பிரதேசம் என்று இனிமேல் எதனையும் புலிகள் வைத்திருப்பது கடினமாகலாம்.

ஆனால், தளப்பிரதேசங்களில் நிலை கொண்டுள்ள புலிகளை எதிர் கொள்வதை விட, நடமாடும் கெரில்லாப் போர் முறைக்கு மாறியுள்ள புலிகளை எதிர் கொள்வதுதான் படையினருக்கும் கடினமாக இருக்கும்.

## அதிரடி அய்யாத்துரை



நானே ராணி, நானே மந்திரி எண்டு தமிழ்நாட்டை ஆண்டவரும், அவரை ஆண்டவரும் மூலையில் கிடந்து புலம்பிக்கொண்டிருக்கினம். இடித்துரைக்கவும், எடுத்துரைக்கவும் ஆள் இல்லாத அரசன் விழுந்து போவான் எண்ட ஒப்பற்ற தத்துவத்தை செல்வி மறந்ததுமேன். இன்று செயலிழந்து நிற்பதுமேன்? விழுந்து கும்பிடு போட்ட காக்கைகள் எல்லாம பறந்துகொண்டிருக்குதாம. பாவம் செல்வி பட்டமிழந்தாரே! எனக்கு கண்ணீர் வருகுது. என்ன கண்ணீராய் இருக்கும் எண்டு உங்களுக்குத் தெரியும்தானே.

எங்கள் வானொலியில் வழக்கம்போல செய்தி வாசிப்பில் ஒரு சறுக்கல். 12.05.96 மாலைச் செய்தி வாசித்தவர் தமிழ்நாட்டில் புலிகளை ஆதரித்த ஆட்சி தோல்வி கண்டது எண்டு வாசித்துப் போட்டார். கட்சி என்பதை ஆட்சி எண்டு தவறுதலாக வாசித்துவிட்டாராக்கும். வை.கோபாலசாமி அணி தோல்வி கண்ட விஷயத்தை தென்னிலங்கை சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் தலைப்புச் செய்தியாகப் போட்டு மகிழ்ச்சி தெரிவிச்சிருந்தவை. பாவம், கோபாலசாமி. அவருக்கு தோல்வி வரக் காரணம் ரெண்டு எழுத்தார் அல்ல. மூன்றெழுத்துக்காரர்தான். அதுதானுங்கோ ரஜினி அலை.

அகதிகளாகச் சென்று தமிழ்நாட்டில் இருக்கும் நம் நாட்டு தமிழர்களில் பல நூற்றுக்கணக்கானோருக்கும் வாக்குரிமை இருந்ததாம். அவையும் மு.க.வுக்கு ஆதரவாகத்தான் போட்டவையாம். அதுதான் ரஜினிகாந்த் அப்படிச் சொன்னவரோ? எப்படி? "கலைஞரின் வெற்றி உலகத் தமிழர்களின் வெற்றி" என்று.

வெகுஜனச் சபையில் கூட்டானகட்சி அவசர நிலையை எதிர்த்து வாக்களிப்பது தெரிந்த விஷயம்தானே. தெரியாத விஷயம் ஒன்று சொல்லவோ. சபையின் தேநீர் விடுதியில் இருந்த அதிகாரமுள்ளவர் ஒருவரிடம் சிபாரிசுக்குப் போனாராம் கூட்டான கட்சி பிரதிநிதி. அதிகாரமுள்ள அவர் கேட்டாராம், "எதிர்த்து வாக்கும் போடுகிறீர்கள். பின்னர் வாய்ப்புக்களும் கேக்கிறியள். நியாயமோ?" உடனே அசடு வழியச் சிரித்த பிரதிநிதி சொன்னாராம், "ஹி ஹி ஹி, அவங்கள் அல்லோ எங்கே எண்டு பார்த்துக் கொண்டிருக்கிறாங்கள். அதுக்காகத் தான் பயப்படவேண்டி கிடக்கு."

கூட்டான கட்சி பிரதிநிதிகளுக்கு குறைந்தவிலையில் வாகனங்கள் கொடுக்கப்பட்டது. சகல வெகுஜனப் பிரதிநிதிகளுக்கும் கிடைத்ததுதானே எண்டு நீங்கள் கேட்பியள். கிடைச்சதுதான். ஆனால் பாருங்கோ கூட்டான கட்சியினர் தமது வாகனங்களை பத்திரமாகப் பூட்டி வைச்சுப் போட்டு அதிகார மட்டத்தினரிடம் வாகனங்களை இரவல் வாங்கி ஓடித்திரியினம். இதுவும் ஒரு சாணக்கியம் தானோ? இருக்கும், யார் கண்டது.

யாழுக்கு தம்மையும் செல்ல விடச்சொல்லி தமிழ் கட்சிகள் மேலிடத்துக்கு கடிதங்கள் போடுகினம். இது தெரியாமல் ரெண்டு எழுத்துக்காரர் தமிழ் கட்சிகளும் சேர்ந்துதான் பிடிச்சவை எண்டு சொல்லிக்கொண்டிருக்கினம். தமிழ் கட்சி பிரமுகர் ஒருவர் என்ன சொன்னவர் தெரியுமோ, "காய்க்காத மரத்துக்கும் கல்லெறி விழும்."

சுவிஸில் நம்மவர்களுக்கு நம்மவர்களே மிரட்டல் நோட்டீஸ் விட்டிருக்கினமாம். சீட்டுப்பிடித்தல், வட்டிக்குப் பணம் கொடுத்தல், கடன்காரரை மிரட்டுதல் போன்றவை மரண தண்டனைக்கு உரிய குற்றங்களாம். அதன் பிறகு கடன்பட்டார் சற்று தெம்பாக இருக்கினமாம். கடன்கொடுத்தார் நெஞ்சம்தான் கலங்கிப் போயிருக்குதாம். எச்சரிக்கை பிரசுரம் விட்டவர்கள் ரெண்டு எழுத்தார் எண்டுதான் தகவல்.

கொழும்பில் உள்ள தமிழ் பாடசாலைகள் சிலவற்றில் கற்பிப்போர் தமிழ் வறட்சியில் இருப்பதாக பெற்றோர்கள் முணுமுணுக்கினம். ஒத்த சொல், எதிர்ச்சொல்கூட சரியாகத் தெரியாத ஆசிரியர்களும் இருக்கினம் எண்டால் நம்புவது கஸ்டம்தானே. ஆச்சரியம் ஆனால் உண்மை.

அருமையான அனுபவ மொழியொன்று படித்ததும் நெஞ்சில் பதிந்துவிட்டது. நீங்களும் நெஞ்சில் ஆணியடித்து மாட்டிக் கொள்ளுங்கள்.

**வாழ்க்கை**

"வேகம் இல்லாத விவேகம்
வெறும் கனவு!
விவேகம் இல்லாத வேகம்
வேருடன் அழிவு!
விவேகத்துடன் இணைந்த வேகம்
வெற்றி வாயிலின் நுழைவு"



படிப்பகம்

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

# தமிழ்நாட்டில் 'புலி வேட்டை'

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

78

## எம்.ஜி.ஆர். உத்தரவு

மன்னாரில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பாக குறிப்பிடுவதற்கிடையில் சென்னையில் நடைபெற்ற சில சம்பவங்களை கூறியாக வேண்டும்.

1986 நவம்பர் 15-16-17ம் திகதிகளில் பெங்களூரில் சார்க் மாநாடு நடைபெற இருந்தது. சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் வருகிறார் என்ற செய்தி வெளியாகி யிருந்தது.

ஜே.ஆர்.உயிருக்கு தமிழ்நாட்டில் உள்ள போராளிகளால் ஆபத்து நேரலாம் என்று பயந்தார் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி.

இந்திய மத்திய உள்துறையிலிருந்து தமிழ்நாடு தலைமைச் செயலாளருக்கு இரகசியத் தகவல் அனுப்பிவைக்கப் பட்டது.

'தமிழ்நாட்டிலுள்ள போராளிகள் பெங்களூர் நோக்கிச் செல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்' என்று தெரிவித்தது அத்தகவல்.

அப்போது தமிழ்நாட்டில் உளவுத் துறைக்கு பொறுப்பாக இருந்தவர் மோகனதாஸ். அவரை அழைத்துப் பேசினார் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். போட்ட கட்டளையைக் கேட்ட மோகன்தாசுக்கு ஆச்சரியமாக இருந்தது.

எம்.ஜி.ஆர் சொன்னது இதுதான்: "தமிழ்நாட்டில் உள்ள ஈழப்போராளி அமைப்புக்களிடம் உள்ள ஆயுதங்களை களைந்துவிடுங்கள். சார்க் மாநாடு நடைபெற இருக்கிறது. அதனால் பிரதமரே நேரடியாக என்னிடம் அதனைச் சொல்லியிருக்கிறார்" என்றார் எம்.ஜி.ஆர்.

அதனால் ஏதாவது பிரச்சனைகள் ஏற்படலாமே என்று மோகன்தாஸ் தயங்கியபோது "பிரதமருக்கு வாக்குக் கொடுத்துவிட்டேன். எப்படியாவது செய்தேயாக வேண்டும்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் எம்.ஜி.ஆர்.

நவம்பர் 8ம் திகதி அதிகாலையில் சென்னையில் உள்ள சகல போராளி முகாம்களும், அலுவலகங்களும் தமிழகப் பொலிசாரால் முற்றுகையிடப்பட்டன.

போராளிகளுக்கு முதலில் அதிர்ச்சி. தமிழக பொலிசாரை எதிர்த்து எதுவும் செய்ய முடியாத நிலையில் 'யார் உத்தரவு?' என்று கேட்டார்கள்.

"பிரதமரின் விருப்பம். ஆயுதங்களை ஒப்படையுங்கள். சார்க் மாநாடு முடிந்ததும் தந்துவிடுவோம். ஒரு பிரச்சனையுமில்லை" என்றார்கள் பொலிஸ் அதிகாரிகள்.

பிரபாகரனும் கைது செய்யப்பட்டார். ரெலோ தலைவர் செல்வமும் கைதானார். புளொட் இயக்கத் தலைவர் உமாமகேஸ்வரன் அப்போது டெல்லியில் இருந்தார். அவரை தங்கியிருந்த இடத்தில் இருந்து வெளியேறாமல் கிட்டத்தட்ட வீட்டுக்காவலில் வைத்தனர் டெல்லி பொலிசார்.

கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய் பெறுமதியான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன.

பொலிஸ் நிலையத்தில் பிரபாகரனை அவமானப்படுத்தும் வகையில் பொலிசார் நடந்துகொண்டனர். புகைப்படம் எடுத்தனர்.

'சார்க்' மாநாடு முடியும்வரை போராளிகள் இயக்க தலைவர்களை கட்டுக்குள் வைத்திருக்கவே விரும்பியது தமிழக அரசு.

பிரபாகரனுடன் அப்போது எம்.ஜி.ஆர். நெருக்கமாக இருந்தார். தமிழக பொலிசார் நடந்து கொண்டவிதத்தால் பிரபாகரனும் ஏனைய இயக்கத் தலைவர்களும் அதிருப்தி கொண்டனர்.

## பெங்களூர் பேச்சு

இதேவேளை சார்க் மாநாட்டில் கலந்துகொள்ள சென்றிருந்த ஜே.ஆருக்கும் பிரபாகரனுக்கும் இடையில் பேச்சு வார்த்தை ஒன்றுக்கு ஒழுங்கு செய்தார் ராஜீவ் காந்தி.

இந்திய விமானப்படையின் தனி விமானம் ஒன்றில் சென்னையில் இருந்து அழைத்துச் செல்லப்பட்டார் பிரபாகரன். அவருடன் புலிகள் இயக்க அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கூடச் சென்றார்.

பெங்களூர் பேச்சுவார்த்தைக்கு செல்ல பிரபாகரன் விரும்பவில்லை. தம்மிடமிருந்து ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்ட நிலையில், வேறு நடவடிக்கைகளுக்கும் மத்திய அரசு தயங்காது என்பதை பிரபா புரிந்துகொண்டார்.

மறுத்துப் பேசுவதைவிட பேச்சுக்கு சென்றுவிட்டு முறித்துக்கொண்டுவரலாம் என்றுதான் பிரபா புறப்பட்டுச் சென்றார்.

ஏனைய இயக்கங்களை ஒதுக்கிவிட்டு பிரபாகரனை மட்டுமே பெங்களூருக்கு அழைத்துச் சென்றது இந்திய அரசு.

பெங்களூர் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. சென்னை திரும்பினார் பிரபாகரன்.

சென்னை திரும்பிய பிரபாகரனுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது தமிழக அரசு.

புலிகளிடம் இருந்த தொலைத் தொடர்பு சாதனங்களை பொலிசார் கைப்பற்றினார்கள்.

எம்.ஜி.ஆர். உத்தரவுப்படியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக தமிழக உளவுத்துறை அதிகாரி மோகனதாஸ் கூறியிருக்கிறார்.

"தமிழ்நாட்டில் நடைபெற்ற தொலைத் தொடர்பு சாதன பறிப்பு விடயத்தில் தமிழக அரசு மத்திய அரசுடன் கலந்தாலோசிக்கவில்லை" என்று அறிவித்தார் மத்திய உள்துறை இணை அமைச்சர் ப.சிதம்பரம்.

அமைச்சர் சிதம்பரத்தின் அறிவிப்பு தமிழக அரசை சங்கடத்தில் ஆழ்த்தியது.

## உண்ணாவிரதம்

அதே வேளை பிரபாகரன் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை சென்னையில் உள்ள தமது அலுவலகத்தில் ஆரம்பித்தார்.

பிரபாகரன் நடத்திய முதலாவது சாத்வீகப் போராட்டமும் அதுதான். பிரபாகரன் பிடிவாதகுணமுடையவர் என்பது எம்.ஜி.ஆருக்குத் தெரியும். எம்.ஜி.ஆரும் அவ்வாறு பிடிவாத குணமுடையவர்தான். அதனால்தான் பிரபாகரன்மீது எம்.ஜி.ஆர். தனி



விக்டர்

விருப்பம் கொண்டார் என்றும் ஒரு கருத்து உண்டு.

சென்னையில் பிரபாகரன் உண்ணாவிரதம் இருந்தபோது யாழ்ப்பாணத்தில் அதற்கு ஆதரவாக பிரசாரத்தில் ஈடுபட்டனர் புலிகள்.

சென்னையில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் விமான எதிர்ப்பு ஆயுதமான சாம் 7 வும் இருந்ததாக புத்திசாலித்தனமாக பிரசாரம் செய்யவைத்தார் கிட்டு.

சாம் 7 வாங்குவதற்காக என்று புலிகள் முன்பு நிதிதிரட்டினார்கள் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா. அதனை வாங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டன.

பார்த்தார் கிட்டு. இதுதான் சந்தர்ப்பம் என்று சாம் 7 ஐயும் கைப்பற்றிவிட்டார்கள் என்று சொல்லவைத்துவிட்டார்.

யாழ்-குடாநாடெங்கும் ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட வாகனங்களில் புலிகள் எழுப்பிய கோஷங்களில் ஒன்று: "தமிழக அரசே! எடுத்த சாம் 7ஐ திருப்பிக்கொடு!"

பிரபாகரனின் உண்ணாவிரதத்தை அடுத்து எம்.ஜி.ஆர். மனம் மாறினார்.

தொலைத் தொடர்பு சாதனங்களை திருப்பித் தாருங்கள் என்றுதான் பிரபாகரன் உண்ணாவிரதமிருந்தார்.

எம்.ஜி.ஆர். என்ன செய்தார் தெரியுமா? சார்க் மாநாட்டு நேரத்தில் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களையும் திருப்பிக் கொடுத்துவிடுமாறு உத்தரவு போட்டுவிட்டார்.

சென்னையில் ஈழப் போராளி அமைப்புக்கள்மீது தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கை இந்தியாவெங்கும் வாதப் பிரதிவாதங்களை கிளப்பிவிட்டது.

## பத்திரிகைகள் சாடல்

பத்திரிகைகள் சில வரவேற்றன. வேறு சில எதிர்த்துக் கருத்து வெளியிட்டன.

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை 'தேடலைத் தொடர்க' என்ற தலைப்பிட்டு ஒரு தலையங்கமே எழுதியிருந்தது. அதில் முக்கிய பகுதி இது:

"தமிழ் நாட்டிலுள்ள இலங்கைப் போராளிகள் மீதான சென்றவார அதிரடி முற்றுகை ஆச்சரியம் தருகிறது. போராளிகள் வருத்தப்பட்டார்கள். கொழும்புக்கு திருப்தி. தம் மத்தியில் கொலைகார ஆயுதங்களுடன் திரிந்தவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை மக்களுக்கு நிம்மதியைத் தந்தது.

இந்த நடவடிக்கை தமிழ்நாட்டு காவல்துறையால் நடத்தப்பட்டிருந்தாலும், டெல்லிக்குத் தெரியாமல், அதன் ஆதரவு இல்லாமல் நடந்திருக்க முடியாது. இப்படிப்பட்ட நடவடிக்கைகளால் போராளிகளது எதிர்ப்பை நிறுத்திவிடலாம் என்று கொழும்பு நினைத்தால் அது புத்திசாலித்தனமல்ல. யதார்த்த நிலைகளைக் கருதி கொழும்பு ஆவன செய்ய வேண்டும்."

'இந்து' பத்திரிகையும் ஒரு தலையங்கம் எழுதியது. அது இதுதான்:

"இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இந்திய அரசின் கொள்கை நாளுக்கு நாள் குழப்பமாகிக் கொண்டு வருகிறது. அதன் காரணங்கள், நோக்கங்கள் எவை என்பது இப்பொழுது வெளிப்படையாகி வருகிறது.

இலங்கை தீவிரவாத அமைப்புக்கள் மீது தமிழ்நாட்டு காவல்துறை பெரியளவில் வேறுபாடு காட்டாத ஒரு நடிவடிக்கை மேற்கொண்டது.

மத்திய அரசின் உத்தரவின் பேரில் அந்த இயக்கங்களின் முன்னணித் தலைவர்கள் சிலர் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டனர்.

அண்டை நாட்டு இனப்பிரச்சனையில் முதலில் 'புலி வேட்டை' என்று அழைக்கப்பட்டு, பிறகு 'ஆயுதம் களைந்து அவமானப் படுத்துதல்' என்ற பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கை முழுக்க, முழுக்க தமிழ்நாட்டு காவல்துறையினரால் மட்டுமே எடுக்கப்பட்டது. தெளிவில்லாத ஒரு முன் தகவல் மத்திய அரசுக்கு கொடுக்கப்பட்டது என்பது இப்போது தெரியவருகிறது.

... இந்த ஆயுதம் களைதல் நடவடிக்கை உலகளாவியரீதியில் ஒரு உணர்ச்சிமயமான ஊக விவாதத்தைக் கிளப்பிவிட்டிருக்கிறது; அதாவது போராளிகளுக்கு ஆயுதங்கள் கொடுக்கப்படுகின்றன. அவை தமிழ்நாட்டில் குவிக்கப்படுகின்றன. அவை இலங்கை அரசுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் என்பதை இந்திய அதிகார மட்டங்கள் தொடர்ந்து மறுத்து வருகின்றன. இதே நிலை தொடருமா! தமிழ்நாட்டு காவல் துறையினர் நடிவடிக்கை எதனை உணர்த்துகின்றது என்று தெரியவில்லையே. இந்திய அரசின் இலங்கைக் கொள்கையைத் தடம் புரளாமல் திருத்தி அமைப்பதில் பிரதமர் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்!"

'டைம்ஸ் ஒஃப் இந்தியா' பின்வருமாறு சாடியது: "இந்த நடிவடிக்கை எதேச் சாதிகாரமானது. அவமானப்படுத்தக்கூடிய அளவு கொடுமையானது என்று விடுதலைப் புலிகள் குறிப்பிட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. இந்த வார்த்தைகள் கடுமையானவையாக இருந்த போதும் இது மிகவும் தேவைப்பட்டது."

சரியான செயல்பாடு என்ற தலைப்போடு இந்துஸ்தான் டைம்ஸ் எழுதிய தலையங்கத்தில் ஒரு பகுதி: "பெங்களூரில் இரண்டாவது சார்க் உச்சி மாநாடு நடைபெற சில நாட்களே இருந்த வேளையில், சென்ற வார இறுதியில் இலங்கைப் போராளிகள்மீது தமிழ்நாடு அரசு எடுத்த ஆயுதம் களைதல் நடவடிக்கை மிகவும் சரியானதே.

மத்திய அரசின் ஒப்புதல் இல்லாமல் தமிழ்நாடு அரசு இந்த முனைவில் இறங்கியிராது என்பது தெளிவு.

பார்க்கப்போனால் இந்த நடவடிக்கைக்கு சற்று முன்னதாக தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். புதுடெல்லி சென்றிருந்தார்."

## பாய்ந்தது பதினாறடி

ஈழப் போராளிகளிடம் ஆயுதம் களையும் நடவடிக்கை எம்.ஜி.ஆருக்கு தெரியாமல் நடந்த ஒன்றல்ல. ஆனால் உளவுத்துறை அதிகாரி மோகன்தாஸ் எம்.ஜி.ஆர் எட்டடி பாயச் சொன்னால் பதினாறு அடி பாய்ந்துவிட்டார் என்பதே போராளி இயக்கங்களின் கருத்தாக இருந்தது.

ஆரம்பத்தில் இருந்தே ஈழப்போராளிகள் அமைப்புக்கள்மீது மோகனதாசுக்கு பிடிப்புக் கிடையாது. அவர்மீதும் போராளி அமைப்புக்களுக்கு சந்தேகம் இருந்தது.

மோகன்தாசின் கடுமையான போக்கின் விளைவாகத்தான் ஆயுதங்களை கைப்பற்றும் நடவடிக்கை பகிரங்கமாக்கப்பட்டது. இயக்கத் தலைவர்களும் அவமானத்திற்கு உள்ளானார்கள்.

கைப்பற்றிய ஆயுதங்களை திருப்பிக் கொடுக்குமாறு எம்.ஜி.ஆர் உத்தரவிட்டது மோகன்தாசுக்கு உடன்பாடாக இருக்கவில்லை.

பதவியில் இருந்து ஓய்வுபெறப்போகிறேன் என்று எம்.ஜி.ஆரை மறைமுகமாக மிரட்டிப்பார்த்தார். எம்.ஜி.ஆர். அசைந்து கொடுக்கவில்லை. மோகனதாஸ் விடுப்பில் வீடு சென்றுவிட்டார்.

தமிழக உளவுத் துறை அதிகாரியாகவும், தமிழக பொலிஸ் டி.ஜி.பி.யாகவும் முக்கிய பதவிகள் வகித்த மோகன்தாஸ் இலங்கை அரசின் அதிகாரிகளை இரகசியமாக சந்திப்பதாகவும் அப்போது தகவல்கள் வெளியாகியிருந்தன.

'இலங்கை உள் விவகாரங்களில் இந்தியா தலையிடுவதை தான் விரும்பியிருக்கவில்லை' என்று ஓய்வு பெற்ற பின்னர் கூறினார் மோகனதாஸ்.

அவர் அதற்கு சொன்ன நியாயம் இது: "இன உணர்வு அல்லது வேறு காரணங்களினால் இன்னொரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிட இந்தியாவுக்கு அதிகாரம் இல்லை. இதனை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு பஞ்சாப், காஷ்மீர் மாநிலத் தீவிரவாதிகளுக்கு உதவிவரும் பாகிஸ்தானைக் கேள்விகள் கேட்கும் உரிமை இல்லை."

ஓய்வுபெற்ற பின்னர் அதனை பகிரங்கமாக தெரிவித்த மோகனதாஸ், பதவியில் இருந்தபோது தனது நடவடிக்கைகள் மூலம் தனது நிலைப்பாட்டை மறைமுகமாக காட்டியிருந்தார்.

ஆயுதங்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டபோதும் பிரபாகரன் சமாதானமாகவில்லை. இனிமேலும் தமிழ் நாட்டில் தங்கியிருப்பது நல்லதல்ல. நிர்ப்பந்தங்களுக்கு கட்டுப்பட வேண்டியும் ஏற்படலாம். அதனால் யாழ்ப்பாணம் சென்றுவிடவேண்டும் என்ற முடிவுக்கு வந்திருந்தார் பிரபாகரன்.



ஆனந்தவீரசேகர,கிட்டு,கொத்தலாவல

## மன்னார் மோதல்

மன்னாரில் அடம்பனில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

மன்னார் பிராந்தியத்திற்கு பொறுப்பாக இருந்தவர் மறுசலீன் என்னும் விக்டர்.

மோதலில் விக்டர் கொல்லப்பட்டார். இராணுவத்தினர் தரப்பில் 13 பேர் கொல்லப்பட்டனர். இருவர் கைதுசெய்யப் பட்டனர்.

இராணுவத்தினர் புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்வாங்கிச் சென்றனர். இராணுவத்தினரிடம் கைப்பற்றிய ஆயுதங்கள், கொல்லப்பட்ட இராணுவத்தினரது உடல்கள், கைதான இராணுவத்தினர், விக்டரின் உடல் அனைத்தும் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டன.

இயக்கங்கள் தமக்குள் மோதுவதையிட்டு யாழ்ப்பாணமக்களிடம் வருத்தம் நிலவியது. ரெலோ உறுப்பினர்கள் பலர் வீதிகளில் எரிக்கப்பட்ட காட்சிகளை நேரில் கண்ட பலர் அதிர்ச்சியடைந்திருந்தனர்.

அவற்றையெல்லாம் சுத்தமாக துடைத்தெறியும் வகையில் மன்னார் மோதல் வெற்றியை பெரியளவில் கொண்டாடத் திட்டமிட்டார் கிட்டு.

நல்லூர் கந்தசாமி கோவிலருகில் கண்காட்சியும், அஞ்சலியும் ஒன்றாக நடத்தப்பட்டன.

# கந்தசாமி கோவில் அருகே கண்காட்சி

கைதுசெய்யப்பட்ட இரண்டு இராணுவத்தினரும் மொட்டையடிக்கப்பட்ட நிலையில் மக்களுக்கு காண்பிக்கப் பட்டனர்.

இராணுவத்தினரை புலிகள் பிடித்து வந்தமை மக்களுக்கு ஆச்சரியம். பெருந்தொகையான மக்கள் சென்று பார்வையிட்டனர்.

விக்டரின் மரணச் சடங்கிலும் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

விக்டரின் அஞ்சலிக்காக கிட்டு தெரிவித்த கருத்து விஷயமறிந்தவர்களை புருவம் உயர்த்த வைத்தது.

கிட்டு சொன்னது இதுதான்: "புலிகள் அனைவரும் விக்டரை விரும்புகிறார்கள். தலைவர்கள் தங்கள் உறுப்பினர்களுடன் களத்தில் நிற்க வேண்டும்" என்றார் கிட்டு.

கிட்டு சொன்னது மறைமுகமாக பிரபாகரனுக்குத்தான் என்று பேசப்பட்டது. பிரபாகரன் அப்போது தமிழ் நாட்டில் இருந்தார்.

புலிகளிடம் உள்ள தமது இரண்டு வீரர்களையும் விடுவிப்பது தொடர்பாக ஒரு இராணுவ அதிகாரி கிட்டுவுடன் தொடர்பு கொண்டார்.

அவர்தான் கப்டன் கொத்தலாவல. யாழ் கோட்டை இராணுவ முகாமில் இருந்த கொத்தலாவலக்கும் புலிகளுக்கும் இடையே தொலைத் தொடர்பு சாதனம் மூலமாக தொடர்பு ஏற்பட்டது.

அதேநேரம் புலிகளது முக்கிய உறுப்பினர்கள் இருவர் இராணுவத்தினரிடம் இருந்தனர்.

தமிழ்நாட்டிலிருந்து வந்து கொண்டிருந்த புலிகளின் படகு ஒன்றை கடற்படையினர் துரத்திச் சென்று தாக்கினார்கள்.

படகில் இருந்தவர்களில் இரண்டு பேர் மட்டும் உயிர் தப்பினார்கள். ஒருவர் அருணா. இன்னொருவர் காமினி.

புலிகள் இயக்க உறுப்பினர்கள் எவரும் உயிருடன் கைதுசெய்யப்பட மாட்டார்கள் என்று கூறிவந்தமையால், தமது உறுப்பினர்கள் கைதுசெய்யப் பட்டதை வெளியே கூறுவதில் புலிகளுக்கு தர்மசங்கடமாக இருந்தது.

அருணா கிட்டுவுக்கு நெருக்கமானவர். சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அருணாவை வெளியே கொண்டுவந்து விடலாம் என்று நினைத்தார் கிட்டு.

இரண்டு இராணுவத்தினரை விடுதலை செய்வதற்கு பதிலாக, தமது உறுப்பினர்கள் இருவரையும் விடுவிப்பது தான் கிட்டுவின் நோக்கம்.

கோட்டை முகாமுக்கும், புலிகளது காவலரணுக்கும் இடைப்பட்ட பகுதியில் கிட்டுவும் கொத்தலாவலயும் சந்திப்பதாக முடிவு செய்யப்பட்டது.

கொத்தலாவலவுடன் கொழும்பில் இருந்து சென்ற பிரிகேடியர் ஆனந்த வீரசேகராவும் சந்திப்பில் கலந்து கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

கிட்டு தனது மெய்ப்பாதுகாவலர்களுடனும் தனது மெய்ப்பாதுகாவலராகவும் மொழிபெயர்ப்பாளராகவும் விளங்கிய ரஹீம் என்னும் கனகரத்தினத்துடனும் கொத்தலாவலயை நோக்கிச் சென்றார்.

மறுபுறம் ஒரு மாமிச மலைபோன்ற தோற்றத்துடன் கொத்தலாவல வந்து கொண்டிருக்கிறார். (தொடர்ந்துவரும்)




படிப்பகம்

www.padippakam.com

# கலைஞர் தலைமையில் தமிழகத்தில் புதிய ஆட்சி!

அலசுவது – இராஜதந்திரி



உலகின் பெரும் ஜனநாயக நாடான இந்தியாவில் பொதுத்தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

தமிழ்நாட்டிலும் சட்ட சபைத் தேர்தலில் கலைஞர் முத்துவேலு கருணாநிதி அபார வெற்றி பெற்று தமிழக முதலமைச்சராகியுள்ளார்.

அமரர் எம்.ஜி.இராமச்சந்திரன் ஸ்தாபித்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் படுதோல்வியைத் தழுவியுள்ளது. இதுவரை காலமும் தமிழக முதலமைச்சராக இருந்த செல்வி ஜெயலலிதா, அவரது சொந்தத் தொகுதியிலேயே தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

எனவே இந்தியாவின் மத்திய அரசாங்கமும், தமிழகத்தில் மாநில அரசாங்கமும் மாற்றங்கண்டுள்ளன.

இந்த மாறுதல்கள்- இந்தியர்களின் அரசியல், சமூக, பொருளாதார நிலபரங்களில் ஏற்படுத்தும் பிரதி பலிப்பைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டியுள்ளது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை முதலமைச்சர் மு.கருணாநிதி தலைமையிலான புதிய தமிழக அரசு தமிழகத்தவர்களின் அரசியல் நிலைப்பாடுகளில் மட்டுமல்ல, இலங்கைத் தமிழர் விவகாரத்திலும் எத்தகைய அணுகுமுறைகளைக் கொண்டிருக்குமென்பதே முக்கிய எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

கடந்த காலங்களில் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அபரிமிதமான அக்கறையை வெளிப்படுத்திய ஒரு இந்திய அரசியல் தலைவராகவே கலைஞர் மு. கருணாநிதி விளங்கினார்.

திரு. கருணாநிதி மட்டுமல்ல, அன்றைய தமிழக முதலமைச்சராக இருந்த அமரர் எம்.ஜி.இராமச்சந்திரன்



கூட இலங்கைத் தமிழர்களுக்காக நிறையவே செய்திருந்தார்.

இலங்கையின் மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களுக்குமட்டுமல்ல, தீவிரவாத தமிழ் அரசியல்வாதிகளுக்குக்கூட தமிழகத்தில் களம் அமைத்துக் கொடுப்பதில் அமரர் எம்.ஜி.இராமச்சந்திரன், கலைஞர் கருணாநிதி ஆகியோர் அரும்பணியாற்றியிருந்தனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சனையை சர்வதேசமயப்படுத்துவதில் அன்றைய

## தமிழ் அரசியலாளர்கள் ஒன்றுபட்டு ஒருங்கிணைய வேண்டிய நிலை!

தமிழக, இந்தியத்தலைவர்கள் கொடுத்த பங்களிப்பு பிரமாண்டமானது. தென்னிலங்கை அரசியலாளர்களைக் கூட அது பிரமிக்கவைத்திருந்தது.

இருந்தபோதிலும் தமிழக மாநில அரசாங்கமும், இந்திய மத்திய அரசாங்கமும் வழங்கிய உதவி, ஒத்தாசைகளை வடக்கு, கிழக்கின் தமிழ் அரசியலாளர்கள் கொச்சைப்படுத்தி, தமது சொந்த அரசியல் லாபங்களையும், கொலை வெறித்தனத்தையும் முதன்மைப்படுத்தினரே தவிர, தமிழகத்தவர்கள் எவ்வகையிலும் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரானவர்களாக இருந்தார்கள் என்று கூறுவதற்கில்லை.

சென்னை- பாண்டி பஜாரில் புளொட் தலைவர் உமா மகேஸ்வரனும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனும் எப்போது பரஸ்பரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்களோ, அப்போதே இலங்கைத் தமிழர்களின் ஒற்றுமையின்மை இந்தியாவில் பிரதிபலிக்க ஆரம்பித்தது.

இந்திய மத்திய அரசு, காலப்போக்கில் இலங்கைத் தமிழர் விடயத்தில் தனது நிலைப்பாடுகளை மாற்றியிருக்கலாம்; ஆனால் தமிழகத்தவர்கள் எப்போதுமே இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்தே வந்தனர்.

1983ம் ஆண்டு இடம்பெற்ற இலங்கை இனக்கலவரத்தையடுத்து, தமிழ் நாட்டவரது இலங்கைத் தமிழர் மீதான அனுதாபம் ஒரு பேரலையாக உருவெடுத்திருந்தது.

முழுத் தமிழகமுமே ஸ்தம்பிக்கும் வகையில் வேலை நிறுத்தங்கள், கடையடைப்புக்கள் இடம்பெற்றன.

சென்னையில் மெரீனா கடற்கரைகூட இலங்கைத் தமிழர்களுக்காக ஜன சமுத்திரத்தினால் பல தடவைகள் நிறைந்திருந்தது.

இருந்தபோதிலும், இலங்கை-இந்திய ஒப்பந்தம் 1987ம் ஆண்டு கைச்சாத்தானதையடுத்து தொடர்ச்சியாக இடம்பெற்ற அரசியல் மற்றும் இராணுவரீதியான மாற்றங்கள், ராஜீவ் கொலை ஆகியன, இந்திய மத்திய அரசு மற்றும் தமிழகத்தவர்களுடனான இலங்கைத் தமிழர்களின் உறவில் விரிசலை ஏற்படுத்தியிருந்தன.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை, இன்று எப்போதுமில்லாதவாறு ஏராளமான தமிழ் அரசியல் கட்சிகள், காணப்படுகின்ற போதிலும், ஒரு சிறந்த தமிழ் தலைமைத்துவத்தை கொண்டிருக்க முடியாத தன்மையே காணப்படுகின்றது.

கடந்த 17 வருடகாலமாக இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழர்களின் அரசியல் பிரச்சனை உக்கிரமடைந்திருக்கின்றது. ஆனால் துரதிஷ்டவசமாக இராணுவ அணுகுமுறைகள் வலுவடைந்து வடக்கு-கிழக்குத் தமிழர்களின் வாழ்க்கையோடிணைந்த அனைத்து அம்சங்களும் சிதைந்து சிதறிப்போயுள்ளன.

இத்தகைய கொடிய நிலைக்கு இலங்கையின் ஆட்சியாளர்கள் மட்டும் காரணமல்ல; வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களை அரசியல்ரீதியாகப் பிரதிநிதித்துவப்படுத்திய தலைவர்களுமே காரணகர்த்தாக்களாக இருக்கின்றனர்.

தனிநாடு, தமிழீழம், சமஷ்டி, மாவட்ட சபை, மாகாணசபை என்று காலத்துக்குக்காலம் தமிழ்த்தலைவர்கள் கோஷமெழுப்பியும், அப்பாவித் தமிழர்களின் உணர்வுகளைத் தட்டி எழுப்பியும் விட்டனர். ஆனால் தமிழ் அரசிலாளர்களின் உட்பூசல்கள், குத்துவெட்டுக்கள் காரணமாகவும் ஆயிரக்கணக்கான உயிர்களைப் பலியெடுத்துள்ளது.

யாருக்கு யார் எதிரிகள்?, யார், யார் எதிரிகள்? நண்பர்கள் யார்? பகைவர்கள் யார்? என்பதைக்கூட வரையறை செய்யாது, சந்தர்ப்பவாதங்களும் துரோகத்தனங்களும், வடக்கு- கிழக்குப் பிரச்சனையில் தலைவிரித்தாடியிருந்தன.

இந்நிலையில் எமது பிரச்சனையை எம்மவர்களே கேலிக்கூத்தாக்கியும், எந்தவகையிலும் ஓர் அரசியல் வரையறையை அவர்களால் வகுக்கமுடியாதிருந்தது.

இதன் காரணமாகவே, மிதவாதத்தலைவர்களின் மூலம் ஒரு நல்ல தலைமையைப் பெறமுடியாத அப்பாவித்தமிழ் மக்கள், தீவிரவாதத் தலைவர்களாலும் எதனையும் சாதிக்கமுடியாத நிலையில் உள்ளதை உணர்ந்துள்ளனர்.

வடக்கு- கிழக்கு யுத்தம், பேரினவாத ஆட்சியாளர்களின் கடும்போக்குக்காரணமாக பல்லாயிரம் உயிர்களைப் பலியெடுத்த அதேசமயம், தறிகெட்டுப் போகவும் செய்துள்ளனர்.

இந்தியாவினதும், தமிழ்நாட்டினதும் உதவி ஒத்தாசைகளை மட்டுமல்ல; ஏனைய உலக நாடுகள் வழங்கிய அனுதாபத்தைக் கூடச் சரிவரப் பயன்படுத்த எமது தமிழ் தலைவர்கள் முன்வரவில்லை.

'தமிழன் என்று சொல்லடா. தலைநிமிர்ந்து நில்லடா;' 'ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆளநினைப்பதில் என்னகுறை?' 'தமிழீழமே முடிந்த முடிவு' என்று முழக்கமிட்ட 'சிம்மக்குரலோன்கள்' யாவரும் முடக்கமடைந்து போயுள்ளனர்.

அப்பாவிமக்களே காலத்துக்குக்காலம் அகதிகளாகவும், அநாதைகளாகவும், அவலமடைந்து திரிகின்றனர். இன்றைய வடக்கு-கிழக்கு மக்கள் படும் பாட்டை நேரில் சென்று பார்த்தால் மட்டுமே நன்கு புரிந்து கொள்ளமுடியும்.

அமைதியாகவும், அழகாகவும் இருந்த யாழ்ப்பாண நகரம் முற்றிலுமாகச் சோபை இழந்துள்ளது. கட்டிடங்கள், குடிமனைகள் என்பன இடிந்தும், தூர்ந்தும் போயுள்ளன.

தொடர்ந்தும் இராணுவரீதியிலான அணுகுமுறைகளுக்கோ, அல்லது விவேகமற்ற ஆயுதப்போராட்டங்களுக்கோ முகங்கொடுப்பதென்பது, வடக்கு-கிழக்குத் தமிழர்களைப் பொறுத்தவரை, ஒரு தற்கொலை முயற்சியாகவே அமையமுடியும்.

வடக்கே யாழ்குடாநாட்டில் இராணுவம் தனது ஆதிக்கத்தை விஸ்தரித்துள்ளது.

இராணுவ ஒப்பரேஷன்கள் காரணமாக, தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறிய மக்களில் ஒருபகுதியினர், மீளவும் தமது சொந்த இருப்பிடங்களை நோக்கி வரக் காணப்படுகின்றனர்.

ஆயுதப்போராட்டங்களை ஆரம்பித்த காலத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தமிழ் தீவிரவாத அமைப்புக்கள் இருந்தன. இந்த அமைப்புக்களால் எவ்விதத்திலும் ஓர் ஒற்றுமையைப் பேணமுடியவில்லை.

ஆனால் அன்று ஆயுதப் போராட்டங்களை ஆரம்பித்த அமைப்புக்களில் பல இன்று அரசியல் களத்தில் முழுமையாக இறங்கியிருப்பதுடன், தம்மிடையே ஒருங்கிணைப்பையும் கொண்டிருப்பதில் ஆர்வங்காட்டுகின்றன.

பராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக புளொட், ஈ.பி.ஆர்.எல்.எஃப், ஈ.பி.டி.பி, ஈரோஸ், டெலோ ஆகிய அமைப்புகள் ஐந்து கட்சிக் கூட்டமைப்பாக தோன்றியிருப்பதும், கூட்டாகவே ஒரே குரலில் செயல்பட ஆரம்பித்திருப்பதும் வரவேற்கக்கூடிய அம்சங்களே.

வடக்கு- கிழக்குத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளையே தமிழ் அரசியல் கட்சிகள் முதன்மைப்படுத்த வேண்டுமே தவிர, தமது சொந்த நலன்களையும், பிடிவாதங்களையுமல்ல,

இந்நிலையில் 'அடம்பன் கொடியும் திரண்டால்மிடுக்கு' என்பதற்கமைய அனைத்து தமிழர்களும், தமிழ் கட்சிகளும் எதிர்கால நடவடிக்கைகளுக்காக ஒன்றுபட வேண்டும்.

ஒருவரையொருவர் பகைத்தோ, அல்லது தனித்து நின்றோ எதனையும் சாதித்துவிட முடியாது என்பதையே கடந்த கால நிகழ்வுகள் புலப்படுத்துகின்றன.

ஒன்றுபட்டால் மட்டுமே உண்டு வாழ்வு என்பதையும், ஒற்றுமையின்றேல் தாழ்வு என்பதையும் தமிழ் அரசியல் கட்சிகள் மட்டுமல்ல, அனைத்து தமிழ் மக்களும் உணர வேண்டியவர்களாகின்றனர்.

எனவே, ஒருபுறம் தனித்து நிற்கும் எல்.ரி.ரி.ஈ.யினரும், மறுபுறம் தனிப்பாதையை வகுத்துள்ள தமிழர்

## "இனி ஒரு விதி செய்வோம் அதை எந்தநாளும் காப்போம்"

விடுதலைக்கூட்டணி, ஒதுங்கியே இருக்கும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்பவையும் ஏதோ ஒரு வகையில் வடக்கு-கிழக்குத் தமிழர்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க ஒன்றுபட வேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் சிதறிச் சின்னா பின்னமாகி, தமது தனித்துவங்களையும் இழந்து- புலம் பெயர்ந்தவர்களாகவும், இடம் பெயர்ந்தவர்களாகவும் நிலை தளர்ந்து போயுள்ள தருணத்தில், தமிழ் நாட்டில் கலைஞர் மு.கருணாநிதி தலைமையில் புதிய ஆட்சி மலர்ந்துள்ளது.

தமிழ் என்றால் தமது தசை கூடத் துடிக்கும் என்று. முழங்குபவர் கலைஞர். அரசியலாளர் மட்டுமல்ல, இன்றைய காலகட்டத்தில் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஒரு சிறந்த தமிழறிஞராகவும் கலைஞர் கருணாநிதி விளங்குகின்றார்.

ஒப்பரேஷன் சூரியக்கதிர் இராணுவ நடிவடிக்கை கடந்த அக்டோபரில் ஆரம்பமானபோது, இலங்கைத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து முழுத்தமிழகமுமே ஸ்தம்பித்தது.

கலைஞர் கருணாநிதிகூட இலங்கைத் தமிழர்களுக்காக சென்னையில் தமது தி.மு.க. கட்சியின் சார்பாக ஊர்வலம் நடத்தியிருந்தார்.

இந்த நடவடிக்கைகள் தமிழகத்தவர்களது- இலங்கைத் தமிழர்கள் மீதான அனுதாபம் எவ்விதத்திலும் குறைந்து விடவில்லை என்பதைப் புலப்படுத்தியது.

இந்த அனுதாபத்தை ஒரு பேராயுதமாக உருவாகச்செய்து இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அரசியல் ரீதியான தீர்வு முயற்சிகளை முன்னெடுப்பதே ஒரு சிறந்த அரசியல் சாணக்கியமாக அமையமுடியும்.

அத்தகைய அரசியல் சாணக்கியத்தை, "இனி ஒரு விதி செய்வோம்; அதை எந்நாளும் காப்போம்" என்று இலங்கைத் தமிழர்களும், அவர்கள் சார்ந்த அரசியலாளர்களும் மனதில் கொள்ள வேண்டியதும் இன்றியமையாததாகின்றது.

## தமிழக கட்சிகளின் நிலைப்பாடு

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக தமிழக அரசியல் கட்சிகள் தமது தேர்தல் அறிக்கைகளில் வெளியிட்ட நிலைப்பாடுகள்:

தி.மு.க-இலங்கையிலுள்ள தமிழர்கள் திருப்திபடக்கூடிய வகையிலான அரசியல் தீர்வு ஏற்படவேண்டும்.

அ.தி.மு.க. - (எதுவும் சொல்லவில்லை.)

ம.தி.மு.க - தனித் தமிழ் ஈழமே ஒரே தீர்பு.

பா.ம.க. (பாட்டாளி மக்கள் கட்சி) - தனித் தமிழ் ஈழமே ஒரே தீர்பு.

கம்யுனிஸ்ட் இடது - ———

கம்யுனிஸ்ட் வலது - ———



மக்கள் தி.மு.க.வின் பிரசாரங்களில் அதன் தலைவர் வை. கோபால்சாமியை தமிழகத்து பிரபாகரன் என்று வர்ணித்தனர்.

மக்கள் தி.மு.க.-புலிகள் தொடர்பான ஆதரவு நிலையை எடுத்ததை 'துக்ளக்' சோ கடுமையாக விமர்சித்தார். "தேசத்துரோக சக்திகளுக்கு ஆதரவாக செயற்படுகிறார் என்று குற்றம் சாட்டினார்."



படிப்பகம்

## உலகைக் கலக்கிய 10

# மனித வெடிகுண்டு



# காலக்கெடுவும் குண்டு வெடிப்பும்

**கா**ர்லோஸின் கடிதம் கிடைத்ததும் ஃபிரான்ஸ் அமைச்சரவை கூடியது. அவசரக் கூட்டம்.

அமைச்சர்களில் பலர் சொன்ன ஒரே கருத்து, "கார்லோஸ் பொல்லாதவன். சொன்னதைச் செய்வான். எதற்கு வம்பு. பேசாமல் இருவரையும் இரகசியமாக விடுதலை செய்துவிடலாம். ஃபிரான்ஸ் மக்கள் வீணாக இரத்தம் சிந்த வேண்டாம்.'

பாதுகாப்பு அமைச்சர் அதற்கு உடன்படத் தயங்கினார்." எதற்கும் இராணுவ தலைமைப்பீடத்துடனும் கலந்தாலோசிப்பது நல்லது." என்றார். ஆலோசிக்கப் பட்டது.

"கூடாது. ஒரு தனிமனிதன் ஒரு நாட்டையே மிரட்டுவதா? நமக்கு அவமானம்! என்ன செய்யப்போகிறான். பார்த்துவிடலாம்." என்றார் இராணுவ அதிகாரி.

பாதுகாப்பு அமைச்சருக்கும் அவர் சொல்வதுதான் சரி என்று பட்டது.

"ஓ.கே. மேற்கொண்டு செய்ய வேண்டியதைப் பாருங்கள்."

இராணுவ அதிகாரியால் கார்லோஸின் போர்ப் பிரகடன எச்சரிக்கைக் கடிதம் பத்திரிகைகளுக்கு கொடுக்கப் பட்டது.

தீப்பற்றியதுபோல கார்லோஸின் கடித விபரம் உலகெங்கும் பரவியது. சர்வதேச செய்தித்தாள்களில் தலைப்புச் செய்தி அதுதான்.

"அவசரப்பட்டுவிட்டீர்கள். கடிதத்தை பத்திரிகைகளுக்கு கொடுத்திருக்கத் தேவையில்லை," என்றார் போனில் பாதுகாப்பமைச்சர்.

செய்தி வெளியாகிவிட்டதால், கார்லோஸின் மிரட்டலுக்கு பணியவில்லை என்று காட்ட வேண்டியிருந்தது.

மகதலோனா மீதும், புருனேபிரேகுவார்ட் மீதும் ஃபிரான்ஸ் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

ஹங்கேரியில் தனது பாதுகாப்பான இல்லத்தில் கார்லோஸ் வெடிமருந்துகளோடு மிகத் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தான்.

குண்டு தயாரிப்பதில் அவனது லாவகத்தைப் பார்த்து வியந்துகொண்டிருந்தாள் கிறிஸ்டா ஃப்ரொலிச்.

கிறிஸ்டா ஃபரொலிச்சை சுருக்கமாக கிறிஸ்டா என்று நாம் அழைக்கலாம்.

சுவிஸ் நாட்டுக்காரி, வெள்ளைத் தோல் விழிகளில் ஒரு காந்த சக்தி இருப்பதை நூறுசத வீதம் ஒத்துக்கொள்ளலாம். மெல்லிய உதடுகள். இரண்டு கிண்ணங்களை கவிழ்த்து வைத்தது போன்ற மார்புகள். சதை போடாத உடம்பு.

கார்லோஸுடன் ஃபிரான்ஸில் சில வருடங்களுக்கு முன்பாக ஏற்பட்ட தற்செயல் சந்திப்பு.

ஒரே ஒரு தடவையாவது கிறிஸ்டாவை கட்டிலில் சந்திக்க வேண்டும் என்று கார்லோஸ் துடித்ததுண்டு. அந்தச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கிறிஸ்டா சுவிஸுக்கு சென்றுவிட்டாள். கார்லோஸும் ஃபிரான்சிலிருந்து வெளி யேறிவிட்டான்.

கார்லோஸின் புகைப்படங்கள் பத்திரிகைகளில் வெளியாக, கிறிஸ்டாவும் அவற்றைப் பார்த்துவிட, 'அட, அவனா கார்லோஸ்?' என்று வியந்துபோய், வியப்பு மயக்கமாகி, மயக்கம் கார்லோஸை தேட வைத்து, முகவரி ஒன்று கிடைத்து கடிதம் போட்டு, கார்லோஸும் பதில் போட கடிதம் மூலம் நெருக்கமாகி, "நானும் உன்னொடு சேர்கிறேனே" என்று கிறிஸ்டா விரும்ப, 'ஐஸ்கீரிம் சாப்பிட கூலியா' என வியந்து கார்லோஸ் அவளை அழைத்தான்.

கிறிஸ்டா தனது கடிதங்களை கார்லோஸின் வீட்டுக்குத்தான் போடுவாள். அந்த முகவரிதான் தெரியும். கார்லோஸ் எங்கிருந்தாலும், பொலிவியாவில் உள்ள தனது பெற்றோருடன் தொடர்பைக் கைவிடவில்லை. கார்லோஸுக்கு வரும் கடிதங்களை அவனுக்கு இரகசியமாக அனுப்பிவிடுவார்கள்.

கிறிஸ்டா இப்போது கார்லோஸின் இல்லத்தில் தங்கியிருந்தாள். கிறிஸ்டா மூலம் சில காரியங்களை செய்யவும் திட்டமிட்டிருந்தான் கார்லோஸ்.

அழகான பெண்களை வைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளை பலவீனமாக்கி விடலாம் என்று கார்லோஸுக்கு தெரியும். அழகைக் கவனிப்பவர்களுக்கு அதிலுள்ள ஆபத்தைக் கவனிக்க நேரமிருக்காது.

ஏற்கெனவே மகதலோனாவை வைத்து ரேடியோ ஃப்ரீ யூரோப் வானொலி நிலையத்தை தகர்த்ததும் அப்படித்தானே.

குண்டு தயாரித்து முடிந்ததும் கார்லோஸ் இரண்டு கிளாசுகளில் பியர் நிரப்பினான். நுரை ததும்பியது.

தான் ஒன்றும், கிறிஸ்டாவுக்கு ஒன்றுக்குமாக அவள் பக்கம் நகர்த்தி, அவள் எடுக்க, சியர்ஸ் சொல்லி பருகினான். கிறிஸ்டா தனது மெல்லிய உதடுகளால் கிளாஸின் விளிம்பில் உறிஞ்சுவது கார்லோஸுக்கு ரசனைக்குரியதாக இருந்தது.

"என்ன அப்படிப் பார்க்கிறாய்?" என்றாள் கிளாஸால் உதட்டை விலக்கிய கிறிஸ்டா.

"போதையோடு போதை கலக்கிறது. இரண்டும் கலந்தால் என்னாகும் என்று யோசிக்கிறேன்."

கிறிஸ்டா அவனை விழுங்கி விடுவது போல் பார்த்தாள். கார்லோஸுக்கு போதை தலைக்கேறியது.

"உன் எடை என்ன?" என்று கேட்டான்.

"உன்னைவிட குறைவுதான்."

"பொய்!"

**தருவது— ரசிகன்**

"சொன்னால் நம்பு!"

"நான் எதையும் ஆராய்ந்துதான் நம்புவேன்."

கிறிஸ்டா கிளாஸை வைக்கக் குனிந்தாள். மார்புகளின் விளிம்புகள் கார்லோஸின் கண்களில் மின்னலடித்தன. வேண்டுமென்றே அவள் சற்று அதிகமாக குனிந்ததாகத் தெரிந்தது.


"சரி, எப்படி நம்பப்போகிறாய்! உன்னை எப்படி நம்பவைப்பது?" என்றாள். கார்லோஸ் எழுந்து அவள் அருகே சென்றான்.

"ஒரு போட்டி வைத்துப் பார்க்கலமா?"

"என்ன போட்டி?" என்றாள்.

"உன்னை நான் கைகளில் தூக்கிப் பார்க்கிறேன். கனம் தெரிந்துவிடும்."

"ஓ.கே." என்று எழுந்து வந்தாள். கார்



லோஸுக்கு உடம்பு முழுவதும் நெருப்பாய் கொதிப்பதுபோல இருந்தது.

அவளை இடைக்கு கீழே பின்புறமாக கைகளை கொடுத்து தன்னோடு அணைத்தபடி தூக்கினான். பாரமேயில்லை. பஞ்சுப் பொதிபோல் இருந்தாள். உயரத் தூக்கியதில் அவள் மார்புகள் கார்லோஸின் மார்பில் அழுந்தியபடி உயர்ந்து, அவன் முகம் எதிரே பட்டும்படாமல் உயர்ந்து தாழ்ந்தன.

கார்லோஸ் அடுத்த முயற்சியில் இறங்குவதற்கிடையில், கிறிஸ்டா அவன் பின்னங்கழுத்தை தன் கரங்களால் வளைத்து தன் மார்புகளுக்கிடையே அவன் முகத்தை புதைத்தாள்.

கிறிஸ்டா பஞ்சானாள். கார்லோஸ் நெருப்பு. நெருப்புக்குள் பஞ்சு காணாமல் போனது.

மார்ச் 29-1982.

கார்லோஸ் விதித்த காலக்கெடுவின் இறுதிநாள்.

பாரிஸ் நகருக்கும், ரெளலோனுக்கும் இடையில் போக்குவரத்தில் ஈடுபடும் கடுகதி ரயில் 'கப்பிடொல்' 500 பயணிகளை தனக்குள் வாங்கிக்கொண்டு விரைந்து சென்றது.

அதன் முதலாவது பெட்டியில் சக பயணிகளை மறந்து முத்தமிட்டுக் கொண்டிருந்த அந்த ஜோடியை பலர் அலட்சியம் செய்தனர். அங்கு அது வழமை என்பதால் வெறித்துப்பார்க்கும் சுவாரசியம் யாருக்கும் எழவில்லை.

அவள் மிக இளமையாக இருந்தாள். அவன் கைகள் தோளில் அழுத்தி பின்னர் முன்புறமாக கீழே நழுவி அத்துமீறுவதை அவள் அனுமதித்தாள். இடைக்கிடையே அவனது தொடையில் கிள்ளிவிட்டு சத்தமில்லாமல் சிரித்தாள். இடைக்கிடையே மட்டும் 'மெல்ல' என்று முணுமுணுத்தாள்.

கடுகதி ரயில் ஒரு தரிப்பிடத்தில் நின்ற போது இருவரும் அணைத்தபடியே இறங்கிச் சென்றனர்.

ரயில் நிலையத்தை தாண்டியதும் அவளது காதுக்குள் சொன்னான், "கதை



கார்லோஸ்

முடியப்போகிறது."

சொன்னது கார்லோஸ். சொல்லப்பட்டவள் கிறிஸ்டா.

ரயில் நிலையத்தில் மேலும் பயணிகளை அவசரமாக உள்ளே வாங்கிக்கொண்டு விரைந்த 'கப்பிடொல்' கடுகதி ரெயில்,

-பாதை நடுவே-

பெரும் சத்தத்துடன் வெடித்தது.

முதலாவது பெட்டி முழுவதும் தூளானது. ஏனைய பெட்டிகள் தப்பிவிட்டன.

ஐந்து பயணிகள் பலி.

27 பேர் படுகாயம்!

ஃபிரான்ஸ் அரசுக்கு கார்லோஸின் காலக்கெடு முடிந்துவிட்ட செய்தியை குண்டு வெடிப்புத்தான் தெரிவித்தது.

1982 ஏப்ரல் 3. பாரிசிலுள்ள இஸ்ரேலிய தூதரக அதிகாரி யாகோவ் பார்சி மன்ரோஸ் தனது இல்லத்திலிருந்து காரில் புறப்பட்டார்.

அவரது காரின் பின்னால்வந்து முந்திச் செல்ல முற்பட்ட காருக்கு சாரதி அனுமதித்தான்.

அருகே வந்த காரில் இருந்து ஒரு கை நீண்டது. அதில் பிஸ்டல் இருந்தது.

குண்டு பாய்ந்தது.

டப்-டப்-டப்-

சைலன்ஸர் பொருத்தப்பட்ட துப்பாக்கி. சத்தம் அதிகம் கேட்கவில்லை.

அதிகாரிமீது குறி தவறாத சூடு. தலை சிதறியது.

சாரதி நிதானிப்பதற்கு இடையில் அந்தக் கார் பறந்துவிட்டது.

ஒருகையால் காரைச் செலுத்தியபடியே, மறுகையால் பிஸ்டலை கச்சிதமாக இயக்கி கதையை முடித்துவிட்டான் கார்லோஸ்.

ஃபிரான்ஸ் பொலிஸ் வலை விரித்து தேடியது. ஃபிரான்ஸ் எங்கும் பதட்டம் தொற்றிக் கொண்டது.

'கார்லோஸ் ஃபிரான்சுக்குள் புகுந்து விட்டான். அடுத்த குறி எங்கே?' என்பதே பேச்சாக இருந்தது.

வழக்கம்போல ஃபிரான்ஸ் பொலிஸ் 'கார்லோஸை நெருங்கிவிட்டோம்' என்று அறிவித்தது.

அந்த செய்தியை ஃபிரான்ஸ் பத்திரிகைகள் வெளியிட்டபோது கார்லோஸும், கிறிஸ்டாவும் லெபனான் நாட்டில் மேற்கு பெய்ரூட்டில் சென்று இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

தங்கியிருந்த ஹோட்டலில் கிறிஸ்டா கேட்டாள், "அடுத்தது என்ன?"

"பூங்கொத்து வாங்க வேண்டும்?"

"ஏன்?"

"ஏப்ரல் 16 இல் தெரியும்." என்றான் கார்லோஸ் விபரீதமான திட்டத்துடன்.

(பதட்டம் தொடரும்)

**சென்றவாரம்**

ஃபிரான்ஸ்சில் கார்லோஸின் காதலி மகதலோனாவும், கார்லோஸின் ஆள் ஒருவனும் கைது செய்யப்பட்டனர். கார்லோஸ் கோபப்படுகிறான். ஃபிரான்ஸ் உள்துறை அமைச்சருக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்புகிறான். "30 நாட்களில் என் ஆட்கள் விடுதலை செய்யப்படவேண்டும். இல்லையானால் ஃபிரான்ஸ் மீது நடவடிக்கை எடுக்கப்படும்!" அதுதான் எச்சரிக்கை.

—இனி—

# ஒரு இரகசிய தந்திரம்

**கி**ரட்டோ கார்போ-ஹாலிவூட் படவுலகின் சூப்பர் ஸ்டாரினி. ஒரு காலத்தில் தன் பச்சைக் கண்களால் ரசிகர்களை பைத்தியமாக்கியவர்.

கார்போ முதலில் வேலை செய்தது ஒரு முடி திருத்தகத்தில். தாடி, மீசை மழிக்க வரும் ஆண்கள் முகத்தில் சோப்பு போடுவதுதான் கார்போவின் வேலை.



அதன்பின்னர் தொப்பி விளம்பரம் ஒன்றில் ஒய்யாரமாகப் போஸ் கொடுத்தாள். அந்த விளம்பரப் படம் கார்போவின் வாழ்க்கையையே மாற்றியமைத்தது.

அவளது ஒய்யாரத்தைக் கண்டு பிரமித்த ஹொலிவூட் இயக்குநர் ஒருவர் 'நீரோட்டம்' (The Torrent) என்ற படத்தில் நடிக்க வைத்தார். அவளுடைய உயரமும், பச்சை நிறக் கண்களும் அமெரிக்கர்களை பைத்தியமாக்கியது.

ஹொலிவூட்டில் கொடி கட்டிப் பறக்கத் தொடங்கினாள் கார்போ.

எக்கச்சக்கமான பணம். ஆனால் நிம்மதி மட்டும் இல்லை. கார்போவிடம் எப்போதும் ஒரு தவிப்பு அடி மனதில் இருந்தது.

விளைவு; புகழின் உச்சியில் இருந்தபோதே படவுலகில் இருந்து விலகி தனிமையை நாடினாள்.

மிக நெருக்கமான சிலருக்கு மட்டுமே தனது இரகசிய தொலைபேசி இலக்கத்தை கொடுத்திருந்தாள் கார்போ.

அந்த மிகச் சிலரில் கார்போவின் காதலர்களும் அடக்கம். தனிமை சலித்துவிட்டால் தனது காதலர்களில் ஒருவரை வரவழைத்து அவனுடன் கட்டிலை பகிர்ந்து கொள்வது கார்போவின் வழக்கம்.

கார்போவின் காதலர் ஒருவர் வெளியிட்ட இரகசியம் தான் சற்று விவகாரமானது.

அவர் என்ன சொன்னார் என்று பாருங்கள்.

"நானும் கார்போவும் ஒரு நாள் மெய்மறந்து காதல் லீலையில் ஈடுபட்டிருந்தோம். எல்லாம் முடிந்ததும் திடிரென்று தன் மேலிருந்த என்னை தள்ளிவிட்டாள் கார்போ. பின்னர் படுக்கையிலிருந்து குதித்து உடற் பயிற்சி செய்ய ஆரம்பித்துவிட்டாள். கூடவே சுவீடன் நாட்டுப்புறப்பாட்டு ஒன்றையும் அவள் உதடுகள் முணுமுணுத்துக் கொண்டிருந்தன.

நான் ஒன்றும் புரியாமல், 'என்ன இது' என்று கேட்டேன். அதற்கு கார்போ சொன்னாள், "கர்ப்பம் தரிக்காமல் இருப்பதற்கு இதுதான் என் தந்திரம்."

உண்மையோ பொய்யோ கார்போவுக்கு இந்த தந்திரம் கடைசிவரை கைகொடுத்தது என்கிறார் அந்தக் காதலர்.

# டயனாவின் இரகசியக் கடிதங்கள்

பிரிட்டிஷ் இளவரசி டயானாவுக்கும் முன்னாள் இராணுவ மேஜர் ஜேம்ஸ் ஹெவிட்டுக்கும் இடையில் காதல் இருந்ததும், அது கட்டில் வரை சென்றதும் தெரிந்த செய்தி.

பி.பி.சி. தொலைக்காட்சி பேட்டியில் ஜேம்ஸ் ஹேவிட்டுடன் தான் உறவு கொண்டதை டயானாவே பகிரங்கமாக ஒப்புக் கொண்டார்.

டயானா அப்படி ஒப்புக்கொள்ளக் காரணமாக இருந்தவை கடிதங்கள். டயானா ஜேம்ஸ் ஹேவிட்டுக்கு எழுதிய கடிதங்கள்.

டயானாவுக்கு குதிரையேற்றப் பயிற்சி கொடுக்கச் சென்றவர் ஜேம்ஸ் ஹெவிட். பயிற்சியின் போது ஏற்பட்ட நெருக்கத்தை சாதகமாக்கிக் கொண்டார் ஜேம்ஸ் ஹெவிட்.



இப்போது பணத்துக்காக ஆசைப்பட்டு டயானா எழுதிய கடிதங்களையெல்லாம் நல்ல விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார் ஜேம்ஸ் ஹெவிட்.

அது மட்டுமா சமீபத்தில் தொலைக் காட்சி பேட்டி ஒன்றில் தோன்றி தனக்கும் டயானாவுக்கும் ஏற்பட்ட நெருக்கம் பற்றி விலாவாரியாக விபரித்திருக்கிறார். 38 நிமிடம் ஒளிபரப்பான அப் பேட்டிக்காக பல இலட்சம் ரூபாய்கள் கிடைத்ததாம். (காதல் துரோகி)

ஜேம்ஸ் ஹேவிட் டயானா உறவு தொடர்பாக ஜேம்ஸ் ஹேவிட் சொல்ல சொல்ல எழுதப்பட்ட புத்தகம் ஒன்று ஏற்கெனவே வெளியாகியுள்ளது. அதற்காகவும் கோடிக்கணக்கான பணம் கிடைத்தது ஜேம்ஸ் ஹெவிட்டுக்கு.

டயானா ஜேம்ஸ் ஹெவிட்டுக்கு எழுதிய காதல் ரசம் சொட்டும் கடிதங்களில் சில பகுதிகள் இவை.

**கடிதம்1**

அன்பே! நீங்கள் என்னைத் தொட்டு எவ்வளவு நாட்கள் ஆகிவிட்டன. உங்களது முறுக்கேறிய உடம்பின் ஸ்பரிசம் இனி ஒரு முறை கிட்டாதா என்று ஏங்கிக்கொண்டிருக்கிறேன். உங்களைச் சந்திக்க முன் காதலின் அர்த்தம் எனக்கு தெரிந்திருக்கவில்லை...."

**கடிதம் 2**

நான் உங்கள் அம்மாவைக் காணச் சென்றிருந்தேன். அப்படியே உங்கள் படுக்கையறைக்கு சென்று நீண்ட நேரம் தனியாக அமர்ந்திருந்தேன். உங்கள் தலையணையில் என் கன்னத்தைப் புதைத்து, முன்பு நீங்களும் நானும் இதே படுக்கையை பங்கு போட்டதை நினைத்துக் கொண்டேன்.

**கடிதம் 3**

"மீண்டும் உங்கள் கரங்களில் நான் படுத்துறங்கும் நாள் வராதா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன்."

இக் கடிதங்கள் 1991 இல் எழுதப்பட்டவை. வளைகுடாப்போரில் ஈடுபட ஜேம்ஸ் ஹெவிட் யுத்தகளம் சென்ற போது எழுதப்பட்டவை.

நாள் ஒன்றுக்கு மூன்று கடிதங்கள் கூட டயானாவால் எழுதப்பட்டன.

"ஒவ்வொருநாளும் நான் கடவுளை வேண்டுவதெல்லாம் நீங்கள் பத்திரமாக வீடுதிரும்பிவர வேண்டும் என்பதுதான். இன்று சேர்ச்சில் உங்களுக்காக ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றிவைத்தேன்" என்றும் ஒரு கடிதத்தில் எழுதியுள்ளார் டயானா.

ஆனால்-ஜேம்ஸ் ஹெவிட் தன்மீது டயானா வைத்திருந்த காதலையும், நம்பிக்கையையும் நல்ல விலை கூறி விற்றுக்கொண்டிருக்கிறார்.

பாவம் டயானா வெறுத்துப்போய் இருக்கிறார்.

# நடிகரின் நல்ல மனம்

ஹொலிவூட் படவுலகில் பிரபலமான நடிகர் டோம் க்ரூஸ்.

தனது படப்பிடிப்பை முடித்து விட்டு நள்ளிரவு நேரத்தில் தனது காரில் சென்றார் டோம் க்ரூஸ். லொஸ் ஏஞ்சல்ஸ் வழியாக அவர் சென்று கொண்டிருக்கும் போது நடு வீதியில் ஒரு பெண் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக் கண்டார். யாரோ அவளை காரால் மோதிவிட்டு பறந்து விட்டார்கள்.



வேறு யாராவது என்றால் நமக்கேன் வம்பு என்று ஒதுங்கிச் சென்றிருப்பார்கள். ஆனால் டோம் க்ரூஸ் இரக்க சிந்தனையுள்ளவர். நடுவீதியில் கிடந்த பெண்ணை தனது காரில் போட்டுக்கொண்டு வைத்திய சாலைக்கு சென்றார்.

ஒருவாரகாலமாக சிகிச்சை நடந்தது. மொத்தச் செலவு கிட்டத்தட்ட 5 இலட்சம் ரூபாய். தனது சொந்தப் பணத்தில் அதனைச் செலுத்தினார் டேம்-க்ரூஸ்.

தான் செய்த உதவியை வெளியே யாருக்கும் சொல்லவேயில்லை. மருத்துமனை ஊழியர்கள் மூலம் செய்தி வெளியே கசிந்துவிட்டது. பத்திரிகைகள் உடனே வெளியிட்டன. விஷயம் அறிந்த அமெரிக்க அதிபர் பில் கிளிண்டன் நடிகரை அழைத்து பாராட்டியிருக்கிறார்.

'தான் செய்தது ஒன்றும் பெரிய உதவியே அல்ல.' என்கிறார் அடக்கமாக டோம் க்ரூஸ்.

எத்தனை பேருக்கு இப்படி மனம் வரும்?!


வாரமலர் தினமுரசு
மே.19–25,1996

www.padippakam.com

# கல்யாணமாம் கல்யாணம்





சீனாவில் உள்ள ஷாங்காய் என்னும் பகுதியில் உள்ள காதலர்களுக்கு ஒரே கொண்டாட்டம். கொண்டாட்டத்துக்கு காரணம் இளைஞர் தினத்தையொட்டி காதலர்களையெல்லாம் கல்யாணம் செய்ய அனுமதி கொடுத்து விட்டார்கள் பெற்றோர்கள். திருமணமும் புதுமையாக நடந்தது. வோல்க்ஸ் வேகன் கார்களை வரிசையாக நிறுத்தி அதன் அருகே ஜோடிகளை மோதிரம் மாற்ற வைத்தனர். மோதிரம் மாற்றிய ஜோடிகள் ஒருநாள் முழுக்க காரில் வலம் வரவும் ஏற்பாடு செய்யப்பட்டது. செலவுகளை ஷாங்காய் தொழிலதிபர்கள் ஏற்றுக் கொண்டனர். ஆயிரக்கணக்கான ஜோடிகள் குவிந்திருக்க, பல்லாயிரம் மக்கள் இந்த புதுமையான திருமணத்தைக் கண்டு களித்தனர்.

## அரிதிலும் அரிது

அணிவகுத்து நிற்கும் இந்த சின்னமனிதர்கள் யார் என்ற சந்தேகம் வருகிறதல்லா. எல்லாமே சுடு மண் சிற்பங்கள். சீனாவில் உள்ள சுசோ என்ற இடத்தில் அகழ்வாராய்ச்சி செய்தபோது இவை கிடைத்தன. மொத்தமாக நாலாயிரம் சிற்பங்கள் இங்கு காணப்படுகின்றன. போருக்கு அணிவகுத்து செல்லும் காட்சியை யாரோ ஒரு சிற்பி கலை வடிவமாக வடித்துள்ளார். சீனாவில் இதுவரை கண்டெடுக்கப்பட்ட பழங்காலச் சிற்பங்களில் இவைதான் தலை சிறந்தவையாக கருதப்பட்டுள்ளன.

நாலாயிரம் சிற்பங்களையும் தத்ரூபமாக வடித்துவிட்டுப் போன அந்தச் சிற்பியின் பெயர்தான் தெரியவில்லை. சிற்பி இந்தச் சிற்பங்களில் வாழ்கிறார் அல்லவா. அதுபோதும்.

## டயானாவின் ஆசை



அண்மையில் மிகவும் வறிய நாடான காமரூனைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவனுக்கு இலண்டனில் இருதய அறுவை சிகிச்சை நடந்தது.

நான்கு மணி நேரம் இடம்பெற்ற இந்த அறுவைச்சிகிச்சையை மருத்துவ நிபுணர்களைத் தவிர வேறொருவரும் கண்காணித்தார். அவர் வேறு யாருமில்லை, ஏழை நாடுகளின் நோயுற்ற குழந்தைகளுக்கு உதவும் 'நம்பிக்கைச் சங்கிலி' என்ற சேவை அமைப்புக்கு உதவிவரும் டயானாதான்.

"எனக்குக் குழந்தைகள் என்றால் உயிர். இந்த ஏழைச் சிறுவனுக்கு நடந்த அறுவைச் சிகிச்சையை நேரடியாகப் பார்த்தது குறித்து நான் பெருமைப்படுகிறேன்" என்றார் டயானா, பத்திரிகைப்பேட்டியொன்றில். (படத்தில் வலது கீழ் மூலையில் டயானா காணப்படுகிறார்)

## நம்பிக்கை மரம்

மூடநம்பிக்கைகளுக்கு எதிராக புதிய கருத்துக்கள் பிறந்த இடம் சோவியத் யூனியன். இப்போது சோவியத் உடைந்து சிதறியபின்னர் கதையே வேறு. சகல மூடநம்பிக்கைகளும் அங்கு சுதந்திரமாக பரவிவருகின்றன.

படத்தில் மரத்தை கட்டியணைத்துக் கொண்டிருப்பவர் ரசிய அதிபர் யெல்சின். ஏன் கட்டிப்பிடிக்கிறார் தெரியுமா? யரோசால் என்ற இடத்தில் 100 ஆண்டு பழமையான மரம் ஒன்று உள்ளது. அதனை கட்டிப் பிடிப்பவர்களுக்கு நல்லது நடக்கும் என்பது நம்பிக்கை. விரைவில் ரசியாவில் ஜனாதிபதித் தேர்தல் வரப்போகிறது. யெல்சினின் நாற்காலி ஆடத்தொடங்கிவிட்டது. அதுதான் ஓடிப்போய் மரத்தை கட்டிப்பிடித்திருக்கிறார்.

பதவி கிடைக்கும் என்றால் பேயையும் கட்டியணைக்க தயாராக இருப்பதுதான் அரசியல். ரசியா மட்டும் அதற்கு விதிவிலக்காக முடியுமா?



## தகவல் பெட்டி

பிரபல பொப் இசைப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் கோடி கோடியாக சம்பாதித்து வைத்திருக்கிறார். படத்தில் இருக்கும் அரண்மனையும் அவருக்குச் சொந்தமானதுதான். இதனை 35 கோடியே 50 இலட்சம் ரூபாய் கொடுத்து வாங்கினார் ஜாக்சன். அந்த விலைக்கு வாங்குமளவுக்கு இதில் என்ன விசேஷம் என்கிறீர்களா? ஃபிரான்சில் உள்ள இந்த அரண்மனை 15ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதில் 7 கோபுரங்களும் 82 அறைகளும், ஒரு சுரங்கமும் இருக்கின்றன.


அரண்மனையில் மாட்டுவதற்காக மைக்கேல் ஜாக்சனின் படத்தை இருவர் தூக்கிச் செல்கிறார்கள். பணம் இருந்தால் இப்படியான அரண்மனைகளை வாங்கி வைப்பது ஒரு பொழுது போக்கு.




## ஒலிம்பிக்கில் மிரட்டல்

அமெரிக்காவில் உள்ள அட்லாண்டா நகரில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ளன. அதற்கான ஏற்பாடுகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. போட்டி நடைபெறும் அரங்கத்திற்கு வெளியே இரண்டு நிர்வாண மனிதர்களது சிலைகள் (ஒன்று ஆண், மற்றது பெண்) நிறுவப்பட்டுள்ளது. அது என்னவோ தெரியாது, 1984 இல் லொஸ் ஏஞ்சல் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றபோதும் இதே சிலைகள் அங்கு நிறுவப்பட்டு இருந்தன. பெண்கள் சிலர் முகம் சிவந்த போனார்களாம். இந்த முறையும் மறக்காமல் வாயிலில் நிர்வாணமாக சிலைகளை நிறுத்தி மிரட்டுகிறார்கள். ஒலிம்பிக் போட்டிக்கும் இந்த நிர்வாண சிலைகளுக்கும் என்ன சம்பந்தம்? யாராவது தெரிந்தால் சொல்லுங்களேன்.

## பணம் இருந்தால் மனம் உண்டு





படிப்பகம்

www.padippakam.com

# சினிவிசிட்

## அரை செஞ்சரி

திமுககூட்டணியின் அமோக வெற்றியால் குசியாகியுள்ளவர்களில் ஒருவர் நெப்போலியன்.

'சிவன்' படத்தில் நெப்போலியன், அருண்பாண்டியன் கூட்டணி பிரமாதப்படுத்தப்போகிறதாம்.

50 படங்களில் நடித்து முடித்து விரைவில் அரைச் செஞ்சரி அடிக்கப்போகிறார் நெப்போலியன்.

தான் நடிக்கும் படங்களில் தேவையில்லாமல் தலையிட மாட்டாராம் நெப்போலியன். "கமல், ரஜினி போன்றவர்கள் தலையிட்டால் ஈடுபாடு என்பார்கள். நான் தலையிட்டால் வேறமாதிரிப் பேச்சு வரும்." என்கிறார் நெப்ஸ்.

## பிள்ளைகள் 23

'மாணிக்கம்' படத்தில் ராஜ்கிரணின் அப்பாவாக நடிக்கிறார் விஜயச்சக்கரவர்த்தி அவருக்கு எட்டு மனைவிகள். 23 பிள்ளைகள். போதாக்குறைக்கு குடியில் வீழ்ந்து கிடக்கிறார். ஸ்ரீதேவியின் மகனான ராஜ்கிரண்தான் தனது சகோதரங்களை பராமரித்து வளர்த்தெடுக்கிறார். அவர்தான் மாணிக்கம். ராஜ்கிரண், வனிதா விஜயகுமார் நடிக்கும் 'மாணிக்கம்' படக்கதை அதுதான். விரைவில் திரைக்கு வருகிறது.

இசை; இளையராஜாவின் மகன் கார்த்திக் ராஜா. நன்றாக செய்துள்ளாராம்.

## கன்னடத்தில் கவர்ச்சி மழை

தன்னால் முடிந்தளவுக்கு கவர்ச்சி காட்டிப் பார்த்தார் வினிதா. வாய்ப்புக் கிடைப்பதற்காகவும் கடுமையாக உழைத்தார். தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், முன்னணி ஹீரோக்களிடம் எல்லாம் அனுசரிக்கத் தெரிந்தவர் என்ற பெயரையும் சம்பாதித்தார்.

அப்படியிருந்தும் தமிழில் நம்பர் வன் இடத்தைப் பிடிக்கவில்லை. தெலுங்குப் பக்கம் சென்று அங்குள்ள ரசிகர்களுக்கு தன் அழகைக் காட்டினார். அதுவும் எடு படவில்லை. இப்போது ஒரே பாய்ச்சலாக கன்னடப் படவுலகம் சென்று விட்டார்.

கன்னடப்படவுலகில் வினிதாவை தட்டிக் கொடுத்திருப்பவர் விஷ்ணுவர்த்தன். இருவரும் இணைந்தும், பிணைந்தும், நடித்து வருகிறார்கள். படத்தின் காதல் காட்சிகளில் கவர்ச்சி மழை சொட்டுகிறதாம். படத்தின் பெயர் 'தானி'.

## மினி சினி

* கே.பாக்யராஜின் சொந்தப் பட நிறுவனமான பாக்யம் சினி கம்பைன்ஸ் அண்மையில் ஃபிலிம் சேம்பரில் புதிய படமொன்றின் பெயரைப் பதிவு செய்துள்ளது. இப்படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'இரட்டை ஜடை வயது'.
* அர்ஜுன்-மீனா நடித்த செங்கோட்டை தமிழில் வெளியான அதே நேரத்தில் தெலுங்கிலும் மொழிமாற்றப்பட்டு வெளியானது. தெலுங்கில் இதன் பெயர் 'எர்ர கோட்டா'.
* தமிழில் நடிக்க வரும் முன்பு சில கன்னடப்படங்களில் நடித்திருந்தார் குஷ்பு. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் கன்னடப்படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்.
* 'ஆசை' படத்தை அடுத்து மணிரத்னம் தயாரிக்கும் அடுத்த படத்தையும் வஸந்த் இயக்குகிறார் என்பது தெரிந்த செய்தி. இந்தப் படத்தில் கதாநாயகியாக நடிக்க இருப்பவர் தீப்தி என்ற மொடல் அழகி என்பது புதிய செய்தி.
* ஜெயராம் மலையாளத்தில் நடித்து வெற்றி பெற்ற 'அனியன் பாவா சேட்டன் பாவா' தமிழில் தயாராகவிருக்கிறது. இப்படத்தை 'தாலாட்டுக் கேக்குதம்மா' ராஜ் கபூர் இயக்கவிருக்கிறார்.
* இயக்குநர் சிகரம் கே. பாலச்சந்தர் இயக்கும் 'கல்கி' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடிக்கிறார் ரகுமான். இவர் இதற்கு முன்னர் கே.பாலச்சந்தரின் 'புதுப்புது அர்த்தங்கள்' படத்தில் கதாநாயகனாக நடித்தவர்.
* 'மிஸ்டர் ரோமியோ'வில் பிரபுதேவாவுடன் நடித்து வரும் இந்தி நடிகை ஷில்பா ஷெட்டி தெலுங்கில் நடித்த 'சாகச வீருடு சாகர கன்யா' வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. வெங்கடேஷ் ஹீரோவாக நடித்துள்ள இப்படம் விரைவில் தமிழில் வெளிவரவுள்ளது.
* விஜயசாந்தி-ஜெயராம் இணைந்து நடிக்கும் 'சத்ய ஜோதி' படம் விஜயசாந்திக்கு 135 வது படம், ஜெயராமுக்கு 125 வது படம், இப்படத்தின் இயக்குநரான சாய்பிரகாஷிற்கு 50 வது படம் போன்ற பெருமைகளைக் கொண்டது.
* என்.கே.விஸ்வநாதன் இயக்கத்தில் ராம்கி-ரஞ்சிதா நடிப்பதாக இருந்த 'சிவபார்வதி' படத்தில் தற்போது ராம்கிக்குப் பதிலாக பாண்டியராஜனை நடிக்க வைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.
* 'காதலன்' படத்தில் 'பேட்ட ராப்...', 'முத்து' படத்தில்' கொக்கு சைவக் கொக்கு...' போன்ற பாடல்களைப் பாடியுள்ள தேனி குஞ்சரம்மா 'சக்தி' படத்தில் ஒரு பாடலைப் பாடி நடனமும் ஆடியுள்ளார்.

## சிரஞ்சீவிக்கு ஜோடி

தமிழில் அரவிந்தசாமியின் ஜோடியாக 'புதையல்' படத்தில் நடித்து வரும் ஷாக்ஷி, தெலுங்கில் சிரஞ்சீவிக்கு ஜோடியாக புதிய படமொன்றில் நடித்து வருகிறார்.



கார்த்திக்-கனகா
படம்:-கட்டப்பஞ்சாயத்து



நெப்போலியன்-சங்கவி
படம்:-பகவத் சிங்

## 'ஆசை' நாயகன்

அஜித்குமாரை அவர் நடித்த 'ஆசை' படத்தோடு இணைத்து ஆசை நாயகன் அஜித் என்று அழைக்கின்றனர்.

'ஆசை நாயகன்' என்றால் வேறு ஒரு அர்த்தமும் வருகிறதே என்று கேட்டால் நமட்டுச்சிரிப்பை உதிர்க்கிறார் அஜித்குமார். ரசிகைகள் மத்தியில் அப்படியொரு பெயர் கிடைப்பது நல்லதுதானே என்கிறார் கண்களை சிமிட்டியபடி.

சமீபத்தில் அஜித்குமாரின் பிறந்நாள் வந்தது (மே1) அதிகாலையில் இருந்தே போனில் ரசிகைகளின் வாழ்த்துக்கள். மாலையில், இளம் நடிகைகளது விருந்துபசார அழைப்புக்கள். யாருடைய அழைப்பை ஏற்பது என்று முடிவு செய்ய முடியாமல் தவிர்த்துப் போனார் அஜித். இறுதியாக அவர் சென்றது ஹீரா கொடுத்த விருந்துக்கு.

## வந்தான்-இந்தியன்

'இந்தியன்' படம் பலத்த எதிர்பார்ப்புக்கள் மத்தியில் இந்தியாவெங்கும் வெளியாகியுள்ளது.

இந்தியன் 'இந்துஸ்தான்' என்ற பெயரில் வெளியாகியுள்ளது. சன்னி தியோல் நடிக்கும் படம் ஒன்று 'இந்தியன் என்ற பெயரில் வெளியாக இருப்பதால், கமல் 'இந்துஸ்தான்' என்ற பெயரை இந்தியில் வைக்கச் சொன்னாராம்.'

பல விதமான மேக்-அப், மனிஷா, ஊர்மிளா இருவரதும் மயக்கும் காதல் காட்சிகள் என்று படம் முழுக்க பிரமாண்டம் காட்டியிருக்கிறார்கள்.

திரையிடப்பட்டு ஒரு வாரத்திற்குள் பயங்கரமான கூட்டம். செமத்தியான வசூல்.

குருதிப்புனலைவிட, 'இந்தியன்' அருமையாக வந்திருக்கிறது என்கிறார்கள் ரசிகர்கள்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தை வைத்து மசாலா கலந்து, வித்தியாசம் காட்டி, பம்பாய் அழகிகளை சாறு பிழிந்து கமலும், இயக்குநர் சங்கரும் கடுமையாக உழைத்திருக்கிறார்கள்.

## 'அப்துல்லா ராமன்'

தனது படங்களில் ஏதாவது வித்தியாசமான கருத்தைச் சொல்ல விரும்புபவர் பாலுமகேந்திரா. தனது புதிய படம் ஒன்றில் மதப் பிரச்சனைகளால் ஏற்படும் விளைவுகளை காட்டப்போகிறார்.

படத்திற்கும் கதைக்கும் ஏற்ற பெயர்தான் சூட்டியிருக்கிறார். படத்தின் பெயர்: 'அப்துல்லா ராமன்'. 'ஆசை' படத்தில் நடித்த சுவலட்சுமிதான் கதாநாயகி. கதாநாயகன் தேர்வு நடக்கிறது.

## பெண்ணாகும் கோவிந்தா

தமிழில் கமல்-மீனா நடிக்கும் படம் 'அவ்வை சண்முகி'. கமல் பெண் வேடமிட்டு ஆயாவாக நடிக்கும் படம். இந்தியில் 'ஆன்ட்டி' என்ற பெயரிலும் ஒரு படம் தயாராகிறது. கோவிந்தா-ரம்பா ஜோடி.

இந்த இரண்டு படமும் 'மிஸஸ் டவுட் ஃபயர்' என்னும் ஆங்கிலப் படத்தை தழுவியே எடுக்கப்படுகின்றன. 'ஆன்ட்டி' படத்தை தயாரிப்பவர் கோவிந்தா. பெண் வேடத்திலும் அவர்தான் நடிக்கிறார்.

## கமலிடம் மயங்கிய மனீஷா

மனிஷா கொய்ராலா பம்பாய் திரையுலகில் பரபரப்பாக பேசப்படும் நடிகை.

'இந்தியன்' படத்தில் கமலின் முகத்தை பார்த்துக்கொண்டு காதல் காட்சிகளில் நடிக்கும் போது உணர்ச்சிவசப்பட்டாராம் மனிஷா.

"கமலின் கண்களில் ஒரு காந்த சக்தி இருக்கிறது. எந்தப் பெண்ணாலும் அந்தக் கண்களை நேராகச் சந்திக்க முடியாது.

காதல் காட்சிகளில் முரட்டுத்தனமாக நடிக்கும் நடிகர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் கமல் மென்மையாக கையாளுகிறார். அதன் காரணமாக நாமும் ஒத்துழைத்து நடிக்க முடிகிறது. கமல் ரியலி கிரேட். ரொமாண்டிக் ஹீரோ." என்று புகழுகிறார் மனிஷா.

'இந்தியன்' படத்தில் நடித்தது 'பம்பாய்' படத்தின் பின்னர் கிடைத்த மற்றொரு அதிஷ்டம் என்றும் சொல்லி இருக்கிறார் மனிஷா.

"கமலிடம் உங்களுக்குப் பிடித்த விஷயம் எது?" என்ற கேள்விக்கு மனிஷாவின் பதில் இது: "ஒவ்வொன்றாக குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. மொத்தமாக கமலை முழுவதும் பிடிக்கும்."

'இந்தியன்' படத்தின் பின்னர் தனது மவுசும் உயரும் என்பதால் சம்பளத்தையும் உயர்த்திவிட்டார் மனிஷா.

## மாறும் உருவம்

'தாயகம்' படத்தில் ஆளே அடையாளம் தெரியாதளவுக்கு மேக்-அப் போட்டு நடித்தார் மன்சூர் அலிகான். தாயகம் பட வெற்றிக்கு அதுவும் ஒரு பிரதான காரணமாகியது. மன்சூருக்கும் பலத்த பாராட்டுக்கள்.

இப்போது 'மாயாவி' என்னும் படத்திலும் தனது தோற்றத்தை மாற்றிக்கொண்டு நடித்துவருகிறார். ஆங்கிலப் படமான 'பேட் மேன்தான்' கிட்டத்தட்ட மாயாவி படக்கதையும். ஜெயதேவி இயக்குகிறார்.

மன்சூரலிகானுக்கு ஜோடியாக நடிக்க தமிழில் உள்ள நடிகைகள் பலரை அணுகினார்கள். அனைவருமே மறுத்துவிட்டார்கள். அதனால் பம்பாயிலிருந்து ருசிகா சகாய் கதாநாயகியாக நடிக்கிறார்.



கமல்-மனிஷாகொய்ராலா
படம்:-இந்தியன்



படிப்பகம்

www.padippakam.com

## மானம் குவிந்தது

பத்தில் சிங்கப்பூர்-மலேசியா போன்ற நக்கு நட்சத்திர விழாக்களுக்கு நடிகைகள் திருப்தியோடு திரும்பி றார்கள். பை நிறைய வருமானத் துடன் திரும்பியிருப்பதால்தான் அந்த சந்தோசம்.

நடிகைகளில் மீனாவுக்குத்தான் பெரும் புள்ளிகளிடமிருந்தும் பாராட்டுக்களும், பரிசுகளும் குவிந்தனவாம். மீனாவின் கலைச் சேவை கண்டு அசந்துவிட்டார்களோ?

## பிரபுதேவாவின் வாட்டம்

ராசய்யா, லவ் பேர்ட்ஸ், படங்களின் தோல்வியால் பிரபுதேவாவின் மார்க்கெட் மெல்ல, மெல்ல சரியத் தொடங்கிவிட்டது. இளைஞர்கள், இளைஞிகள் மத்தியிலும் ஆரம்பத்தில் இருந்த பிரபுதேவா வெறி இப்போது இல்லை.

மிஸ்டர் ரோமியோவும் கையைவிட்டால் பிரபுதேவாவின் மார்க்கெட் மேலும் சரிந்துவிடும்.

நடன அழகியுடன் தன் திருமணம் நடக்கவில்லை என்று மறுப்பறிக்கை விட்டாரல்லவா. அதனால் நடன அழகியும் வெறுத்துப் போய் இருக்கிறார். அறிக்கைவிட வேண்டிய காரணத்தை விளக்கியும் கூட அழகி சமாதானமாகவில்லையாம். மன முடைந்து காணப்படுகிறார் பிரபு தேவா.

## உள்ளே வெளியே

சங்கீதமான நடிகையைப் பற்றி தமிழக பிரபல சஞ்சிகை வெளியிட்டுள்ள சமாச்சாரம் இது.

நடிகையை ஒப்பந்தம் செய்யச் சென்றார் ஒரு தயாரிப்பாளர். நடிகை படப்பிடிப்புக்கு சென்றுள்ளதாக சொன்னாராம் தாய்க்குலம். தாயாரிடம் அட்வான்ஸை கொடுத்துவிட்டு கிளம்பினார் தயாரிப்பாளர்.

கிளம்பும்போது பாத்ரூம் எங்கே என்று இடம் கேட்டுப் போனவர் தவறுதலாக பாத்ரூமின் பக்கத்து அறைக்கதவைத் திறந்துவிட்டார்.... அங்கே அவர் கண்ட காட்சி.. நடிகையும், அவரது நண்பரும் படு ஜாலியாக இருந்தார்களாம்.

## இயந்திர மனிதன் இறக்குமதி

நெப்போலியன்- சுவாதி இணைந்து நடிக்கும் படம் 'சிவன்'.

நெப்போலியனும்-சுவாதியும் நடித்த பாடல் காட்சி ஒன்று படமானது. இயக்குநரையும், ஒளிப்பதிவாளரையும் தவிர எவருமே உள்ளே அனுமதிக்கப்படவில்லை. அந்தளவுக்கு கவர்ச்சியான சமாச்சாரம். நெப்போலியனும், சுவாதியும் மழையில் நனைந்துகொண்டு பாடுவதுபோல காட்சி. கடும் மழையாக தண்ணீர் பீய்ச்சியடிக்கப்பட்டும் நெப்போலியனுக்கு மட்டுமல்ல சுவாதிக்கும் குளிரே தெரியவில்லையாம்.

'சிவன்' படத்தில் நடிப்பதற்காக ஒரு இயந்திர மனிதன் (ரொபோ) ஹொங்ஹொங்கில் இருந்து இறக்குமதியாகியுள்ளது.

பொலிஸ் அதிகாரியாக நடிக்கிறார் ராதிகா. வேலு பிரபாகரன் படத்தை இயக்குகிறார்.



உதயகுமார்-ரசிகா
படம்:-பெரிய ராமசாமி சின்ன ராமசாமி

## 'சோத்துக் கட்சியில்' பம்பாய் அழகி

பார்த்திபன் வித்தியாசமாக பெயர் வைத்துள்ள படம் 'சோத்துக்கட்சி' பெயரும், படப் பூஜையும் பலமாதங்களுக்கு முன்னரே ஒ.கே.. ஆனால் கதாநாயகி தான் தகுந்த இலட்சணங்களுடன் கிடைக்கவில்லை.

பல இடங்களிலும் ஆழமாக தேடியதில் தேறியிருப்பவர் பம்பாய் அழகி. பெயர், சிம்ரா. அவருக்கு இப்போதுதான் 18வயது. நல்ல வாளிப்பான தோற்றம். பார்த்ததும் பிடித்துவிட்டதாம் பார்த்திபனுக்கு பிறகென்ன, கதாநாயகியாக மாற்றிவிட்டார்.

## காதலும் காட்சியும்

நடிகை ஸ்ரீதேவியின் தங்கை மகேஸ்வரி நடிக்கும் படம் இதயமே, இதயமே. மகேஸ்வரியின் ஜோடியாக நடிப்பவர் சக்கரவர்த்தி. இருவருக்கும் இடையே படப்பிடிப்பில் காதல் மலர்ந்துவிட்டது.

இருவரது காதலையும் அறிந்த இயக்குநர் காதல் காட்சிகளில் அவர்களது நெருக்கத்தை பயன்படுத்தியுள்ளாராம். காதலர்தானே என்ற எண்ணத்தில் உதடு, கழுத்து, கன்னம், தொப்புள், கைகள் என்று சகல வகை முத்தங்களுக்கும் அனுமதித்திருக்கிறார் மகேஸ்வரி.

## விஜயசாந்தியின் கோபம்

"நீங்கள் நடிக்கும் படங்களில் கதாநாயகனை ஒரம்கட்டிவிடுகிறீர்களே" என்று நிருபர் ஒருவர் கேட்க டென்ஷனாகிவிட்டார் விஜயசாந்தி.

"இதே கேள்வியை ஏன் நீங்கள் கதாநாயகர்களிடம் கேட்டதில்லை. கதைகள் கதாநாயகனுக்காக எழுதப்பட்டால் கதாநாயகி டம்மியாகிவிடுகிறார்.

அதுபோல கதாநாயகிக்கும், ஆக்ஷனுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் படங்களில் என்னை வைத்து கதை பண்ணுகிறார்கள்.

எல்லாப் படங்களும் அப்படியல்ல. நானும் ஜெயராமும் நடிக்கும் 'சத்யஜோதி' படத்தில் இருவருக்கும் சமமான பாத்திரம்தான்." என்று விளக்கம் சொன்னார் விஜயசாந்தி.

'வேட்டைக்காரி' படத்தில் சிங்கம், புலி, பாம்புகள் மத்தியில் நடித்தபோது முதலில் பயந்தாராம். பின்னர் பழகிவிட்டதாம்.

## மீனாவுக்கு கொடுத்தார் கமல்

கமலிடம் முத்தம் பெறுவதற்கு கதாநாயகிகள் யாரும் மறுப்பதாகத் தெரியவில்லை. ரேகா, கௌதமி, சுகன்யா, மனிஷா வரிசையில் இப்போது சேர்ந்திருப்பவர் மீனா.

'அவ்வை சண்முகி' படத்தில் மீனாவுக்கு ஆழமாக ஒரு முத்தம் கொடுத்தார் கமல். முதலில் சொல்லாமல் திடீரென்று கொடுப்பதுதான் கமல் ஸ்டைல். மீனாவுக்கும் அப்படித்தான் கொடுத்தார். ஆனால் மீனாவோ எதிர்பார்த்திருந்தவர் போல ஒத்துழைத்தார்.

காட்சி முடிந்ததும் மீனாவின் முகத்தில் வெட்கப் புன்னகை குடியேறி இருந்ததாம்.



ராஜஸ்ரீ
படம்:-ஆவதும் பெண்ணாலே அழிவதும் பெண்ணாலே

## ...ஸ்ரீயின் கொக்கி

...ரதிராஜாவால் 'கருத்தம்மா' ...் அறிமுகமானவர் ராஜஸ்ரீ. ...யாக நடிக்காதே. திறமையைக் ... உடல் அழகை இலைமறை ... வெளிப்படுத்து என்றெல்லாம் ...ான ஆலோசனை சொல்லியிருந் ... குருநாதர்.

...லாசனைப்படி நடந்துபார்த்தார் ... யாருமே அவரைத் திரும்பிப் ...வில்லை. முடிவை மாற்றிக் ...டார். ஆடைகளை நழுவ விட ...ந்தார். வாய்ப்புக்கள் கதவைத் ... தொடங்கின.

...வதும் பெண்ணால், அழிவதும் ...ணால்' படத்தில் தனது திறமை ...தையும் பளிச்சிடச் செய்து ...ளுக்கு கொக்கி போட்டிருக் ...ராஜஸ்ரீ. படம் வெளியாகி நன்றாக ...ல், ராஜஸ்ரீயின் மார்க்கெட் ...க்கமாக உயர்ந்துவிடும்.

## இயக்குவதால் இலாபம்

இயக்குநராக இருந்து பலரை நடிக்க வைத்த ஆர்.வி. உதயகுமார். இப்போது அவரே நேரடியாக களத்தில் இறங்கி விட்டது.

சின்னராமசாமி, பெரிய ராமசாமி படத்தில் அவர்தான் கதாநாயகன். மற்றொரு கதாநாயகன் ஜெயராம். உதயகுமாரின் நடிப்பைப் பார்த்து ஜெயராமே அசந்து போனாராம்.

ரஜினிகாந்த், சத்யராஜ், விஜயகாந்த், கார்த்திக் போன்ற நடிகர்களைவைத்து இயக்கியவர் உதயகுமார். இப்போது அவரே படத்தை இயக்குவதால் பல வசதிகள். பல விதத்தில் லாபங்கள்.

லாபங்களில் சில; கதாநாயகனுக்கு கொடுக்கும் ஊதியம் மிச்சம். தான் நினைப்பது போல் நடிக்கலாம். கதாநாயகியோடு கமரா முன்பாகவும் டுயட் பாடலாம்.

## ...ாவின் மறுப்பு

...ான ஹீரோக்களுடன் காதல் காட்சி ...டிக்கும்போது ரொம்பக் கஷ்டப்பட ...ியிருக்கிறதாம். மீனாதான் சொல்லி ...ார். தெலுங்கில் கிருஷ்ணாவுடன் ...னாவை அழைத்தார்களாம். மீனா ...ட்டார்.

...ாடி நடிப்பதற்குள் களைத்துப் ...கிறார்கள். ஒரு காட்சிக்காக பல ...் கமரா முன் நிற்கவேண்டி ஏற் ... அதனால் உற்சாகமான 'மூட்' ...ல்லை. கஷ்டம் என்கிறார் மீனா. ...னாவுக்கு பதிலாக ரவளியை ...ாவுக்கு ஜோடியாக நடிக்க ...க்கிறார்கள். அதென்னவோ ... சில பத்திரிகைகளுக்கு கிருஷ்ணா ...ற்றி புகழ்ந்து சொல்லியுள்ளார்

## இன்னுமொரு போட்டி

கமலஹாசன் முத்தம் கொடுத்து தூள் கிளப்பியதால் ஏனைய கதாநாயகன்களுக்கும் முத்த லாபம். 'விஸ்வநாத்' படத்தில் சரவணனுக்கு சுவாதி தன் இதழ்களைத் தாராளமாகத் தந்துவிட்டார். விடுவாரா சரவணன் வெளுத்து வாங்கியிருக்கிறாராம்.

அது மட்டுமல்ல, பல ஹீரோக்களும், நடிகைகளும் ஆங்கிலப் பட வீடியோ கசட்டுக்களை போட்டு முத்தக் காட்சிகளை கூர்ந்து கவனிக்கிறார்களாம். தத்ரூபமான முத்தத்தில் கமலை வென்றுவிட நினைக்கிறார்கள் ஹீரோக்கள் பலர்.

ஆடைக் குறைப்பு போட்டி போதாது என்று முத்தப் போட்டியும் வந்துவிட்டது. முன்னேற்றம் தான்.

## நடுத்தர பட்ஜெட் படம்

இப்போதெல்லாம் தமிழ்த் திரைப்படங்களும் கோடி கோடியாக பணத்தைக் கொட்டித்தான் தயாராகின்றன.

மிக அதிக அளவிலும் இல்லாமல், மிக குறைந்தளவிலும் இல்லாமல் நடுத்தர பட்ஜெட்டில் ஒரு படம் எடுத்தால் எவ்வளவு செலவாகும்? இதோ சில விபரங்கள். (பணமதிப்பு இந்திய நாணய மதிப்புப்படி தரப்படுகிறது)

கதை, திரைக்கதை, வசனம் இயக்கம் - 3 இலட்சம்.
இசை - 3 இலட்சம்.
ஒளிப்பதிவு - 1 இலட்சம்.
பிலிம் - 6 இலட்சம்.
லேப் செலவு - 2 இலட்சம்
வெளிப்புற படப்பிடிப்பு - 3 இலட்சம்.
ரெக்கோர்டிங், ரீ ரெக்கோர்டிங், மற்றும் மிக்சிங் - 2 இலட்சம்.
கதாநாயகன், கதாநாயகி மற்றும் இதர நடிக, நடிகைகள் - 35 இலட்சம்.
படத் தொகுப்பு - 50 ஆயிரம்.
கலை - 50 ஆயிரம்.
நடனம் - 50 ஆயிரம்.
சண்டை - 75 ஆயிரம்.
உதவி இயக்குநர்கள்
இணை இயக்குநர்கள் - 75 ஆயிரம்.
கமரா உதவி - 50 ஆயிரம்.
பாடலாசிரியர் - 15 ஆயிரம்.
ஸ்டில்ஸ் - 25 ஆயிரம்.
மேக்கப் - 35 ஆயிரம்.
உடை - 25 ஆயிரம்.
எஃபக்ட்ஸ் - 50 ஆயிரம்.
டப்பிங்- 1 இலட்சம்.
இதர செலவுகள் - 20 இலட்சம்.
மொத்தச் செலவு - 80 இலட்சம்.

முகப்பில் சரத்குமார், சௌந்தர்யா

## வாசுவின் புதிய படம்

'லவ் பேட்ஸ்' படத்திற்குப் பின் பி.வாசு இயக்கும் புதிய படத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்கவுள்ளார். 'இது நம்ம பூமி' படத்திற்குப் பின் பி.வாசு கார்த்திக் இணையும் படமிது.

## ஹீராவின் வாக்குமூலம்

...ியாக ...டுத்தது ...ட பதிலாக பொரிந்து தள்ளியிருக்கிறார் ஹீரா. ...கள் என்று இதுவரை இங்கு யாரும் கேட்கவில்லை. ... கவர்ச்சியாகப் போஸ் கொடுத்தேன். ...டிக்க வந்துவிட்டால் கவர்ச்சியாக நடித்துவிட ...யா நான் அப்படி நடிக்க மாட்டேன். இந்த ...மாட்டேன் என்றெல்லாம் பிடிவாதம் பிடிக்கக்கூடாது. ... லீலாவதியில் நடித்தேன். ...ச்சல் உடையில் ...ன். இப்போது ...தல் கோட்டை' ...ர வெளிப்படுத் ...த்தில் என் ...ிப்படுத்தி நடித் ...ன்று சொல்லி ...யும் மறைக்கத் ...ரா. ரொம்ப



அகில
படம்:-சுட்டிக் குழந்தை

## கையில் சிக்குமா?

கங்கை அமரன் இயக்கி, அவரே பாடல்களும் எழுத, அவரது மகன் வெங்கட் பிரபு நடிக்கும் படம் 'பூஞ்சோலை'

கல்லூரி மாணவிகளை கிண்டலடித்து பாவாடை, தாவணி அணிந்து மாணவர்கள் பாடும் பாடல் ஒன்றும் படமாக்கப்பட்டது.

'நக்மா, நக்மா, கையில் சிக்குமா இந்த நக்மா?' என்று பாடல் தொடர்கிறது.

மாணவர்களின் தலைவராக வெங்கட் பிரபுவும், மாணவிகளின் தலைவியாக புதுமுகம் ரசிகாவும் நடிக்கின்றனர்.

## சூப்பரான சுட்டிக் குழந்தை

ஆங்கிலத்தில் வெளியாகி சக்கை போடு போட்ட படம்தான் 'பேபீஸ் டே அவுட்'. சுட்டிக் குழந்தையின் நடிப்புக்காகவே ஹொலிவூட்டைக் கலக்கிய படம்.

அதனைத் தழுவி தெலுங்கில் எடுத்த படத்தை தமிழில் 'சுட்டிக் குழந்தை' என்ற பெயரில் வெளியிடுகிறார்கள்.

நாகார்ஜுன்-அமலா தம்பதிகளது குழந்தை அகில் சுட்டிக் குழந்தையாக நடிக்கிறான்.

'பேபீஸ் டே அவுட்' படத்தில் டுயட் கிடையாது, சுட்டிக் குழந்தையில் டுயட் தூள் பறத்துகிறது. பம்பாய் கவர்ச்சிப் புயல் பூஜாபத்ராவோடு நாகார்ஜுன் இணைந்து கலக்கல் நடத்தியிருக்கிறார்கள்.

நாகார்ஜுன் கனவு காண்பதில் கில்லாடி. கனவில்தான் டுயட் பாடலும் வருகிறது. பூஜாபத்ராவின் கவர்ச்சிக் கோணங்களால் குழந்தை அகிலின் முக்கியத்துவம் குறையாமல் இருந்தால் சரிதான்.


படிப்பகம்

www.padippakam.com

# கட்டான உடலுக்கு
## கட்டுப்பாடான உணவு



பொதுவாக உலகத்தில் உள்ள எல்லாப் பெண்களும் அழகாக இருக்க வேண்டும் என்றுதான் ஆசைப்படுவார்கள். சினிமாவில் ஸ்ரீதேவி, கௌதமி, சங்கவி மாதிரித் தானும் அழகாக இருக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். நடிகைகள் அழகாக இருக்கக் காரணம், அதிக சதையில்லாத ஒல்லியான உடம்பினால்தான். அதற்கு அவர்கள் அளவான, கட்டுப்பாடான சாப்பாட்டு முறையைக் கடைப்பிடிப்பதனால் தான் ஒல்லியாக அழகாக இருக்கிறார்கள்.

அதற்காக உங்களையும் சாப்பிடாமல் பட்டினி கிடக்கச் சொல்லவில்லை. சாப்பாட்டில் கட்டுப்பாடு வேண்டுமென்று தான் சொல்கிறோம்.

உங்களுக்குப் பிடித்த உணவைச் சாப்பிடலாம். ஆனால் அவற்றை அளவோடு சாப்பிடுங்கள்.

நீங்கள் ஒரு கல்யாண வீட்டிற்குப் போகிறீர்கள். அங்கே கன்னாபின்னாவென்று பதார்த்தங்களை இலையில் பரப்பி விடுகிறார்கள். நீங்கள், எல்லாம் வீணாகிப்போய் விடுமே என்று எல்லாவற்றையும்–மிச்சம் வைக்காமல் சாப்பிடாது அங்கேயும் கூட அளவைக் கடைப்பிடியுங்கள்.

மற்றும் சாப்பிடும்போது இடையில் நொறுக்குத் தீனி சாப்பிடவே கூடாது.

கொழுப்புச் சத்து அதிகம் உள்ள பண்டங்கள், இனிப்பு வகைகள், கிழங்குகள் சேர்த்த மசாலா, எண்ணெயில் பொரித்த பண்டங்கள், வெண்ணெய், சீனி ஆகியவற்றால் செய்த கேக் போன்றவற்றை உங்களிடம் நீட்டும் போது அவற்றை வாங்க நீங்கள் கையை நீட்டாமல் மறுத்து விடுங்கள்.

கண்ட நேரத்தில் சாப்பிடுவதும், பசி இல்லாத போது சாப்பிடுவதும் மிக மிகத் தப்பு. சாப்பிட வேண்டிய நேரத்தில் வேளா வேளைக்குத் தவறாமல் சாப்பிடுங்கள்.

சாப்பிடும்போது அவசரமாக அள்ளி வைத்துத் திணிக்காமல் ருசித்துச் சாப்பிடுங்கள். அப்போது சாப்பிடும் அளவும் குறையும்.

காலைச் சிற்றுண்டியையும், மதியச் சாப்பாட்டையும் நன்றாகச் சாப்பிடுங்கள். இரவுச் சாப்பாட்டைக் குறைத்தே சாப்பிடுங்கள்.

வெளியே போகும் இடங்களில் எல்லாம் கிடைக்கிறதே என்று கோப்பி, பால் சேர்த்த பானத்தைக் குடிக்காதீர்கள். முடிந்தளவு தயிர், பால், பருப்பு வகைகளைக் குறைத்து விட்டுக் கீரை வகைகள், தக்காளி, கரட், வேக வைத்த காய்கறிகளைச் சாப்பிடுங்கள்.

முடி நன்றாக வளர உடல் ஆரோக்கியம் முக்கியம். அதனால் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள். இரண்டு வேளையும் அழுக்குப் போகக் குளித்துச் சருமத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

பொதுவாக தாவர எண்ணெய் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் சோப்பு உடலுக்கு நல்லது. நம் உடலுக்கு எந்த சோப்பு ஏற்றது என்பதைக் கண்டறிந்து அந்த சோப்பையே தொடர்ந்து உபயோகிக்க வேண்டும். கையிருப்பு காசுக்குத் தகுந்த மாதிரி சோப்பை மாற்றிக் கொள்வது உடலுக்கு தீங்கானது.

அடிக்கடி தோல் உலர்ந்து விடுகிறது என்றால், அப்படிப்பட்டவர்கள் அதிக கொழுப்புக் கலந்து தயாரிக்கப்பட்ட சோப்பை உபயோகிப்பது நன்மை தரும்.

பாசிப்பயறு 250 கிராம், கடலைப்பருப்பு 250 கிராம், பச்சரிசி 250 கிராம் இவற்றை அரைத்து வைத்துக் கொண்டு குளிப்பதற்கு முன் முட்டையின் வெள்ளைக் கருவுடன் வெந்தயம், தேன் கலந்து உடலில் தடவிக் கொண்டு குளித்தால் சருமம் பளபளப்பாகவும், நிறமாகவும் வரும்.

# லேடீஸ் ஸ்பெஷல்
## காய்கறிகள் வாங்குவதற்கு முன்னர்.....



சத்துள்ள சாப்பாட்டுக்கு கெட்டுப் போகாத பசுமையான காய்கறிகள்தான் முக்கியம். நிறையப்பேர் இப்படிப் பார்த்து வாங்குவதில் கெட்டிக்காரர்கள். ஆனால், சில பேருக்கு சுத்தமாக ஒன்றுமே தெரியவில்லை.

காய்கறிக் கடைகளுக்குச் செல்லும் கணவன்மார்கள் காய்கறிகளைப் பார்த்து வாங்கத் தெரியாமல், வீட்டில் குடும்பத்தலைவியிடம் வாங்கி கட்டிக் கொள்வதைப் பார்க்கிறோம். அவர்களுக்காக எந்தெந்தக் காய்கறிகளை எப்படி வாங்குவது என்பதைக் கவனியுங்கள்:

கத்தரிக்காயை வாங்கும்போது காம்புடன் கூடிய தோல் மூடியபடி இருக்கும் காயாகவும், சொத்தை இல்லாததாகவும் பார்க்க வேண்டும்.

வெண்டைக்காயைக் காம்பு ஒடித்தால், ஒடியக் கூடியதாக இருக்க வேண்டும். அதுதான் பிஞ்சு. இல்லாவிட்டால் முற்றலாக நார் போல் இருக்கும்.

கீரைத் தண்டு குட்டையாகவும், கிளைகள் நிறைய இருப்பதாகவும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் தான் நார் இல்லாமல் இளசாக இருக்கும்.

சுரைக்காய் வாங்கும்போது காயில் நகம் வைத்தால் உள்ளே போவது போல் இருக்க வேண்டும். அதுதான் பிஞ்சு, அதனால் நாம் நகத்தைச் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

முருங்கைக் காயைக் கையில் சுழற்றிப் பார்க்க வேண்டும். சுழலும் காய் பிஞ்சாக இருக்கும். மூலை தீர்த்துப் போய் இருந்தால் முற்றிப் போய் இருக்கும்.

கருணைக்கிழங்கு உள்ளே சிவப்புக் கலராக இருக்க வேண்டும். அதுதான் சுவை மிக்கதாக இருக்கும்.

உருளைக்கிழங்கை வேர் ஓடாததாகவும், பச்சையில்லாததாகவும் பார்த்து வாங்க வேண்டும். கிழங்கு கெட்டியாக இருக்க வேண்டும். தோல் உரிந்து இருக்கும் கிழங்கு மிகவும் சுவையாக இருக்கும்.

முட்டைக்கோவா அழுத்தமாக, கெட்டியாக இருக்க வேண்டும். புடலங்காய் ஒடித்தால் ஒடிய வேண்டும். சிறிது வாயில் போட்டால் இனிப்பாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் கசக்கும்.

காய்கறிகள் மலிவாகக் கிடைக்கும் போது நிறைய வாங்கி இருப்பில் வைத்துக் கொள்ள யார்த்தான் விரும்ப மாட்டார்கள்? ஆனால் பாதுகாக்க 'ஃபிரிட்ஜ்' இல்லையே என்ற கவலை வேண்டாம்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒரு தலையணை உறை அளவில் ஒரு பொலித்தீன் பை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டியதுதான். அதில் பாதி அளவுக்கு மேற்படாமல் காய்கறிகளைப் போட்டு, பையின் விளிம்பை ஒரு கயிற்றினால் மேற்புறம் காற்றுப் புகாமல் கட்டி விடவும்.

பிறகு ஒவ்வொரு நாளும் காலையில் பையை அவிழ்த்துக் காய்கறிகளைக் கீழே கொட்டி பையின் உள்பாகத்தை வெளிப்பக்கமாக மாற்றி ஈரத்தைத் துடைத்து விடவும். மறுபடியும் காய்கறிகளை உள்ளே போட்டு முதல் மாதிரியே கட்டி விடவும். இதே போல் தவறாமல் தினமும் செய்து வர வாரம் முழுக்க காய்கறிகள் பசுமையாக இருக்கும்.

# அட்வைஸ் சுத்தமான சமையலறை



ஒரு குடும்பத் தலைவியின் திறமை பற்றி அறிய வேண்டுமானால் நேராகச் சமையலறைக்குச் சென்று பார்த்தால் தெரிந்து விடும். சமையலறையின் சுத்தத்தையும், பாங்கையும் வைத்து ஒரு பெண்ணின் அழகுணர்வு, ஆரோக்கிய சிந்தனை, கலை அழகு இவற்றை எளிதில் ஜாதகம் கணிப்பது போல் கணித்து விடலாம்.

பொதுவாகப் பெரிய வீடுகளில் சமையலறையை சாப்பாட்டு அறையுடன் இணைத்துக் கட்டுகின்றனர். இது உணவு பரிமாற மிகவும் சுலபமாக இருக்கலாம். ஆனால் சமையலறை தனியாக, சாப்பாட்டு அறை தனியாக அமைத்துப் பராமரிப்பதே சிறந்தது. ஆரோக்கியமானதும் கூட. பெரியதாக இருக்கும் சமையலறையைப் பாதியாகப் பிரித்து அவற்றில் கண்ணாடியிலான ஷோகேஸ்களை அமைத்து, சமைப்பதற்குத் தேவையான சகல சாமான்களையும் அதில் அழகாக அடுக்கி வைத்தால், பார்ப்பதற்கு அழகாக இருப்பது மட்டுமன்றி கலை நயத்தோடும் கண்டோரை வியக்க வைக்கும்.

சமையலறை நல்ல காற்றோட்டமாகவும், சூரிய வெளிச்சம் உள்ளதாகவும் அமைய வேண்டும். நல்ல ஒளி வீசும் பல்புகளைப் போடவேண்டும். அப்பொழுதுதான் சமைக்கும்போது நல்ல வெளிச்சமாக இருக்கும். பூச்சிகள் சமையலில் விழாமல் தடுக்க முடியும். சமையலறையில் உள்ள வெப்பம் வெளியேற வசதி செய்வது முக்கியம். வசதியுள்ளவர்கள் எக்ஸ்ஹோஸ்ட் ஃபேன் பொருத்தலாம். அப்படிப் பொருத்துவதால் சமையல் எண்ணெய்ப் புகை, மசாலா நெடி வீட்டினுள் வராது தடுக்கலாம். சமையலறை அழகாகவும், சுத்தமாகவும் இருக்கும். சுத்தம் செய்யவும் வசதியாக இருக்கும்.

சமையலறையில் கலண்டரோ அல்லது மற்றப் படங்களோ மாட்ட வேண்டிய அவசியமில்லை. சமையலறையில் திரை போடுவது அவசியமில்லை. கடிகாரம் இருந்தால் நல்லது. ஆங்காங்கே சிறு துணிகளைத் தொங்க விட்டு வைத்தால் கைதுடைத்துக் கொள்ள வசதியாக இருக்கும். சமையலறைகளில் பலசரக்குச் சாமான்களை பிளாஸ்டிக் போத்தல்களில் போட்டு வைக்கலாம். இப்போது ஏராளமாக பலவித வர்ணங்களிலும், அமைப்புக்களிலும் தரமான பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனைக்கு வந்துள்ளன. அவற்றை நீங்கள் வாங்கி உபயோகப் படுத்தலாம்.

# சமைப்போம் சுவைப்போம்
## மீன் குருமா

[தொகுத்துத் தருவது- சுகந்தினி]

**தேவையானவை:**

**மீன்** – 1/2 கிலோ
**எண்ணெய்** – தேவையான அளவு
**தேங்காய்** – ஒரு மூடி
**பெரிய வெங்காயம்** – 3
**பச்சை மிளகாய்** – 10
**தக்காளி** – 100 கிராம்
**பூண்டு** – 1
**இஞ்சி** – 1 துண்டு
**மஞ்சள் தூள்** –1 அளவாக
**மிளகாய்த்தூள்** – 1 கரண்டி
**கசகசா** – 25 கிராம்
**உப்பு** – தேவையான அளவு
**கறிவேப்பிலை** – சிறிதளவு.

**செய்முறை:**

மீனைச் சுத்தம் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். வெங்காயம், பச்சை மிளகாய், தக்காளியைப் பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். கசகசா, தேங்காய் இரண்டையும் சேர்த்து அரைத்து, தண்ணீருடன் வைத்துக்கொள்ள வேண்டும்.

இஞ்சி, பூண்டு இவற்றையும் மையாக அரைத்துக் கொள்ளவும். வாணலியை அடுப்பில் வைத்து எண்ணெய் ஊற்றி, கடுகு, கறிவேப்பிலை, சீரகம் போட்டுத்துத் தாளிக்கவும். பின் நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், தக்காளியைப் போட்டுச் சிறிது நேரம் வதக்கவும். அதனுடன் இரண்டு கோப்பை தண்ணீர் ஊற்றி உப்பு, மஞ்சள் தூள், மிளகாய்த்தூள் போட்டுக் கிளறி கொதித்ததும் மீனை எடுத்துப் போட்டு விடவும். மீன் நன்றாக வெந்ததும் அரைத்த தேங்காய்–கசகசாவை அதை அரைத்த தண்ணீரில் கரைத்து ஊற்றிக் கொதிக்க விடவும். நன்றாகக் கொதித்த பின் இறக்கி வைத்துப் பரிமாறலாம்.

# 50 அடித்தால் போ!

கிரிக்கெட் அணியில் 11 வீரர்கள் விளையாடுவதுதான் வழக்கம். அதில் ஒரு வித்தியாசம் செய்யப் போகிறார்கள். ஒவ்வொரு அணியிலும் 8 வீரர்களை மட்டுமே ஆடவைத்து ஒரு கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதம் 12ம் திகதி முதல் 14ம் திகதிவரை கோலாலம்பூரில் அந்த நூதனக் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ஏற்பாடு செய்துள்ளது. இதில் இந்தியா, அவுஸ்திரேலியா, தென் ஆபிரிக்கா, நியூசிலாந்து அணிகள் பங்குகொள்கின்றன. போட்டியில் 8 பேர் கொண்ட ஒவ்வொரு அணிக்கும் தலா 14 ஓவர்கள் கொடுக்கப்படும்.

இன்னொரு நிபந்தனை என்ன தெரியுமா? ஒரு வீரர் 50 ரன் அடித்துவிட்டால் அவுட்டாகிறாரோ இல்லையோ கட்டாய ஓய்வில் திரும்பிவிடவேண்டும்.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் கப்டன் அலன் போர்டரும் விளையாடப்போகிறார்.

# இரவு உணவு எப்போது?



இரவு உணவை நீங்கள் எத்தனை மணிக்கு சாப்பிடுகிறீர்கள்?

மருத்துவ முடிவின்படி இரவு ஏழு மணிக்கு முன்னர் இரவு உணவை சாப்பிட்டு முடித்துவிட வேண்டும். அது முடியாதவர்கள் குறைந்தது எட்டு மணிக்கு முன்பாவது முடித்து விடவேண்டும். அப்படி உணவை உட்கொண்டால் தான் இரவு பத்து மணிக்குள் உண்ட உணவு ஜீரணமாகும்.

இரவில் ஒன்பது பத்து மணிக்கு உணவை முடித்தால் இரவு பன்னிரண்டு ஒரு மணிவரை உணவு ஜீரணமடைய நேரம் எடுக்கும். அதனால் தூங்கும்போது உடல் தேய்மானத்தை புதுப்பிக்கும் சக்தியில் பாதி ஜீரணமாவதற்கு சென்றுவிடுகிறது. அதனால் உடல் தேய்மானத்தை புதுப்பிக்கும் வாய்ப்பு குறைகிறது. அதன்காரணமாக நோய்கள் உண்டாகின்றன.

எனவேதான் ஏழு மணிக்கு முன்பாக உணவை முடிப்பது நல்ல ஆரோக்கியம் தருகிறது என்கிறார்கள் மருத்துவர்கள்.

# மியாண்டட் வருந்துகிறார்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் சிங்கமாக விளங்கியவர் ஜாவித் மியாண்டட். இந்த ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியுடன் அவர் ஓய்வு பெற்றுவிட்டார்.



இந்தியாவுக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் தான் இருக்கக்கூடியதாக, அமீர் சொகைலை கப்டனாக்கியது தவறு என்று மியாண்டட் குற்றம் சாட்டியிருந்தார். தன்னை பின்வரிசை ஆட்டக்காரராக மாற்றி அவமதித்துவிட்டனர்; ஆட்டங்களுக்கு முன்னர் தன்னோடு கலந்தாலோசிக்கவில்லை; என்றெல்லாம் மியாண்டட் சரமாரியாக விமர்சனக் கணைகள் வீசியிருந்தார்.

"மியாண்டட் சொல்வது தவறு. ஒவ்வொரு போட்டியின் முன்னரும் சகல வீரர்களுடனும் கலந்தாலோசித்தோம். மியாண்டட்டுடனும் கலந்து பேசப்பட்டது" என்று பதில் சொல்லியிருந்தார் வாசிம் அக்ரம்.

ஆறு தடவைகள் உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொண்ட மியாண்டட்டுக்கு சமீபத்தில் பாகிஸ்தான் அரசு ரூபா 6 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கி கௌரவித்துள்ளது.

கராச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் பரிசை வழங்கினார்.

பரிசை வாங்கிய மியாண்டட் அங்கு பேசுகையில், "கிரிக்கெட் விளையாட்டுக்கு நான் செய்துள்ள பங்களிப்புக்களுக்காக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஒரு போதும் என்னைக் கௌரவிக்கவில்லை" என்று வருத்தம் தெரிவித்தார்.

# வருகிறார் வாசிம்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு தற்போது அமீர் சொகைல் கப்டனாக இருக்கிறார். விரைவில் பாகிஸ்தான் அணி இங்கிலந்துக்கு சுற்றுப் பயணம் செய்யவுள்ளது. அப்போது பாகிஸ்தான் அணிக்கு வாசிம் அக்ரம் மீண்டும் கப்டனாக இருப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?
## கம்பளை வாசகிக்கு அதிஷ்டம்

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**கே. பரிமலகாந்தி**
**176/9, கண்டிரோட், கம்பளை.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** 0

பெயர்:..............................
முகவரி:..............................
..............................
கையொப்பம்:..............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-05-1996

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.




படிப்பகம்

www.padippakam.com

## கவிதை விடு தூது

நீ
மனம் விட்டு சிரி!
••
இந்தத் தூரம்
நம் காதலை
ஒன்றும் செய்துவிட
முடியாது.
••
மெதுவாக வீசும்
மாருதத்தில்
உன் கூந்தல் மணம்
என் மூக்கை விசாரிக்கிறது.
••
பௌர்ணமி இரவுகளில்
வானத்தை பார்க்கிறேன்...
அங்கே–
உன் முகம்!
••
இரவு முழுக்க கூவும்
ஒற்றைக் குயிலின் குரலில்
உன் பேச்சு
வயசுக்கு வருகிறது.
••
சாளரத்தால்
வீசும் தூவாணம்
உன் தாவணியை
நினைவு படுத்துகிறது.
••
மலராத மொட்டுகளுக்குள்
என் நம்பிக்கை மகரந்தங்கள்
நாளைகளுக்காய்
தவமிருக்கின்றன.
••
எனது காதல் தேசத்தில்
முட்களிலும்
மலர் சுரக்கும்!
••
வாலிபப் போர்கள்
காதலிடம் சரணடைவதற்குத்தான்..!
••
அடி... மார்பழகியே
நீ ஏன் அழவேண்டும்...?
••
என்னால் உன்னை
சந்திக்க முடியவில்லை...
என்றாலும்–
உன் கனவுகளிலாவது
நான் புன்னகைக்கவில்லையா?
••
நீ வயசுக்கு வந்தபோதுதானே
நான்
கவிதை எழுத ஆரம்பித்தேன்.
••
உன் உதடுகள்
ஈரப்படுத்தப் பட்டபோதுதானே
நீ வாலிபத்தை உணர்ந்து கொண்டாய்..!
••
நிட்சயமாய்..
உன்னால் உசுப்பப்பட்ட
என் ஜீவன்
உன் ஜீவிதத்தில்தான்
சுவாசிக்கும்!
••
எதிர்பார்த்திரு
நிலாவை சுமந்து வருகிறேன்
உன் நெற்றியில் திலகமிட
••
இனி
நீ மனம் விட்டு சிரி!

சி.பி-எம்.ஐ.எம்.றகீம், பொத்துவில்-2.

## மரத்துப் போனவர்கள்

மௌனம் கலைக்க
செல்கிறார்கள்.
***
கடலிடம்
கொந்தளிக்க
கேட்பீரா.
***
எங்களால் எதுவும்
பேச முடியாது
ஊமைகள் அல்ல
நாம்.
***
அடிக்க அடி
'அவர்கள்' நிற்பார்–ஆனால்
எம் வீட்டில்
கொள்ளை நடக்கும்.
***
எதையும் எம்மால்
கேட்க முடியாது.
***
சுதந்திரம் அனுபவிக்கும்
உரிமை உண்டு
நான்கு சுவர்களுக்குள்.
***
வேற்று மொழியில்
எம்மை பற்றி
உரையாடல் நடத்துவார்
உம் தலைவர்.
***
இப்போது
எதையும்
பார்ப்பதும் இல்லை.
"குருடர் அல்ல"
***
ஏன் என்றால்
நாம்
தமிழர்
***
எமக்கு தனி
"அடையாளம்"
உண்டு
***

சுபா வரன், கண்டி.

## விடையிழந்த வினாக்கள்

விடையிழந்த வினாக்கள்
அழிவதற்காகவா
மண்ணில் விதைகள்
மழை பார்த்து நிற்பது?
*
உயிரை இழந்து
தாகித்த உடல்கள்
தன் உதிரத்தையா குடிப்பது?
*
சொட்டுச் சொட்டாய்
சொட்டி
மனக்குடம் எப்போது
மகிழ்ச்சியால் நிறைவது?
*
இருட்டுக்குள்ளிருந்தா
இத்தனை காலமும்
'விடிவை' தேடுவது?
மண்ணின் மடியில்
மரணிப்பதற்காகவா
அமைதியை யாசிப்பது?
*
இனவாதத்தை இன்னமும்
நீதி தேவதையுடனா
விவாதித்துக் கொண்டிருப்பது?
*
சமாதானத்தை இனி
எந்த சந்நிதியில்தான்
தரிசித்து மகிழ்வது?
*
சுதந்திரக் காற்றை
எந்தத் திசையில் போய்
சுவாசித்து வாழ்வது?
*
பகைமை நீங்க
போராயுதங்களுடன் தானா
பேச்சு வார்த்தை நடத்துவது?
*
சமத்துவ வேதத்தை
சாதி பேதங்களாலா
சமாதி செய்வது?
*
எமது கனவுகளை
எவர்தான் இங்கே
கைது செய்ய நினைப்பது?
*
எப்போது நாங்கள்
ஒரே தேசியக் கொடியின் கீழ்
ஒன்று கூடி நிற்பது?
*

இசார்தீன், மக்காவில்.

## ரஜினி ராச்சியம்

1


"நேற்று பஸ் நடத்துநர். இன்று நடிகன். நாளை?"

2

வேணாம். என்னை விட்டிருங்க. என் பாதையில போய்கிட்டிருக்கேன். என்னை பெரியாளாக்காதீங்க மேடம். பின்னாடி உங்களுக்குத்தான் கஷ்டம்.

3

நான் எந்த வம்புக்கும் போகமாட்டேன். வந்த வம்பை விடவும் மாட்டேன். எங்கிட்ட மோதவேணாம்.

4

எனக்கு இந்த அரசியலே பிடிக்கேல்லை. என்னை விட்டிருங்க. பிளீஸ். எனக்கு ரிலாக்ஸ். தேவைப்படுது. அமெரிக்கா போறேன்.

5.

என்ன, டில்லியை விலைக்கு வாங்கீட்டாங்களா? வர்றேன். நான் நேரா வர்றேன்.

6

என்ன மேடம். பார்க்கலாமா யாரு ஜெயிக்கப் போறோம் என்னு. நான் ரெடி.


வெற்றி. தர்மத்தின் வெற்றி. கொண்டாடுங்க. சும்மாபுகுந்து தூள் பண்ணுங்க கண்ணுகளா.

8

நாளை நான் எங்கே இருப்பேண்ணு அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும். →

## நன்றிகள்

அதோ
காந்தி...!
மகாத்மா காந்தி
போகிறார்....!
**
கட்சிகொடிகளுக்கும்
'கட்டவுட் டிற்கும்
கீழே
வெள்ளை வேட்டிகள்...
ஒலி பெருக்கியால்
குழி பறித்தனர்.
**
நேரு,
இந்திரா காந்தி....
அவர்களுக்கு இப்போது
ஞாபகத்துக்கு வந்தனர்.
**
காந்தியை
கைத்தறியில்
பின் பற்றுவதில்
முரண்பாடுகள்
கைத்தடியில்
பின்பற்றுவதில்
இணக்கங்கள்..
தேர்தல் வாக்குறுதிகளை
வழக்கமாக
நம்பும் மக்கள்,
தலைவனை நம்பி
"கானல் நீரை திசைதிருப்பும்
திட்டத்தை"
வரவேற்றனர்.
**
காந்தி போகிறார்
"கோட்சே"க்கு
நன்றி சொல்ல...!

பால கமலன்- வவுனியூர்.

## சிறகு விரித்த வெண்புறா

ஓங்கி ஒலிக்கின்றது–ஓர்
எழுச்சிக் குரல்....!
வீழ்ச்சியுற்ற
மானிடத்தை
வெண் பிறையாய்
மாற்றிடவே....!
0–0
இனம் மறந்து
இன்னலை மறப்போம்!
மனம் இணைந்து
மலர்ச்சியை ஏற்போம்!
0–0
விவாதங்கள்
விண்ணைத்
தொடுகின்றன!
புதுமையின்
புரட்சி வெடிக்கின்றது!
0–0
வெண்புறாவுக்கு
வேண்டுகோள்
வந்தணைக்குமாறு–
வான்வெளியை!
0–0
சிறகு விரித்த
வெண்புறா
சிதைந்து விழுந்தது–ஆம்
சமாதான விரும்பிகள்
சச்சரவுக்குள்
0–0

நகர்ஒளியில்-கலாதிரு

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பெரியோர் உதவி, புதிய முயற்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், பணத்தடை நீங்கும். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வீண் முயற்சி, குடும்ப கலகம். | பகல் 12 மணி |
| புதன்- | வீண் தொல்லை, மறைமுக எதிர்ப்பு. | பகல் 12 மணி |
| வியாழன்- | பெரியோர் உதவி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், முன்னேற்றம். | காலை 6 மணி |
| சனி- | புதிய முயற்சி, கவலை நீங்கும். | மு.ப. 10 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | இனசன மகிழ்ச்சி, பணச் செலவு. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, காரியானுகூலம். | காலை 7 மணி |
| புதன்- | மனக் கலக்கம், அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், கவலை நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | காரியக் கேடு, மனக்குறை. | காலை 6 மணி |
| சனி- | பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-1

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பதிய முயற்சி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், பணவரவு. | பி.ப. 1 மணி |
| புதன்- | வீண் மனத்தாபம், துன்ப நிலை. | காலை 7 மணி |
| வியாழன்- | முயற்சி பலிதம், கவலை நீங்கும். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | அந்நியர் உறவு, உயர்ந்த நிலை. | காலை 6 மணி |
| சனி- | உறவினர் வருகை, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, உடல் நலக் குறைவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் சகாயம், உயர்ந்த நிலை. | பி.ப. 1 மணி |
| புதன்- | பொருள் வரவு, அலைச்சல். | காலை 6 மணி |
| வியாழன்- | தொழில் விருத்தி, பண வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | காலை 8 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், அந்நியர் உதவி. | மு.ப. 9 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிட வாழ்க்கை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், மறைமுக எதிர்ப்பு. | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | உறவினர் கலகம், மனக்கவலை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | தெய்வ நம்பிக்கை, கவலை நீங்கும். | பகல் 11 மணி |
| வெள்ளி- | பணவரவு, கடன் தொல்லை நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், கருமங்களில் வெற்றி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### இந்த வாரம் உங்கள் பலன்

( 19.05.96 முதல் 25.05.96 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - செவ்வாய். |
| இடபம் | - சூரியன். புதன். |
| மிதுனம் | - வெள்ளி. |
| கன்னி | - இராகு. |
| தனு | - வியாழன். |
| மீனம் | - சனி. கேது. |

சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, பெரியோர் நட்பு. | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- | தொழில் பிரச்சனை, கடின உழைப்பு. | பகல் 12 மணி |
| புதன்- | காரியானுகூலம், பயம் நீங்கும். | காலை 7 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, தொழில் நன்மை. | காலை 6 மணி |
| வெள்ளி- | உடல் நலக்குறைவு, மனச்சஞ்சலம். | மு.ப. 10 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், பணச்செலவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-7

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | உறவினர் தொல்லை, செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- | வீண் குறை கேட்டல், வெளியிடப் பயணம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| புதன் - | மனக்கவலை நீங்கும், பணவரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | தேக சுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, பணவரவு. | பி.ப. 3 மணி |
| சனி- | தெய்வானுகூலம். கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | மனக் குழப்பம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், மனக் கவலை. | பகல் 12 மணி |
| புதன்- | அந்நியர் உறவு, கௌரவம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- | பொருள் வரவு, துயர் நீங்கும். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- | முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, முயற்சி மேன்மை. | பகல் 1 மணி |
| திங்கள்- | தொழில் விருத்தி, இடமாற்றம். | மு.ப. 9 மணி |
| செவ்வாய்- | திடீர் பயணம், மனக்குழப்பம். | பகல் 12 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, பணவரவு. | காலை 6 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | அதிகார விருத்தி, உயர்ந்த நிலை. | காலை 8 மணி |
| சனி- | வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி., அதிஷ்ட இலக்கம்-5

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | அந்நியர் உதவி, முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| திங்கள்- | தன இலாபம், மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், பொருள் நட்டம். | காலை 8 மணி |
| புதன்- | அந்நியர் உதவி, அரச நன்மை. | பகல் 12 மணி |
| வியாழன்- | பெரியோர் பகை, மனக்கிலேசம். | காலை 7 மணி |
| வெள்ளி- | குடும்ப நன்மை, மன நிம்மதி. | பகல் 11 மணி |
| சனி- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மேன்மை, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | குடும்ப சுகம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- | காரியானுகூலம், புதிய நம்பிக்கை. | காலை 7 மணி |
| வியாழன்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 8 மணி |
| வெள்ளி- | செய்தொழில் விருத்தி, மனக்குறை நீங்கும். | பகல் 12 மணி |
| சனி- | கடன் சுமை, வீண் குரோதம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | அரச விரோதம், மனப்போராட்டம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், கௌரவம். | பி.ப. 1 மணி |
| புதன்- | மனமகிழ்ச்சி, கரியானுகூலம். | பகல் 12 மணி |
| வியாழன்- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, கடன் படல். | பகல் 12 மணி |
| சனி- | தொழில் விருத்தி, பொருள் இலாபம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5



படிப்பகம்





## கதிர்கள் ஏந்தி வருவாயே....!

உலகம் வாழ ஒளி தருவாய்,
உனது பெயர் தான் சூரியனோ?
உலகம் எங்கும் இருள் நீக்கும்
உண்மை நண்பன் நீதானோ?.

ஆதவன் என்பதும் நீதானே,
அம்மா எனக்குச் சொன்னாரே!
அகிலம் எல்லாம் உன தொளியால்
அழகாய் மிளிருது பார்த்தாயா?

கண்ணன் வந்து உன் பெயரை
கதிரவன் என்றும் சொன்னானே!
கங்குல் போக்க ஒளியுடனே
கதிர்கள் ஏந்தி வருவாயே!

பகலவன் உனது ஒளியாலே,
பயிர்கள் வாழ வழிசெய்வாய்!
பவனி வந்தே வானமதில்
புவனம் எங்கும் ஒளி தருவாய்!

அனுப்பியவர்–சிந்து–பதுளை.

லவம் பல வெள்ளமாம்: லாகவம் பயிற்சி
செய்!
லீலை இவ்வுலகு: (உ)லுத்தரை இகழ்!
(உ)லோகநூல் கற்றுணர்! லௌகிகம்
ஆற்று!
வருவதை மகிழ்ந்துண்! வான நூற்
பயிற்சி கொள்!

–சுப்பிரமணிய பாரதியார்.

### பாப்பா முரசு சிறுகதை

# அடிமையின் புத்திசாதுர்யம்

ரோமாபுரியை நீரோ மன்னன் ஆண்டு கொண்டிருந்தபோது, அவனுக்கு ஊழியம் செய்ய ஏராளமான அடிமைகள் இருந்தனர்.

அவர்களை மேற்பார்வை பார்க்க–வேலை வாங்க, பாசில் என்ற தளபதி ஒருவன் இருந்தான்.

பாசில் மிகவும் மூர்க்கமானவன். ஆஜானுபாகுவான உடல்வாகு கொண்டவன். ஈவு இரக்கமே இல்லாத முரடன். கண்களில் கனலையும், வாயில் கடுஞ்சொற்களையும் எப்பொழுதும் வைத்துக் கொண்டே இருப்பான். அவனது கையில் எப்போதுமே ஒரு சவுக்கு இருந்து கொண்டிருக்கும்.

எந்த அடிமையாவது தனது வேலையில் சற்றுப் பின்தங்கிய நிலையில் இருந்தால், அவனது உடம்பில் பாசிலின் சவுக்கு 'படீர்... படீர்.....' என்று ஈவு இரக்கமே இல்லாமல் விளையாடும்.

அவனிடம் அதிகம் அடி வாங்கியவன் என்ற பெயர் பெற்றவன் கேரோசன் என்ற அடிமை.

கேரோசனின் உடம்பில் சவுக்கடித் தளும்புகள் இல்லாத இடமே இல்லை.



இந்தத் தண்டனைகளைக் கொடுத்த பாசிலை பழி வாங்க வேண்டும் என்று உறுதி பூண்டான்.

ஒரு நாள்–

பலம் மிகுந்த கட்டுக்காவலை மீறி, அடிமை முகாமில் இருந்து தப்பி ஓடினான் கேரோசன்.

அந்த விஷயத்தை உடனே அறிந்த தளபதி பாசில் தனது வீரர்களை அழைத்து, "அவன் எங்கிருந்தாலும் சரி பிடித்து இழுத்து வாருங்கள்", என்று உத்தரவிட்டான்.

வீரர்கள் குதிரைகளில் சென்று நாலா பக்கங்களிலும் தேடினார்கள். ஓரிடத்தில் கேரோசன் அகப்பட்டுக் கொண்டான்.

அவனைக் கட்டி இழுத்து வந்து பாசிலின் முன் நிறுத்தினார்கள்.

"இந்த முறை உனக்குக் கடுந்தண்டனை வழங்கப்போகிறேன்." என்று சொல்லிவிட்டு அவனை இழுத்துக் கொண்டு போய், தர்பாரில் இருந்த நீரோ மன்னனின் முன் தள்ளினான்.

"என்ன விஷயம் பாசில்?" என்று கேட்டான் நீரோ மன்னன்.

"அரசே! அத்தனை கட்டுக் காவலையும் மீறி அடிமை முகாமில் இருந்து இவன் தப்பி ஓடினான். இது ராஜகுற்றம். உடனே இவனுக்கு மரணதண்டனை விதித்து, அதை உடன் நிறைவேற்றி விடுங்கள். அப்போது தான் தப்பிச் செல்லக் கூடாது என்ற எண்ணம் மற்ற அடிமைகளின் மனதில் வரும்!" என்றான் தளபதி பாசில்.

மன்னன் நீரோ, கேரோசனைப் பார்த்தான்.

"கேரோசன்! நீ தப்பி ஓடியது உண்மையா?" என்று கேட்டான்.

"ஆம் அரசே! எனக்கு இங்கிருக்கப் பிடிக்கவில்லை: அதுதான் தப்பி ஓடினேன்," என்றான் கேரோசன்.

"அடிமை முகாமை விட்டுத் தப்பி ஓடுவது ராஜகுற்றம் என்று உனக்குத் தெரியும் அல்லவா? அதற்கு மரண தண்டனை என்று தெரிந்தும் ஏன் தப்பி ஓடினாய்?" என்று கேட்டான் நீரோ மன்னன்.

"அரசே! தப்பி ஓடிய காரணத்திற்காக எனக்கு நீங்கள் மரண தண்டனை விதித்தால், தெய்வம் உங்களைத் தண்டிக்கும். அந்தத் தண்டனை உங்களுக்கு வேண்டுமென்றால் தாராளமாக என்னைக் கொல்லலாம். இல்லையென்றால் தகுந்த காரணத்தோடு என்னைக் கொல்லுங்கள். தெய்வ தண்டனை உங்களுக்குக் கிடைக்காது" என்றான் கேரோசன்.

சற்று நேரம் யோசித்த நீரோ பின்னர்,

"நீ சொல்வதிலும் ஓரளவு உண்மை இருக்கிறது. உனக்கு மரணதண்டனை விதிப்பதற்கான காரணத்தை நீயே உருவாக்கு. அதன் பின் உனக்குத் தண்டனை வழங்குகிறேன்," என்றான்.

"சரி அரசே எனது கைகளுக்கு விடுதலை கொடுத்து எனக்கு ஒரு காட்டாரி கொடுங்கள். இதோ நிற்கிறானே தளபதி பாசில், இவனைக் குத்திக் கிழித்துக் கொலை செய்கிறேன். அந்தக் கொலைக்குற்றத்திற்காகத் தாங்கள் எனக்கு மரணதண்டணை வழங்கலாம்," என்று நெற்றி நரம்பு புடைக்க கத்தினான் கேரோன்.

இதைக் கேட்டுக் கொண்டிருந்த தளபதி பாசில் திடுக்கிட்டு, சட்டென நீரோவின் அருகில் வந்து,

"அரசே! இவனை முதலில் விடுதலை செய்து விடுங்கள். இல்லாவிட்டால், இவனால் என்றுமே எனது உயிருக்கு ஆபத்துத்தான்," என்று படபடப்புடன் சொன்னான்.

சர்வ அதிகாரங்கள் கொண்ட தளபதியே அவனது விடுதலைக்குப் பரிந்துரை செய்ததால், நீரோ மன்னன் கேரோசனை விடுதலை செய்தான்.

கேரோசன் தன் புத்திசாதுரியத்தால் தப்பித்தான்.

## வாரம் ஒரு நாடு



மொராக்கோ

தலைநகர் – ரபாத்
பரப்பு – 4,58,730 சதுரகிலோ மீட்டர்.
மக்கள் தொகை – 2.7 கோடி
மொழி – அரபி, பெர்பர்.
எழுத்தறிவு – 50%
சமயம் – இஸ்லாம்
நாணயம் – திர்ஹாம்
தனி நபர் வருமானம் – 1060 டொலர்.

**அமைவிடம்:**

ஆபிரிக்க வடமேற்குக் கோடியில் அமைந்துள்ள மொராக்கோ, அரசியல் சட்டமுடைய முடியாட்சியின் கீழ் உள்ளது. அட்லஸ் மலைகள் மொராக்கோவின் ஊடே அமைந்துள்ளன.

**வரலாறு:**

1956 வரை பிரான்ஸ் மற்றும் ஸ்பெயினின் ஆதிக்கத்தில் இருந்தது. ஸபெயின், பிரான்ஸ் மற்றும் பிரிட்டனும் உரிமை கொண்டாடிய டல்ஜிர் பகுதி மொராக்கோவில் இருந்தது. 1956 இல் சுதந்திரம் அடைந்தது. மன்னரே பிரதமரை நியமனம் செய்கிறார்.

**பொருளாதாரம்:**

விவசாயம் முக்கிய தொழில். பார்லி, கோதுமை, திராட்சை, பேரீச்சம்பழம் போன்றவை முக்கிய விளைபொருட்கள். கால்நடை வளர்ப்பும், மீன்பிடித்தலும் நடைபெறுகிறது. பொஸ்பேட் உற்பத்தியில் முதலிடம் பெறுகிறது. உலக நாடுகளுக்கு இதனை ஏற்றுமதி செய்கிறது. இரும்புத்தாது, நிலக்கரி, ஈயம், மங்கனீஸ் போன்ற கனிமப் பொருட்களும் கிடைக்கின்றன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 25.05.1996.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 141
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 139

பரிசுக்குரியவர்:
செல்வி. ஏ. ஹில்மியா.
டீன்ஸ் வீதி, மருதானை.

### பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| த. பாபுஜி.<br>வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம். | செல்வன். ஜெ.ஜோய்.<br>புனித சூசையப்பர் கல்லூரி, திருமலை. |
| சித்தி நதிராசமட்.<br>சமகிபுர, நுவரெலியரோட், ஹாலி–எல. | செல்வன். செ. சுகந்தன்.<br>ஸ்ரீ இராமகிருஸ்ண ம.ம. வித்தி., கலஹா. |
| எஸ். கார்த்திகேயன்.<br>செப்பல் வீதி, நுவரெலியா. | ஜநந்தினி தெய்வேந்திரன்.<br>புனித மரியாள் கல்லூரி, திருமலை. |
| கே. விக்னேஸ்வரன்.<br>கஹாகல எஸ்.பி.சி, ஹப்புத்தளை. | செல்வி. ஜெ. மாதவி.<br>காலிவீதி, தெஹிவளை. |
| எம். ரேகலா.<br>விஜயரத்தினம் இந்து மத்தியகல்லூரி, நீர்கொழும்பு. | என். எம். அப்ரான்.<br>அ/நாச்சியாதீவு மு.ம.வி, அநுராதபுரம். |

## ஒட்டகத்தின் கெட்ட குணம்

'பாலைவனக் கப்பல்' என அழைக்கப்படும் ஒட்டகத்திற்கு அவ்வளவாக அறிவுக்கூர்மை இல்லை. இது அடிக்கடி முட்டாள் தனமாக நடந்து கொள்ளும். இதற்குத் தன்னை



வளர்ப்பவனிடம் அன்போ, பற்றோ ஏற்படுவதில்லை. சில சமயங்களில் குறுகிய பாதைகளில் சென்று கொண்டிருக்கும்போது, திடீரென்று திரும்பித் தன் முதுகில் அமர்ந்து இருப்பவரைக் கூடக் கடித்து விடும் கெட்ட குணம் இதற்கு உண்டு.

## பாதுகாக்கும் வீடு

சில வகை மீன்கள் தண்ணீருக்குள் உள்ள மணற் பகுதியில் வசிக்கும். சில வகை மீன்கள் குறுகிய சந்து மற்றும் கடற்பாசிகளில் வாழும். 'பாரட் பிஷ்' எனப்படும் ஒரு வகை மீன்கள் உஷ்ணப் பிரதேசங்களில் உள்ள கடல்களில் வாழும். இவை தங்கள் உடம்பில் இருந்து வழியும் ஒரு வகை திரவத்தில்



இருந்து வீடு கட்டி அதற்குள் வாழும். இவ்வகை வீடுகளால் பாரட் பிஷ்ஷின் எதிரியான விலாங்கு மீன் போன்றவைகளுக்கு இதன் வாசனை தெரியாது. எனவே பாரட் பிஷ் தனது வீட்டின் மூலம் எதிரிகளிடமிருந்து தப்பி வாழ்கிறது.

## வெந்நீர் ஊற்றுக்கள்

* வெந்நீர் ஊற்றுக்கள் என்றால் என்ன?

நிலத்தில் இருந்து வெந்நீர், ஊற்றுக்கள் போல வெளியே வரும். இவற்றை வெந்நீர் ஊற்றுக்கள் என்கிறோம்.

* இந்த வெந்நீர் ஊற்றுக்கள் எப்படி உருவாகின்றன?

பூமிக்கடியில் உருகிய குழம்பு நிலையில்



அதிக சூடான ஒரு பொருள் காணப்படும். அதனை 'மேக்மா' என்று கூறுவர். இந்த மெக்மாவின் இடையே குறுகிய இடைவெளிகள் கிளம்பி பூமியின் மேற்பரப்பு வரையில் இருக்கும். மேக்மாவின் அடியில் தண்ணீர் இருக்கும். பூமியில் அழுத்தம் ஏற்படும் போது இந்தத் தண்ணீர் மேக்மா குழம்புகளின் இடைவெளியில் புகுந்து வேகமாக பாய்ச்சப்படுவதால் வெளியே வரும்போது வெந்நீர் ஊற்றுக்களாக உருவாகின்றன.

* உலகில் மிகப்புகழ் பெற்ற வெந்நீர் ஊற்று எது?

அமெரிக்காவில் உள்ள மஞ்சள் கல் தேசிய பூங்காவில் உள்ள 'ஓல்ட் ஃபெய்த்' வெந்நீர் ஊற்று.

* ஏன் இதை 'ஒல்ட் பெய்த்' (பழைய நம்பிக்கை) வெந்நீர் ஊற்று என்கிறார்கள்?

முன்பெல்லாம் 60–65 நிமிடத்திற்கு ஒரு முறை சரியான கணக்கில் இந்த வெந்நீர் ஊற்று பொங்கி வழியும். ஆனால் இப்போது 30-90 நிமிடங்களுக்கு ஒருமுறை என்று சரியான கணக்கில் பீறிடாமல் மாறி மாறிப் பொங்குவதால் இதனை 'பழைய நம்பிக்கை' வெந்நீர் ஊற்று என்கிறார்கள்.

* ஒரு முறை பொங்கி வழியும் போது எவ்வளவு தண்ணீர் வெளியேறும்?

இந்த வெந்நீர் ஊற்று இரண்டு நிமிடத்திற்குத் தொடர்ந்து நீரைக் கக்கும். அப்போது வெளிவரும் தண்ணீரின் அளவு ஏறக்குறைய 54 ஆயிரம் லீட்டர்.

## ஒரு வரிச் செய்திகள்

* அமெரிக்க அதிபரின் கார் எண் எப்போதும் 100.
* உலகின் ஒரே ஒரு நாத்திக நாடு அல்பேனியா.
* மலேசிய மக்களின் மூன்றில் ஒரு பகுதியினர் சீனர்கள்.
* சில வகை ஆந்தைகளுக்கு கொம்பு உண்டு.
* உலகிலேயே மிகப்பெரிய கப்பல்தளம் தென்கொரியாவில் உள்ளது.
* கரடியின் பித்த நீரில் இருந்து மருந்து தயாரிக்கப்படுகிறது.
* சிஸெல்ஸ் நாட்டின் தேசிய சின்னம் ஆமை.
* முதலில் காசோலையை அறிமுகப் படுத்திய நாடு இங்கிலாந்து.
* அணுகுண்டை கண்டு பிடித்தவர் ஒட்டோஹோன்.

www.padippakam.com

அந்த ஆண்களின் ஹாஸ்டலுக்குப் பின்னால் -வந்து போகும் ரயிலின் ஓசை கேட்டவாறு இருந்தது.

மெஸ்சில் சாப்பிட்டுக் கொண்டிருந்த மாணவர்களில் இரண்டு பேர் மிக அவசரத்திலிருந்தார்கள்.

"ஏய் சீக்கிரம் ஆகட்டும்டா ராகவா! நீ திங்கிற அழகுக்கு நாம போய்ச் சேருகிறதுக்குள்ளே படமும் ஆரம்பிச்சு இடைவேளையும் விட்டுடுவான் போல தெரியுது. ஹார்ரியப் மேன்."

"அதுக்காக வயத்தைக் கிழிச்சா சாப்பாட்டைத் திணிக்க முடியும்? எல்லாம் நேரத்தோட போய்ச் சேரலாம். அதுக் கெல்லாம் ஐடியா வைச்சிருக்கேன்."

"என்ன?"

"பிரதான வாசலைத் தள்ளி திறந்து சாலை வழியாகச் சுற்றிப் போகிறதானால் தானே நேரமாயிடும்? குறுக்கு வழியாகப் போனால் போகிறது."

"பின்னால் முள் வேலியைக் கடந்து ரயில் தண்டவாளத்தையும் கடந்தா?"

"ஆமாம்."

"ஐயோ."

"ஏண்டா? ஏண்டா இந்தக் கத்து கத்தறே?"

**உலர்ந்து போன ரத்தத்தின் மொட மொடப்பினால் சரசரத்துத் தெரிந்தது அந்த பெட்ஷீட். ஓரத்தில்..........**

காய்ச்சுவதும் உண்டு.

இரண்டு வாரத்துக்கு முன்னால் போலீஸ் ரெயிடு நடந்து சாராய அதிபர்களை உள்ளே தள்ளியதோடு காவலும் போட்டது.

மூன்று நாளைக்கு முன்னால் கூட ஒரு போலீஸ்காரர் நின்று கொட்டாவி விட்டவாறு உலாவிக் கொண்டிருந்தார்.

அந்த இடத்துக்கு காவல் போதுமென்று நினைத்த போலீஸ் டிபார்ட்மெண்ட் அந்த ஆளைத் திரும்ப அழைத்து இரண்டொரு நாள்தான் ஆகிறது.

அதற்குப் பிறகுதான் அந்த ஆளின் பிணம் கிடந்தது. எங்கேயோ தொலைவில் கறுப்பு மேகக் குவியல்கள் குமுறுவது இங்கே வரை கேட்டது.

இருக்கையிலிருக்கும் நண்பனை நலம் விசாரிக்கலாம்.

பார்த்தான்.

அந்த சிக்னல் ஷெட் கண்ணில் பட்டதும்-

ஓடினான். அவசரமாக படியேறி தகரக் கூரைக்குக் கீழே நின்றான்.

மழை கனத்துவிட்டிருந்தது.

தரையில் வெள்ளையாக துணி ஒன்று இருட்டிலும் தெரிந்தது.

சட்டைப் பையில் கைவிட்டு சிகரெட்டை எடுத்து வாயில் பொருத்தினான். லைட்டரை நுணுக்கி பற்றவைக்கும் போதுதான் அந்த வெள்ளைத் துணியை சரியாகப் பார்க்க முடிந்தது.

கறை! சிவப்பு சிவப்பாக கறை!

பெரிய இரட்டைக் கட்டிலுக்கான பெட்ஷீட் அது.

கறை! ரத்தக்கறையாக இருக்குமா? கொன்றுபோட்ட அந்த ஆண் பிணத்தைச் சுற்றிவந்த விரிப்பாக இருக்கும்.

கீழேயிருந்து வீசி எறிந்து இருப்பார்களோ?

அங்கே நிற்கவே பயமாக இருந்தது. செத்துக்கிடந்த ஆள் எழுந்து நின்று 'மழை பெய்கிறது, பெட்ஷீட்டைக் கொடு' என்று கேட்பது போன்ற பிரமை ஏற்படவே-

பயந்து மழையையும் பொருட்படுத்தாமல் இறங்கி ஓடினான். ரயிலுக்காக சாத்தி வைத்த கேட்டைக் கடந்து குதித்து தியேட்டரை



# நீ! நீயா!



நோக்கி ஓடினான்.

மழையின் காரணமாக படம் இன்னமும் ஆரம்பமாகவில்லை.

கூட்டத்துக்காக காத்திருந்தார்கள் போலிருக்கிறது. 'நிர்வாகி' என்று பலகை போட்ட கதவைத் தள்ளித் திறந்து உள்ளே போனபோது-

கொட்டாவிக்காக பிரம்மாண்டமான வாயை மேலும் பிரம்மாண்டமாகத் திறந்து கொட்டாவி விட முயன்றவர்-

திறந்த வாய் திறந்தேயிருக்க-உயர்த்திய கைகள் உயர்ந்தே நிற்க கொஞ்ச நேரம் 'நே' என்று விழித்தவர்-திடீரென்று கத்தினார்.

"யாரது? ஏன் உள்ளே வரே?"

"கொஞ்சம் போன் பண்ணணும் அனுமதி வேண்டும்."

"அனுமதிக்கிறதுக்கில்லே. நீ போன் பண்ணத்தான் வாங்கி மேஜை மேலே குந்த வைச்சிருக்கேனா? போ.போ."

"சாரி. எங்க மாமாவோட அவசரமா பேசணும்."

"அங்கே தானே ஓர் ஆணை அடிச்சு கொலை செய்து போட்டிருந்தாங்க? ராத்திரி நேரம்? நான் மாட்டேம்பா."

"அடப் போடா பயந்தாங்கொள்ளி."

"நான் மாட்டேம்மா. நான் எங்கப்பா அம்மாவுக்கு ஒரே பிள்ளை. அதுவும் பேய் பிசாசுகளில் நம்பிக்கை அதிகமுள்ள பிள்ளை."

"என்னடா எழுந்துட்டே?"

"நான் சாப்பிட்டாச்சு. ஒண்ணு செய். நான் முன்னால நேர் வழியில போறேன். நீ வேணுமானால் உன் சிறப்பு வழியாக வா. கொடு."

"எதை?"

"என் டிக்கெட்டை?" என்றவன்-

"இருடா போகலாம்." என்ற இவனை அலட்சியப்படுத்தி பையில் கைவிட்டு இரண்டு டிக்கெட்களை எடுத்து ஒன்றை அவன் பையிலேயே செருகிவிட்டு நடந்தான். "தியேட்டரில் சந்திப்போம்."

முணுமுணுப்பாக திட்டியபடி "சீக்கிரமா தயிர் கொண்டு வாயேன்ய்யா," என்றான் சர்வரைப் பார்த்து கத்தலாக.

**பி**ன்னால் அந்த ஆணின் பிணம் கிடந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி- அந்த சிக்னல் ஷெட் இருந்தது. ஒரு காலத்தில் அதிலிருந்த லீவரை இழுத்து கைகாட்டி மரத்தை இறக்கினால் தான் ரயில் நகரும்.

இப்போது அதெல்லாம் பழங்கதை.

இப்போது விஞ்ஞானம் வளர்ந்து தானியங்கி மின்சார சிக்னல்கள் வந்து விட்டதும், இந்த ஷெட் மவுசு இழந்து போயிற்று. இதற்கு தேவையே இல்லை. சீந்துவாருமில்லை.

மரப்படிகளில் ஏறிப் போனால் தகரக் கூரை (துருப்பிடித்தது) வேய்ந்த காபின் சிக்னல் போர்டு. (அதுவும் துருப்பிடித்தது) சிக்னல் போடும் பாயிண்ட் லீவர்களும் அனாதையாக இருந்தன-பகலில் மட்டும்.

சில சமயம் இரவு நேரங்களில் ரகசியமாக ஓரம் கட்டும் ஆட்கள் இங்கே காணப்படுவார்கள். போலீசுக்குப் பயந்த ஆட்கள். பரவலாக சாலையில் ஆட்களை நிறுத்தி விட்டு இங்கே கள்ளச்சாராயம்

காற்றில் ஜில்லென்ற ஈரமிருந்தது. வேகமுமிருந்தது.

இந்த அளவு காற்று வேகமாக வீசினால்-

ஒன்று அந்த மேகங்கள் கலைந்து காணாமல் போய் விடும். அல்லது-

பயங்கர மழை பெய்யும். ஆரம்பித்தால் அரை மணி நேரமாவது விடாது பேய் மழை.

இந்த இரண்டில் எது நிகழப் போகிறதோ?

சாப்பிட்டு முடித்த அந்த மாணவன் கைக்கடிகாரத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனான்.

**கே**ஷிலிருந்த பருமனான ஆளை "மாமா" என்று கூப்பிட்டுக் கத்திவிட்டு வெளியேறிப் பாய்ந்து போனான்.

விநாடிகளில் விளையாட்டு மைதானத்தைக் கடந்தான்.

முள்வேலி முட்கள் பாண்ட்டைக் கிழித்து விடாமல் கவனமாக எகிறி அந்தப் பக்கம்




குதிக்கும் போதே-

சடசடவென்று மழை பிடித்துக் கொண்டுவிட்டது.

"ஓ!நோ," என்று தயங்கி நின்றான். திரும்ப கல்லூரி விடுதிக்குப் போனாலும் சரி. கேட்டுக்கு அப்பாலிருக்கும் தியேட்டருக்கு ஓடினாலும் சரி. முழுசாய் நனைவது என்பது உறுதி.

சற்று ஒதுங்கி நின்றால் மழை இப்ப விட்டுடும். ஒரே மூச்சாக ஓடினால் தியேட்டரில் புகுந்துவிடலாம். பக்கத்து

"மாமாவோட மாமியோட பேசத்தான் இதை வாங்கி வச்சிருக்கேனா? போப்பா. போப்பா."

"என் மாமா யாருன்னு தெரிஞ்சா இப்படித்துரத்த மாட்டீங்க சார்."

"அது யாரானாலும் எனக்கு அனாவசியம். முடியாதுன்னா முடியாதுதான் போ." என்றவர்-

"இந்த ஏரியா போலீஸ் இன்ஸ்பெக்டர்." என்று இவன் சொல்ல-

உடனே மாறினார்.

"இன்ஸ்பெக்டர் மருமகனா நீ?"

"யாரது?" என்று கேட்க ஆசைப்பட்டாலும் அடக்கிக் கொண்டார். அவன் நம்பர் சொல்லச் சொல்ல-

அவரே டயல் செய்து தந்த நம்பருக்காக போனைக் காதில் பொருத்திக் கொண்டு நின்றான்.

அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த தியேட்டர் முதலாளி-

யாரோ "சார் பொம்பளைங்க சைடில சண்டை சார்." என்று சொல்லவே இவனைப் பேசவிட்டு ஓடினார்.

தாய்க்குலத்தின் மீது அத்தனை பற்று அவருக்கு.

"இன்ஸ்பெக்டர் இருக்கிறாரா?"

"நீ யாருப்பா?"

"அது அவ்வளவு முக்கியமில்லே மிஸ்டர் வேதநாயகம்! நான் தருகிற தகவல் தான் உங்களுக்குத் தேவை."

"என் பெயர் உனக்கெப்படித் தெரியும்?"

"மறுபடியும் நான் பதில் சொல்ல முடியாத கேள்வியையே தான் கேட்கறீங்க. விஷயத்தைக் கேட்கிறதானா மட்டும் சொல்லுங்க. இல்லேன்னா போனை வைச்சிடறேன்,"

"என்ன விஷயம் சொல்லு."

"சமீபத்தில ரயில்வே லயன் பக்கத்தில் ஓர் ஆளின் பிணத்தைக் கண்டு பிடிச்சீங்க இல்லையா?"

"ஆமாம். அது யாருன்னு அடையாளம் தெரியுமா?"

## மர்மக்கதை மன்னன் ராஜேஷ்குமார்

"அது உங்க தலைவலி. நான் சொல்ல வந்த விஷயமே வேற. முக்கியமான தடயம் ஒண்ணு என் கண்ணில பட்டது. அதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது என் கடமைன்னு மனசில் பட்டது."

"சொல்லு என்ன அது?"

"ஒரு படுக்கை விரிப்பு ரத்தக் கறைகளோட கூடிய ஒரு விரிப்பு."

"எங்கேயிருந்து பேசறே?"

"மறுபடியும் பதில் சொல்ல முடியாத கேள்வியா? சார்! உங்களுக்குத் தகவல் தருகிறதோட ஒதுங்கிக்க ஆசைப்படறேன். அதனால நீங்க என்னதான் துருவினாலும் என்னைப்பற்றி எதுவும் சொல்லமாட்டேன்."

"சரி கேள்வியை மாற்றிக் கேட்கிறேன். எங்கே பார்த்தே அந்த படுக்கை விரிப்பை?"

"அப்படி கேளுங்க சொல்றேன்." என்று ஆரம்பித்தான்.

"உடனே போனீங்கன்னா அதை ஆராயலாம். அதனால உங்களுக்கு ஏதும் துப்பு கிடைக்கலாம். பெஸ்ட் ஆஃப் லக்."

"ஹலோ... ஹலோ..." என்று அவர் கத்துவதை, போன் ரிசீவரை சற்றே உயர்த்திப் பார்த்தான்.

கவிழ்த்து வைத்துவிட்டான்.

"தம்பி! பேசி வைச்சிட்டியா? நம்ம தியேட்டர்ல ரவுடி பய ஒருத்தன் எப்ப பார்

ரகளை பண்ணறான். உன் மாமன் கிட்ட சொல்லி..."

"ஆமா, இது பெரிய அகில உலகப் பிரச்சினையாக்கும். போய்ச் சொல்லி அவர் வந்து சேருகிறதுக்குள்ளே ஆள் சாராயக் கடையைத் தேடிப் போயிருப்பான்."

**ம**ழை விடும் வரை காத்திருந்த இன்ஸ்பெக்டர் வேதநாயகம் ஜீப்பில் இரண்டொருவரை அழைத்துக் கொண்டு கிளம்பினார்.

டிரைவருக்கு வழி சொல்லிக் கொண்டே தியேட்டர் வந்ததும் நிறுத்தி வைத்துப் பார்த்தார்.

போனை அந்த ஆள் கவிழ்த்து வைக்கும் முன்னால் நல்லெண்ணெய் விளம்பரம் ஒன்று 'பொம்பளைங்க சமாச் சாரம்' என்றதைக் கேட்டதும், கூடவே பெண்களின் கூச்சலான சண்டை ஓசையும் கேட்டது நினைவில் வர-

மீண்டும் தியேட்டரைத் திரும்பிப் பார்த்தார். ஒரு வேளை...

போன் செய்த ஆள் இங்கிருந்தே செய்திருப்பானோ?

"இறங்கி விசாரிப்போமா?" என்று ஒரு விநாடி நினைத்தவர்...

இப்போதைக்கு அது அவசரமில்லை. அதற்குள் போய் அந்த படுக்கை விரிப்பை சரிபார்க்க வேண்டும். வழக்கின் ஒரு நுனி கையில் கிடைத்தாலும் கிடைக்கலாம்.

யார் கண்டது?

"நேராக போ டிரைவர்" என்றார் உத்தரவாக.

கேட் இன்னமும் சாத்தியே இருக்கவே இறங்கி மற்றவர்கள் பின்தொடர ரயில்வே லயன் பக்கமாகவே நடந்தார்.

கேபின் கூண்டு தெரியவே-மெல்ல அதை நோக்கி நடந்தார்.

"நீங்க கீழேயேயிருங்க." என்று மரப்படி ஏறினார். இவர் பலத்தைத் தாங்க மாட்டாத அந்த மரப்படிகள் மிக மோசமாக முனகின.

இருட்டைத் தவிர்க்க கையிலிருந்த டார்ச்சை கோடாக ஒளி செலுத்தினார். தரையில் வட்ட ஒளி கோலம் போட்டு அலைந்த டார்ச் ஒளி ஓரிடமாக நின்ற இடத்தில்-

அந்த வெள்ளைப் படுக்கை விரிப்பு உலர்ந்து போன ரத்தத்தின் மொட மொடப்பினால் சரசரத்துத் தெரிந்தது. கவனமாக எடுத்து ஆராய்ந்தவர்-அதன் ஓரத்திலிருந்த ஹோட்டல் சின்னத்துக்கு வியந்து போனார்.

'இரும்பு கடற்கரை' ஓட்டலின் முத்திரையிருந்தது.

**(தொடர்ந்து வரும்)**

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எம். சிவராசா.
வயது: 25
முகவரி: 62/4, டவர் பிளாட்ஸ், பஞ்சிகாவத்தை வீதி, கொழும்பு-10.
பொழுது போக்கு: பழைய நாணயம், முத்திரை சேகரித்தல்.



பெயர்: ரி. கஜேந்திரன்.
வயது: 29
முகவரி: BAHN HOF PKATZ-15 8001 ZURICH, SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை, ரீ.வி.



பெயர்: எம். ஜெயராணி.
வயது: 24
முகவரி: கும்புறுமூலை, வெம்பு. கிரான்.
பொழுது போக்கு: தையல்.



பெயர்: இம்டியாஸ் மும்தாஜ்.
வயது: 20
முகவரி: 9/1, பெலஸ்பாத், பேருவளை.
பொழுது போக்கு: வானொலி, தொலைக்காட்சி.



பெயர்: முகமட் முபாரக்.
வயது: 25
முகவரி: P.O.BOX- 20675, JEDDAH 21465, K.S.A.
பொழுது போக்கு: பத்திரிகை, புத்தகம்.



பெயர்: எல். சுஃப்னா.
வயது: 26
முகவரி: HOUSE NO.56, STREET NO.91, BLOCK NO.4, NEW KAITTAN, FREE KUWAIT.

பெயர்: எம். நிஸாத்.
வயது: 24
முகவரி: ஹில்வி, கல்பிட்டி,
பொழுது போக்கு: பத்திரிகை, ரீ.வி., பேனாநட்பு.

பெயர்: எம். நிஸ்வி.
வயது: 19
முகவரி: அக்குறணை ஸ்டோர்ஸ், குபுக்வெவ, குருநாகல்.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: கே. ராஜா.
வயது: 21
முகவரி: 48, WEST BURY ROAD, WEMBLEY MIDDX, HA 64 JY, LONDON,

பெயர்: கே. சுகுணராஜ்.
வயது: 22
முகவரி: பழம் தோட்டம்-09, களுவாஞ்சிக்குடி.
பொழுது போக்கு: வானொலி, ரீ.வி.

பெயர்: ஜி. ரோகன்.
வயது: 16
முகவரி: லெஜர் வத்தை குறூப், நாராங்கலை எஸ்டேட், கந்தேகெதர.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். மாஹிர்.
வயது: 20
முகவரி: பழைய தபால் கந்தோர் வீதி, ஊர்வீதி, காத்தான்குடி-04.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

## மக்சீம் கார்க்கி

அவள் பேசும் போது அவளது உள்ளத்தில் பெருமை உணர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகி வளர்ந்தது. அவளது மனத்தில் எழுந்த வீரசொருபத்தை விளக்கிச் சொல்ல வார்த்தைகள் பொங்கிவந்தன, தொண்டை அடைத்தது. அன்றைய தினத்தில் அவள் கண்ணால் கண்ட இருண்ட சம்பவத்தை-அந்த இருளின் அர்த்தமற்ற பயங்கரமும், வெட்கரமான கொடுமையும் அவளது மூளைக்குள்ளே துடிதுடித்துக் கொண்டிருக்கும் தவிப்பை- சமனப்படுத்துவதற்கு, அவளுக்கு வேறொரு ஒளி மிகுந்த நல்ல விஷயம் தேவைப்பட்டது; எனவே அவள் அப்படிப் பேசினாள். தனது ஆரோக்கியமான ஆத்மாவின் தூண்டுதல்களுக்கெல்லாம் தன்னையுமறியாமல் பணிந்து கொடுத்து தனக்குத் தெரிந்த சகல விஷயங்களையும் அவள் ஞாபகப்படுத்திப் பார்த்தாள். அந்த விஷயங்களெல்லாம் ஒன்று கலந்து புனிதமும், பிரகாசமும் நிறைந்த ஒரு பெருந்தீப ஒளியாகத் திரண்டெழுந்து, தனது அக்கினி வேகத்தால் அவள் கண்களையே குருடாக்குவது மாதிரி ஒளி வீசிப் பிரகாசித்தன.

"அவன் மாதிரி இப்போது எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். எத்தனையோ பேர் நாளுக்கு நாள் தோன்றிக் கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையின் அந்திம தினம் வரையிலும் சத்தியத்துக்காகவும் சுதந்திரத்துக்காகவும் போராடிக் கொண்டே இருப்பார்கள்...."

அவள் எச்சரிக்கையற்றுப் பேசினாள். எனினும் அவள் யாருடைய பெயரையும் வாய்விட்டுச் சொல்லி விடவில்லை. மக்கள் சமூகத்தை பேராசையென்னும் பெருவிலங்கிலிருந்து விடுதலை பெறச் செய்வதற்காக நடைபெறும் இரகசிய நடவடிக்கைகளைப் பற்றித் தனக்குத் தெரிந்ததையெல்லாம் அவள் சொல்லித் தீர்த்தாள். தனது பிரியத்துக்குப் பாத்திரமான நபர்களைப் பற்றி வருணிக்கும்போது அவள் தான் பேசும் வார்த்தைகளில் தனது பலத்தையெல்லாம் பெய்து பேசினாள்; இத்தனை காலத்துக்குப் பிறகு அவளது மனத்திலே வாழ்க்கை அனுபவங்கள் மலரத் தொடங்கிய அபரிமிதமான அன்பையெல்லாம் அந்தப் பேச்சில் சொரிந்தாள். தனது மனக் கண் முன்னால் ஒளிப் பிழம்பாய் எழுந்து, தனது உணர்ச்சியால் கௌரவிக்கப்பட்டு விளங்கும் அந்த மனிதர்களைப் பற்றி நினைக்கும்போது அவளுக்கே ஆனந்தம் கரை புரண்டு விம்மியது.

"இதே காரியம் உலகம் எங்கிலும், சகல நகரங்களிலும், சகல ஊர்களிலுமுள்ள நல்லவர்களால் ஒரே ரீதியில் நடத்தப் பெற்று வருகிறது. இதற்கு ஒரு முடிவில்லை; அளவில்லை. நாளுக்கு நாள் இந்த இயக்கம் வளர்கிறது, நமக்கு வெற்றி கிட்டுகின்ற நிமிஷம் வரையிலும் இது வளர்ந்து கொண்டுதான் போகும்...."

அவளது குரல் நிதானமாகப் பொழிந்து வந்தது. இப்போது அவள் வார்த்தைகளுக்காகச் சிரமப்படவில்லை. அன்றைய சம்பவத்தின் இரத்தமும் புழுதியும் படிந்த கறையைத் தன் இதயத்தை விட்டுக் கழுவிப் போக்க வேண்டும் என்ற ஆசையெனும் பலத்த நூலிலே, அவளது வாய் வார்த்தைகள் வர்ணஜாலம் வீசும் பாசிமணிச் சரம் போல் வரிசை வரிசையாக வந்து விழுந்து கோர்த்துக் கொண்டிருந்தன. தான் சொன்ன விஷயங்களைக் கேட்டு அந்த முஜீக்குகள் இருந்த இடத்திலேயே முளை அறைந்தாற் போல் அசையாதிருப்பதை அவள் கண்டு கொண்டாள். அவர்கள் ஆடாமல் அசையாமல், அவளை இமை தட்டாமல் பார்த்தவாறே இருந்தார்கள். தனக்கு அருகிலிருந்த பெண் சிரமப்பட்டு மூச்சு வாங்குவதையும் அவளால் கேட்க முடிந்தது. இவையனைத்தும் தான் சொல்லும் விஷயத்திலும், தான் அந்த மக்களுக்கு உறுதியளிக்கும் விஷயத்திலும், அவள் கொண்டிருந்த நம்பிக்கையை மேலும் பலப்படுத்தியது...

"கஷ்ட வாழ்க்கைக்கு ஆளானவர்கள் அனைவரும், அடக்கு முறையாலும் தேவையாலும் அலைக்கழிக்கப்பட்டு நைந்து போன மக்கள் அனைவரும், பணக்காரர்களாலும் பணக்காரரின் கைக் கூலிகளாலும் தரையோடு தரையாய் நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்கள் அனைவரும்-மக்களின் நலத்துக்காகப் படுமோசமான சித்திரவதைக்கு ஆளாகி, சிறைக்குள்ளே கிடந்து அழிந்து கொண்டிருக்கும் அந்த மக்களோடு, ஒன்று சேர வேண்டும். தங்களைப் பற்றிய எண்ணம் ஒரு சிறிதுகூட இல்லாமல் அவர்கள் சகல மக்களுக்கும் சுபிட்சப் பாதையைக் காட்டுகிறார்கள். அவர்கள் எந்த வித ஒளிவு மறைவுமில்லாமல், 'இந்தப் பாதை கரடு முரடானது தான்' என்று கூறுகிறார்கள். இந்தப் பாதையில் வரும்படி எவரையும் அவர்கள் நிர்ப்பந்திப்பதில்லை. ஆனால், ஒரு மனிதன் அவர்களோடு போய்ச் சேர்ந்து கொண்டால் அவனே அவர்களை விட்டுப் பிரிந்து செல்ல மாட்டான். ஏனெனில், அதுவே சரியான பாதையென்பதையும், அதைத் தவிர வேறு மார்க்கமே கிடையாது என்பதையும் அவன் கண்டு கொள்வான்!"

அவளது மனத்தில் நீண்ட நாளாக இருந்து வந்த ஆசையை-அதாவது அவளே மக்களுக்கு உண்மையைப் போதிக்க வேண்டும் என்னும் அவளது விருப்பை-அன்று நிறைவேற்றிக் கொண்டபோது அவளுக்கு ஒரே ஆனந்தமாயிருந்தது.

"அம்மாதிரி மனிதர்களோடு சேர்ந்து செல்வதைப் பற்றிச் சாதாரண மக்கள் கவலைப்படவே தேவையில்லை. அந்த மனிதர்கள் அற்பசொற்ப வெற்றியோடு திருப்தியடைய மாட்டார்கள். சகல ஏமாற்றுக்களையும், சகல பேராசைகளையும், சகல தீமைகளையும் ஒழித்துக் கட்டினாலன்றி அவர்கள் தமது இயக்கத்தை நிறுத்த மாட்டார்கள். அனைத்து மக்களும் ஒன்றாகச் சேர்ந்து, ஒரே குரலில், 'நான் தான் அதிகாரி. நான் தான் சகல மக்களுக்கும் சமமான-பொதுவான சட்டதிட்டங்களை உண்டாக்குவேன்' என்ற கோஷத்தைக் கிளப்புகிற வரையிலும், அவர்கள் ஓய்வு கொள்ள மாட்டார்கள்!"

களைப்புணர்ச்சி தோன்றவே, அவள் பேச்சை நிறுத்திச் சுற்றுமுற்றும் பார்த்தாள். தான் பேசியது வீண் போகவில்லை என்ற அமைதியான நம்பிக்கையுணர்ச்சி அவள் உள்ளத்தில் நிரம்பி நின்றது. அந்த முஜீக்குகள் இன்னும் எதையோ எதிர்நோக்கி அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தனர். பியோத்தர் மார்பின் மீது கைகளைக் கட்டிய வாறு, கண்களைச் சுருக்கி விழித்தான்; அவனது உதடுகளில் ஒரு புன்னகை உருவாகி அசைந்தது. ஸ்திபான் முழங்கையொன்றை மேஜை மீது ஊன்றி, தனது உடம்பு முழுவதையுமே முன்னோக்கித் தள்ளி, இன்னும் எதையோ கேட்டுக் கொண்டிருக்கும் பாவனையில் இருந்தான். அவனது முகம் இருண்ட பக்கமாக இருந்தது. எனவே அது ஒரு பரிபூரண உருவம் பெற்றது போல் தெரிந்தது. அவனது மனைவி தாய்க்கு அடுத்தாற் போல் உட்கார்ந்து முழங்காலின் மீது முழங்கைகளை ஊன்றிக் குனிந்து, தரையையே கவனித்துக் கொண்டிருந்தாள்.

"இப்படித்தான் இருக்கிறது" என்று அடி மூச்சுக் குரலில் கூறிக் கொண்டே பியோத்தர் மெதுவாகப் பெஞ்சின் மீது உட்கார்ந்தான்.

ஸ்திபான் நிமிர்ந்து உட்கார்ந்து, தன் மனைவியைப் பார்த்தான்; அங்குள்ளவர்கள் அனைவரையுமே அணைத்துக் கொள்ளப் போகிறவன் மாதிரி கைகளை அகல நீட்டினான்.

"இந்த மாதிரி விஷயத்தில் ஒரு முறை தலையைக் கொடுத்து விட்டால், அப்புறம், அதற்காகவே தன் முழு ஆத்மாவையும் அர்ப்பணித்து, முழு மூச்சுடன் ஈடுபடத்தான் நேரும்..." என்று ஏதோ நினைவிலாழ்ந்தபடி கூறத்தொடங்கினான் அவன்.

"ஆமாம்! உண்மைதான். திரும்பிப் பார்க்கிற வழக்கமே கூடாது" என்று வெட்கத்தோடு கூறிக் கொண்டான் பியோத்தர்.

"இந்த இயக்கம் பேரளவில் வளர்ந்து விட்டதாகவே தோன்றுகிறது" என்றான் ஸ்திபான்.

"உலகளவில்" என்றான் பியோத்தர்.

❑❋❑❋❑

தாய் சுவரின் மீது சாய்ந்து, தலையைப் பின்னால் சாய்த்து, அவர்கள் சொல்லும் ஆழமும் அமைதியும் நிறைந்த வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். தத்யானா எழுந்திருந்து, சுற்றும் முற்றும் பார்த்தாள்; மீண்டும் உட்கார்ந்து கொண்டாள். அந்த முஜீக்குகளை வெறுப்போடும் கசப்புணர்ச்சியோடும் நோக்கிய அவளது பசிய கண்கள் வறட்சியாகப் பிரகாசித்தன. திடீரென்று அவள் தாயின் பக்கம் திரும்பினாள்.

"உங்கள் வாழ்க்கையில் நீங்கள் எவ்வளவோ துயரங்களை அனுபவித்திருக்க வேண்டும்" என்று சொன்னாள்.

"ஆமாம்" என்று பதில் சொன்னாள் தாய்.

"உங்கள் பேச்சு, எனக்கு கேட்கக் கேட்கப் பிடித்திருக்கிறது. உங்கள் வார்த்தைகள் இதயத்தையே இழுத்து நீட்டுகின்றன. நீங்கள் பேசும் போது நான் எனக்குள் 'கடவுளே, இவள் பேசுகின்ற மனிதர்களை நான் கொஞ்ச நேரமேனும் பார்க்கக் கொடுத்து வைக்க மாட்டாயா? வாழ்க்கையையே நான் காண மாட்டேனா?' என்று நினைத்துக் கொள்கிறேன். இங்கு நாங்கள் வாழ்க்கையில் என்னத்தைக் காண்கிறோம்? வெறும் ஆட்டு மந்தையாகத் தான் நாங்கள் இருக்கிறோம். உதாரணமாக, என்னையே பாரேன். எனக்கு எழுத படிக்கத் தெரியும். புத்தகங்களைப் படிக்கிறேன். எதை எதைப் பற்றி யெல்லாமோ சிந்திக்கிறேன். சமயங்களில் சிந்தித்துச் சிந்தித்தே இரவெல்லாம் தூங்காமல் அவதிப்பட்டிருக்கிறேன். ஆனால் அதனால் என்ன லாபம்? நான் சிந்திப்பதை நிறுத்திவிட்டால், ஒன்றுமற்று வாடி வதங்கி நாசமாய்ப் போவேன்; சிந்திப்பதைத் தொடர்ந்து மேற்கொண்டாலும் அதனாலும் எனக்கு எந்தப் பயனும் இல்லை."

பேசும் போது அவளது கண்களில் கேலிபாவமே பிரதிபலித்தது. சமயங்களில் அவள் தான் பேசும் வார்த்தைகளை ஏதோ ஒரு நூலைக் கடித்துத் துண்டாக்குவது மாதிரி உச்சரித்தாள். அந்த முஜீக்குகள் எதுவும் பேசவில்லை. காற்று ஜன்னல் கதவுகளின் மீது வீசியடித்தது; புகைக் கூண்டுவழியாக லேசாக முணுமுணுத்து வீசியது; வீட்டுக் கூரை மீது சலசலத்தது. எங்கோ ஒரு நாய் ஊளையிட்டது, எப்போதாவது இடையிடையே மழைத்துளிகள் வேண்டா வெறுப்பாக ஜன்னலின் மீது விழுந்து தெறித்தன. விளக்கின் சுடர் படபடத்துக் குறுகி, அணைவது போல் இறங்கியது. மீண்டும் சுடர் வீசி எழுந்து அதிக பிரகாசத்துடன் நிலையாக நின்று எரிந்தது.

"நீங்கள் பேசுவதைக் கேட்கும் போது, 'இதற்காகத் தான் மக்கள் வாழ்கிறார்கள்' என்று எனக்குள்ளாகச் சிந்தித்துக் கொண்டிருந்தேன். அவையெல்லாம் எனக்கே தெரிந்த விஷயங்கள் மாதிரி உணர்ந்தேன். அதுவே எனக்கு ஓர் அதிசயம். ஆனால், இந்த மாதரி யாரும் இதுவரை பேசி நான் கேட்ட தில்லை. நானும் இந்த மாதிரி எண்ணங்களைச் சிந்தித்துப் பார்த்ததில்லை...."

"ஏதாவது சாப்பிட்டுவிட்டு, சீக்கிரம் விளக்கை அணைப்பது நல்லது. தத்யானா" என்று முகத்தைச் சுழித்துக் கொண்டே மெதுவாகச் சொன்னான் ஸ்திபான்; "சுமகோவின் வீட்டில் இரவு அகாலம் வரையிலும் விளக்கு எரிவதை ஜனங்கள் கண்டு கொள்ளக்கூடும். அதனால் நமக்கு ஒன்றுமில்லை. ஆனால் நமது விருந்தாளியின் நலத்துக்கு அது உகந்ததல்ல...."

தத்யானா எழுந்து அடுப்பருகே சென்றாள்.

"ஆ-மா-ம்" என்று புன்னகை புரிந்தான் பியோத்தர்; "இப்போதெல்லாம் நாம் உஷாராய்த் தானிருக்க வேண்டும். இந்தப் பத்திரிகைகள் ஜனங்கள் மத்தியிலே மீண்டும் தலைகாட்டியவுடனே....."

"நான் என்னைப் பற்றி நினைக்கவே இல்லை. அவர்கள் என்னைக் கைது செய்து கொண்டு போனாலும் எனக்கு அதனால் பெரிய நஷ்டம் ஏதும் விளையப் போவதில்லை."

அவன் மனைவி மீண்டும் மேஜையருகே வந்து சொன்னாள்:

"கொஞ்சம் எழுந்திரு."

அவன் எழுந்திருந்து ஒரு பக்கமாக ஒதுங்கிக் கொண்டான்; மேஜையில் எல்லாவற்றையும் அவள் ஒழுங்கு படுத்துவதையே கவனித்துக் கொண்டிருந்தான்.

"சகோதரர்களே-உங்களையும் என்னையும் ஒன்றாகச் சேர்த்தால் ஒரு ஐந்து கோபெக் தான் மதிப்பு. ஆமாம் நம்மைப் போன்றோர் நூறு பேர் சேர்ந்தாலும் இப்படித்தான்" என்று கிண்டல் நிறைந்த புன்னகையோடு சொன்னான் அவன்.

தாய் அவனுக்காக வருந்தினாள். அவனைப் பார்க்கப் பார்க்க அவனை மேலும் மேலும் அவளுக்குப் பிடித்துப் போயிற்று. தனது பேச்சுக்குப் பிறகு, அன்றைய கோரசம்பவத்தின் மனப் பாரத்தை இறக்கி வைத்த உணர்ச்சி அவளுக்கு ஏற்பட்டது. அவள் தனக்குத் தானே மகிழ்ந்து கொண்டாள்.

*(தொடர்ந்து வரும்)*

**76** "சகல ஏமாற்றுக்களையும், சகல பேராசைகளையும், சகல தீமைகளையும் ஒழித்துக் கட்டினாலன்றி அவர்கள் தமது இயக்கத்தை நிறுத்த மாட்டார்கள். அவர்கள் ஓய்வு கொள்ள மாட்டார்கள்!" -தாய்.



---

# இதுதான் காதலா?

மெல்லென கதிரவன் கதிர் விரிக்கும் காலைப் பொழுதில் கற்பனையில் மூழ்கியிருக்கும் சேகரை தட்டுகிறான் சங்கர். "நல்ல காதல் கதை ஒன்றை கற்பனை பண்ணும் வேளை.... என்னடா சங்கர் இது.....?"


"டேய் சங்கர் கற்பனைக் கதைய விட ஏதாவது புதுசாக எழுத வேணும்.... காதலிப்பவர்களிடம் காதலைப்பற்றி கேளு...எல்லா விரலும் ஒரு மாதிரி இல்ல....அதைப்போல எல்லா காதலும் ஒரு மாதிரி இல்ல...என் அலுவலகத்தில் உள்ளவர்களுக்கு இன்று என் வீட்டில் விருந்து. நீயும் வா....இதைப்பற்றி பேசலாம்....ஓ.கே" என்றவாறு செல்கிறான் சங்கர்....

சங்கரின் வீட்டை நோக்கி செல்கிறான் சேகர்......அனைவரும் சாப்பிட்டு முடித்த பின்....பேசத் தொடங்குகிறார்கள். சங்கர் சேகரை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்கிறான். "இவன் பெயர் சேகர். எனது நண்பன். நிறைய கதைகள் எழுதுவான். இன்று காதலைப்பற்றி உங்களிடமெல்லாம் கேட்கப் போகிறான்....சேகர் கேளு...."

"காதல் புனிதமானது....அந்த இறைவனைப் போன்றது"- தேவி.

"காதல் திருமணத்தில் முடிய வேணும் அல்லது....சாதல்" -பாபு.

"ம்....ஒருத்தர் ஏமாற்றினால் ஏன் சாகணும்....குளத்தில் ஒரு மீன் தான் இருக்கா...?"-மீனா.



**ஜெ.புளோரன்ஸ்**
**-கெங்கல்ல-**

"எதிர்ப்புகளை சந்தித்து இணைவதற்கு தைரியம் உள்ளவர்கள் தான் காதலிக்க வேணும்"-சங்கர்.

"பிறர் மீது நாமறியாமலேயே ஏற்படும் அன்புதான் காதல்"-சுதா.

"இது எல்லாம் அந்தக் காலம். இப்போ எல்லாமே போலி" -கீதா

"தீபா என்ன ஒன்றுமே கூறாம இருக்கீங்களே?"-சங்கர்

"காதல் என்பது பூஞ்சோலையல்ல.... மூங்கில் காடு. எந்நேரமும் பற்றி எரியக் கூடும்."-கீதா.

"பிரமாதம்" பாராட்டுகிறார்கள்.

"காதலிப்பவர்கள் தினம் சந்திக்க வேணும்..... ஒருவரை ஒருவர் பார்க்காமல் இருக்க முடியாது....இப்படி பல விதமாக கூறுவார்கள். இதைப்பற்றி...."

"உண்மை தான் அடிக்கடி சந்தித்தால் தானே மகிழ்ச்சியாயிருக்கும்.... சேகர்... முதலில் மிஸ் தீபாவை பேட்டி காணுவோம்....அவங்க வாயை திறந்தாலே ஏதாவது புதுமையா இருக்கும்....என்ன தீபா....தயார் தானே?"-சங்கர்.

"உங்கள் காதலரை கடைசியாக என்று சந்தித்தீர்கள்?"

"நான்கு நாட்களுக்கு முன்"-தீபா

"இன்று சந்திப்பீர்களா?"

"தெரியாது."

"அப்படியானால் இனி...?"

"அவருக்கு வேலை அதிகம்....திடீரென சந்திப்போம்..."

"எவ்வளவு நேரம் கதைப்பீர்கள்?"

"கூடினால் 10 நிமிடங்கள்."

"தீபா தெரியாமல் தான் கேட்கிறேன். இப்படி ஓர் காதல் தேவை தானா?"-சங்கர்.

"சங்கர் பலரும் பல விதம்....காதல் மலர் போன்று மென்மையானது....அவ்வுணர்வே தனியின்பம்.... இரு மனங்கள் இணைந்தபின் பிரிவுக்கு இடமில்லை. தினம் சந்திக்காவிட்டாலும் ஒவ்வொரு இமைப் பொழுதும் அவர் நினைவில் அவருடன் தான் வாழ்கிறேன்."-தீபா.

"அடுத்து என்ன செய்யப்போகிறீர்கள்?"

"தெரியாது"

"என்ன தீர்மானம் எடுத்தீர்கள்?"

"தெரியாது."

"நீங்கள் இதைப்பற்றி அவருடன் பேசுவதில்லையா?

"அவர் கூறுவார் எனக் காத்திருக்கிறேன்."

"ஏண்டி தீபா! அவர பார்க்காம உன்னால இருக்க முடியுதா?"-கீதா.

"ம் கஷ்டந்தான்....என்ன பண்ணுவது? அவருக்கு வேலையும் பெரிசு....அவரோடு கதைத்த சிலநிமிடங்களின் நினைவிலேயே என் மனதை தேற்றிக் கொள்கிறேன்."-தீபா

"சே...சுவாரசியம் இல்லாத காதல்." -சுதா.

"ஓ.நோ. அவருக்காக காத்திருப்பதிலும் ஒரு சுகம் உண்டு."

"நீங்க கடைசியா எழுதின கவிதை...."

**"மௌனித்துப் போன**
**இவள் பாஷைக்குள்ளே**
**உன்னுருவம்**
**இசைபாடுது."**

"மிஸ் தீபா...நீங்க எழுதும் கவிதைகளை எல்லாம் அவர் வாசிப்பாரா? அதைப்பற்றி ஏதாவது கூறுவாரா?"

"வாசிப்பார்....ஆனால் எதுவும் கூற மாட்டார்...."

"இவற்றை எண்ணி சங்கடப்பட வில்லையா?...."

"கப்பலில் ஏறி கடலில் செல்லும் போது குதிக்க முடியுமா?"-தீபா.

"நீங்களும் அவரும் எங்காவது சென்றதுண்டா?"

"இல்லை"-தீபா.

"என்ன இல்லையா?" ஆச்சரியமாக கேட்கின்றனர்...

"உங்கள் காதல் நிறைவேற வாழ்த்துக்கள்....."

"அப்படிமுடியாவிட்டால்...?"

"எப்படியும் மாலை வாங்க வேண்டி வரும்."

"இறுதியாக காதலைப்பற்றி....?" சங்கர் ஆர்வமாய்க் கேட்டான்.

"காதலும் கண்ணீரும் இரட்டைக் குழந்தைகள்.... ஒன்றை ஒன்று பிரிக்க முடியாது....கண்ணீர் கண்ணில் தோன்றி நெஞ்சில் விழுவது போல்....காதலும் கண்ணில் தோன்றி நெஞ்சில் விழும். கண்ணீர் இல்லாத காதல் இருக்கப் போவதில்லை." என்று கூறுகையிலேயே தீபாவின் விழிகளிலிருந்து நீர் வழிகிறது.

"கடவுளே இவள் காதலன் இதனைப் புரிந்து கொள்ள மாட்டானா?" சேகர் மனதினுள்ளே வேண்டுகிறான். ●



படிப்பகம்

www.padippakam.com

"ஏதுக்கு அதைரியப்படறே அஞ்சலி? நம்ம கல்யாணம் நிச்சயம் நடக்கும். அதுக்கு நான் உறுதி குடுக்குறேன்."

பிரசன்னா இதை இரண்டாவது முறையாக கூறினான். இருப்பினும் கீதாஞ்சலியின் மவுனம் கலையவில்லை.

கடற்கரை, கடல் அலைகள் வந்து கரை உரசும் போதெல்லாம் நீர்த்திவலைகள் பனி புஷ்பங்களாய் அவன்மீது அபிஷேகித்தன. கீதாஞ்சலி அதை உணராதவள் போல அவன் பக்கத்தில் அமர்ந்திருந்தாள்.

கூட்டம் இல்லாத இடமாய் நீண்டதூரம் நடந்து ஒரு கட்டு மரத்தின் பக்கம் கீதாஞ்சலியும், பிரசன்னாவும் ஒதுங்கியிருந்தனர். வியாபாரச் சிறுவர்கள் கூட அவர்களை நெருங்க முடியாத தொலைவில் இருந்தனர்.

# முற்றுப்புள்ளி!

"உம்... வந்ததிலேர்ந்து நான் தான் பேசறேன். எப்பவும் கலகலப்பா பேசுவே. நீ வாய் மூடிட்டு இருக்கே."

"எனக்கு பயமா இருக்கு பிரசன்னா. உங்கம்மா என்னைப் பார்த்துவிட்டு வேண்டாம்னு சொல்லிடுவாங்களோன்னு பயமா இருக்கு பிரசன்னா."

"ப்ச்சு... சுத்த பேத்தல் இது. நான் தான், உன்னைக் காதலிக்கிறதை முன்பே என் அம்மாவிடம் சொல்லியிருக்கேனே.... எங்கம்மா சம்மதிச்சிட்டாங்க. சும்மா ஒரு பார்மாலிட்டி இது."

கலக்கத்துடன் அவன் முகம் நோக்கினாள். அவன் கடலையும், வானையும் வெறித்துக் கொண்டிருந்தான்.

அவள் ஏற்றுமதி-இறக்குமதி நிறுவனம் ஒன்றில் அசிஸ்டெண்ட் மானேஜராய் இருந்தாள். அவளுக்குக் கீழ் இருபது நபர்கள் பணியாற்றினர்.

அவன் புத்தகக் கடை வைத்திருந்தான். வழிவழியாய் வரும் கடை அது. கல்லூரி சீசனில் கல்லூரி புத்தகங்கள், மற்ற நேரங்களில் வேறு புத்தகங்கள் விற்பனை ஆகும். ஒரு முறை அவள் சமையல் புத்தகம் வாங்க வந்திருந்தாள். அவள் பேசாமல் இருந்திருக்கலாம்.

சிரிப்புடன் சொன்னான். "கல்யாணத்துக்கு முந்தித் தான் எல்லாரும் சமையல் கத்துப்பாங்க. நீங்க கல்யாணம் செஞ்சுட்டு சமையல் கத்துக்கப் போறீங்க போல...."

அவள் பேசவில்லை. முறைத்தாள். மறுநாள் அதே புத்தகத்துடன் வந்தாள்.

"இதில முப்பத்திரெண்டு பக்கம் இல்லை. பாருங்க."

அவன் வாங்கிப் பிரித்தான். இரண்டு பாரங்கள் இணைக்கப்படவில்லை. வேறு பிரதி எடுத்துக் கொடுத்தான்.

"புத்தகம் விக்கிறது உங்க தொழில், கல்யாணம் பத்தி பேசறது இல்லை. கல்யாணம் என்கிற வட்டத்துக்குள்ள சிக்கின வங்கதான் சமைக்கணும் என்கிறது இல்லை. கல்யாணம் ஆகலைன்னாலும் மனுஷன் சாப்பிட்டுதான் ஆகவேண்டும்."

இவள் தாய் உறவினர் வீட்டுத் திருமணம் என்று வெளியூர் போய் இருந்தாள். இவள் கட்டாய சமையல் செய்ய வேண்டியதாயிற்று. புத்தகம் தேவைப்பட அது அவன் நட்பை பரிசளித்தது.

அன்றிலிருந்து அவன் புத்தகக் கடைக்கு போய் பேசிக் கொண்டிருந்தாள். இலக்கியம், அரசியல் சீரழிவு, தலைவர்களின் சுயநலம் என விவாதித்தனர். பல விஷயங்களில் ஒன்றிப் போனார்கள்.

கடை விடுமுறை நாட்களில் அவளும், அவனும் கடற்கரையில் தனியான இடத்தில் பேசிக் கொண்டிருப்பர். அவன் பார்வைகள் அத்துமீறாது. காதலை சத்தம் போட்டு எச்சில் படுத்தவில்லை. எதிலும் ஒரு நாகரிகம் கொண்டவனாய் இருந்தான்.

அவர்கள் மற்ற காதலர்களை போல இருளை சாதகமாக்கிக் கொள்ள எந்த திரையரங்கிற்கும், நாடகக் கொட்டகைக்கும் சென்றவர்கள் அல்ல. அப்படி ஓர் சைவம், அது தான் அவன் மீது பிரேமை கொள்ள காரணமாயிற்று. நல்லதோர் நட்பு நாளடைவில் காதலாயிற்று. அவன் தன் நான்கு தங்கைகளின் திருமணம் மற்றும் தந்தை குடித்தே உயிர் விட்டது எல்லாம் சொன்னான். இவளும் தான் ஒரு நடிகையின் மகள் என்பதைச் சொன்னாள். அதிகம் சொல்ல நினைக்கையில் எல்லாம் அவன் கேட்க மறுத்துவிட்டான்.

"நீ நல்ல பெண். ஏதோ காரணத்தினாலே முப்பது வயசு வரை கல்யாணம் இல்லாம இருக்கே. எனக்கும் முப்பத்தஞ்சு வயசு ஆச்சு. கல்யாணம் இல்லை. நாம ஒண்ணு சேர்றதில் எந்த சுணக்கமும், தயக்கமும் கூடாது அஞ்சலி. நீ எதுவும் சொல்லாதே. எனக்கு எதுவும் வேண்டாம். எனக்கு வேண்டியது நீ மட்டுமே."

இந்த காதலின் வயது ஒரு வருடத்திற்கு பக்கமாக ஆகிறது. தங்கைகளின் கடமை முடிந்ததும் அவன் தன் அம்மாவிடம் காதலைப் பற்றி சொல்லிவிட்டான். அவன் திருமணப் பேச்சை எடுத்துக் கொண்டிருந்த தாய்க்கு இது வசதியாகப் போயிற்று.

❤❤ ☛ ❤❤

இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் இந்த கீதாஞ்சலி எதற்கு இப்படி....?

"எனக்கு பயமா இருக்கு பிரசன்னா. நம்ம காதல் கல்யாணத்திலே முடியு மான்னு..." என்றாள் மீண்டும்.

"ப்ச்சு..... எங்கம்மாவே சம்மதிச்சப்புறம் உனக்கு வேறு என்ன வேணும்? திங்கட் கிழமை சுவினிங் வரோம். ரெடியா இரு. நான் புறப்படறேன். சொந்தக்காரங்க வீட்ல இந்த தகவலை சொல்ல சொல்லியிருக்காங்கம்மா," என்றவாறு எழுந்து கொண்டான்.

வீடு வந்ததும் தாயிடம் சொன்னாள். பிரசன்னாவின் காதலை முன் கூட்டியே சொல்லியிருந்தாள்.

✲ ✲ ✲

ஞானாம்பிகை மெல்லிய குரலில் கேட்டாள். "அஞ்சலி, மாப்பிள்ளைக் கிட்ட நம்ம விஷயத்தை சொல்லிட்டியா?"

"இல்லம்மா.... முன்னாள் நடிகையின் பொண்ணுன்னு தெரியும். 'எனக்கு நீதான் முக்கியம். மற்றது இல்லை,'ன்னு சொல்றார்."

கீதாஞ்சலி அங்கிருந்து நகர்ந்து விட்டாள்.

☆ ● ☆

திங்கள் மாலை.

கார் ஒன்றில் அவன் சொந்தக்காரப் பட்டாளம் அடைந்து கொண்டு வந்திறங்கியது. அவன் கோட் சூட்டுடன் டிரிம்மாய் இருந்தான். யாரும் அறியாமல் அவளைப் பார்த்து புன்னகைத்தான்.

சிற்றுண்டி, காபிக்கு பின் அம்மா இவளை அலங்கரித்து அழைத்துப் போனாள். அவன் தாய் இவளை உச்சி முதல், உள்ளங்கால் வரை லேசர் பார்வையில் பார்த்தாள். இவள் மேனி சிலிர்த்தது. அவன் தாய் இவள் அம்மாவைப் பார்த்து மெல்லிய குரலில் கேட்டாள்.

"ஏம்மா, நீங்களா பெண்ணோட தாயார்?"

"ஆமாம்மா. கீதாஞ்சலி என்னோட ஒரே பொண்ணு."

"நீங்க அந்தக் காலத்தில நடிச்சிட்டிருந்தீங்க இல்ல? இரண்டொரு படத்தில கதாநாயகியா வந்திருந்தீங்க இல்லே?" அவள் ஞானாம்பிகையிடம் அந்த லேசர் பார்வையை வீசினாள்.

"ஆமாம்மா. நீங்க சொல்றது நிஜம். அப்ப நடிச்சதோட சரி. எனக்கும், என்னோட கதாநாயகனா நடிச்சவருக்கும் பிறந்தவதான் இந்த கீதாஞ்சலி. ஆனா, இவளை வளர்த்தது ஆளாக்கினது எல்லாம் என்னோட அத்தான். அவர் ரயில்வேயில வேலை பார்த்தார். அவருக்கு ரெண்டாந்தாரமாய் நான் வாழ்க்கைப்பட்டேன். அவர் இப்ப இல்லை. அவருடைய சொந்தப் பொண்ணாத்தான் இவளை....."

அவன் தாய் சைகை காட்ட மொத்தக் கூட்டமும் எழுந்து கொண்டனர். அதில் பிரசன்னா கூட சேர்த்தி.

"டேய் பிரசன்னா, போயும் போயும் இந்த பொண்ணுதான் உனக்கு கிடைச்சாளா? பெத்தவர் ஒருவர் வளர்த்தவர் ஒருத்தராம். வாங்கடி போகலாம். நம்ம குடும்ப கவுரவம் என்ன, மரியாதை என்ன, இந்த இடத்தில சம்பந்தம் பேசினா நம்ம மானம் அவ்வளவு தான்." அவன் தாய் வாய்க்கு வந்தபடி சொற்களை இறைத்துவிட்டு போய் விட்டாள். இவர்கள் உருகிக் கரையாத குறை.

ஞானாம்பிகை, மகள் மடியில் தலை வைத்துப் புலம்பினாள்: "அஞ்சலி, என்னால தானே உனக்கு இந்த அபவாதம். இத்தனை நாள் கல்யாணம் ஆகலை. நானே இல்லை யானா.....?"

"மடத்தனமா பேசாதேம்மா. நீ இல்லன்னாலும் உன்னோட மக என்கிறது இல்லாம போயிடுமா? அந்த நடிகர், அதான் என்னோட அப்பா தான் தாலி கட்டின சம்சாரத்து மகள்களுக்கு எல்லாம் எத்தனை 'கிராண்டா' கல்யாணம் செய்தார். பேப்பர்ல போட்டோ செய்தின்னு எப்படி ஒரு விளம்பரம். உன்னோட பொண்ணான எனக்கு... ப்ச்சு..இந்த ஆண்களே எப்பவும் சுயநலமிகள். தங்கள் சந்தோஷத்துக்காக எதையும் செய்ய கூசாதவங்க. விடும்மா."

அந்தக் கூட்டம் வெளியேறினது கூட அவளுக்குப் பெரிதாகப்படவில்லை. ஆனால், பிரசன்னா ஒரு சொல் கூட சொல்லவில்லை. ஒரு பார்வை கூட பார்க்கவில்லை. அதுதான் அவள் இதயத்திற்கு சூட்டுக்கோலாயிற்று.

மீண்டும் வேலைக்குப் போக ஆரம்பித்து விட்டாள் கீதாஞ்சலி. எண்ணி பத்தாவது நாள் பிரசன்னாவிடமிருந்து தொலைபேசி. அவன் பேச்சு முழுதும் பூரிப்பு.

"கீதாஞ்சலி, கடைசியில் நான் ஜெயிச்சுட்டேன். எங்கம்மா சம்மதம் வாங்கிட்டேன். உன் சம்பளம், படிப்பு, வேலை எல்லாம் சொல்லி சம்மதிக்க வச்சேன். அம்மாவுக்கு பூரண திருப்தி."

"உங்கம்மாவுக்கு பூரண திருப்தி, எனக்கு சுத்தமா திருப்தி இல்லையே பிரசன்னா? என் பிறப்பு உங்கம்மாவுக்கு பிடிக்கலை. என் சம்பளம், வேலை, படிப்பு இதெல்லாம் பிடிச்சிருக்கு. வேணாம். அம்மா எனக்கு மாப்பிள்ளை பார்த்துட்டிருக்காங்க. நிச்சயம் அது நீங்க இல்லை."

"கீதாஞ்சலி, நான் சொல்றதைக் கேளு."

"கேட்டவரை போதும் பிரசன்னா. உங்கம்மா எங்களை இழிவு செஞ்சு பேசறப்ப ஒரு வார்த்தை நீங்க பேசினீங்களா? நீங்க எப்படி என் வாழ்க்கை முழுக்க துணை வர முடியும்? சாரி, நாம பிரிஞ்சிடுவோம். அதுதான் சரி. குட்பை."

அவள் தொலைபேசியை வைத்து விட்டாள். இனி தொலைபேசியில் பேசுவாள். ஆனால் அவனுடன் அல்ல.





—அம்ஸா தனகோபால்— (தமிழக எழுத்தாளர்)

---

# அவன் செய்த வேலை

சுரபதி ராஜேந்தர்

'பாவிப்பய!...... அவங்கப்பா சொல்றதுக்குத் தகுந்தாப்போல, கண்டபடி ஊரைச் சுத்திக்கிட்டு நேரங்கெட்ட நேரத்தில வந்து கதவைத் தட்டறது வாடிக்கையாப் போச்சு!'

லட்சுமியம்மாள் மனத்திற்குள் குமுறிக் கொண்டிருந்தபொழுது, வீட்டுக் கதவு தட்டப்பட்டது. கோபத்தோடு திறந்தவளை, இந்து பரிதாபத்தோடு பார்த்தான்.

"ஏண்டா!, நேரம் என்னடா? உனக்கெல்லாம் ரோஷமே வராதா? பசி நேரத்துக்குக் கொட்டிக்க மட்டும் தெரிஞ்சிருக்கே! உருப்படியா ஏதாவது செய்யலாம்னு தோணலையா?"

இந்துவிடம் மௌனம்.

"ஏதாவது பேசேண்டா, உங்கப்பா இவ்வளவு நேரம் உன்னைத் திட்டிட்டு இப்பத்தான் போய்ப்படுத்தார். சொல்லுடா எங்கே போனே?"



சட்டையைப் பிடித்து உலுக்கிய தாயைப் பார்த்து "தேவன் வீட்டுக்குப் போனேன். அவனோட பேசிட்டிருந்தேனா, லேட்டாயிடுச்சு...."என்றான்.

"அப்படி என்னடா மணிக்கணக்கா பேச்சு, நேரம் போனதே தெரியாம? டேய், அவங்கப்பா பத்துத் தலைமுறைக்குச் சொத்து சேர்த்து வைச்சிருக்கார். ஆனா நாம, இருந்த வேலையையும் இழந்திட்டு, உங்கப்பா இந்த வயசிலேயும் கடைகடையாப் போய்க் கணக்கெழுதி இந்தக் குடும்பத்தைக் காப்பாத்திட்டு இருக்கார். அவருக்குப் பொறந்த நீ கண்டபடி ஊரைச் சுத்திட்டு வர்றே. வெட்கமாயில்லையா?"

"நானா மாட்டேன்கறேன்? படிப்பை எவன் மதிக்கிறான்? நம்ம அப்பா அவரோட சுயகௌரவம் போயிடுமேன்று யாருக்கிட்டேயும் சிபாரிசு செய்யமாட்டார். என்னை என்ன செய்யச் சொல்றே?"

"வயசுக்கு வந்த தங்கச்சி இருக்கா. அவளுக்கு ஒரு நல்ல இடத்தில வரன் பார்த்துக் கட்டிக் கொடுக்கணும்னா, நாலு காசு வேணும். இவன் என்னடான்னா, ஊரைச் சுத்திட்டு பொறுப்பில்லாமத் திரியறான். ஊருக்குள்ள புள்ளைங்க பெத்தவங்களுக்கு எப்படியெல்லாம் உதவுதுங்க.... நமக்கும் பொறந்திருக்கே தறுதலைன்னு உங்கப்பா புலம்பறார். இதையெல்லாம் புரிஞ்சுக்கவே மாட்டியா?"

இந்துவிடம் மீண்டும் மௌனம்.

"சரி வந்து, சாப்பிட்டுப் படு"

"வேணாம். பசிக்கலை. தேவன் வீட்ல சாப்பிட்டுட்டேன்" எனப் பொய் சொல்லிப் படுக்கையில் சாய்ந்தான் இந்து.

இந்து ஓர் எம்.ஏ.பட்டதாரி. யுனிவர்சிட்டி கோல்டு மெடலிஸ்ட்! அப்பா மருதாசலம் ஒரு பஞ்சு மில்லில் குமாஸ்தாவாக இருந்து, ஏதோ யூனியன் தகராறு காரணமாக, மில் மூடப்பட்டதால் வேலையை இழந்தவர். தங்கை செல்வலட்சுமிக்குப் பல வரன்கள் வந்து பேரம் பேசியும் தடங்கல் ஏற்பட்டுத் திருமண நாளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். இந்துவுக்கு உறக்கம் கொள்ளவில்லை. என்றைக்கு உறங்கினான்? பாவம்!

★★

இரண்டொரு நாள் கழித்து ஒரு வரன் வந்தது. பெண் பார்க்கும் படலம் முடிந்து, பேச்சு வார்த்தை கொஞ்சம் சுமுகமாகப்பட, மருதாசலம் இருக்கிற பணத்தைக் கணக்குப் போட்டு, ஐந்து பவுனுக்கு வாக்குக் கொடுத்தார். அவர்கள் அதோடு ரொக்கமாக ரூபாய் பத்தாயிரம் கேட்டார்கள். மருதாசலத்துக்கு அது கட்டுப்படியாகாது என்றாலும், வந்த சமபந்தத்தை நழுவவிட மனமில்லாமல் ஒத்துக் கொண்டார். ஒரு நாள், இந்து வெளியே புறப்பட்ட வேளையில்,

"டேய் நில்லுடா....உன் தங்கைக்கு நிச்சயதார்த்தம் நடந்திருக்கு. கல்யாணத் தேதியும் குறிச்சாச்சு, என்னைக்காவது இதில அக்கறை எடுத்திருப்பியா?" அப்பா அன்று தான் அவன் முகத்துக்கு நேராகப் பேசினார்.

"கல்யாணச் செலவையும் நம்ம தலையில் கட்டிட்டாங்க. உங்கப்பா பணத்துக்கு அலைஞ்சு படாதபாடு பட்டிட்டிருக்கார். நீ என்னடான்னா, உம் பாட்டுக்குப் போறே.... வர்றே!"

இது அம்மா.

தலையைத் திருப்பித் தங்கையைப் பார்த்தான் இந்து. அவள் கண்களில் இருந்து கண்ணீர் 'பொல பொல' வென வழிந்தது. எதையும் லட்சியம் செய்யாமல், பதிலும் கூறாமல் வெளியேறினான்.

★★★

அன்று இரவு நடு நசியைத் தாண்டி வழக்கம் போல கதவு தட்டப்பட்டது. யாரும் கதவு திறக்கவில்லை. தங்கைக்கு மனம் கேட்காமல், எழுந்து வந்து திறந்து விட்டாள். கூடவே அவன் அம்மாவும்....

இந்துவின் கையில் பணக்கற்றை இருந்தது. "அம்மா, இதுல இருபதாயிரம் இருக்கு! என்னால முடிஞ்சது இவ்வளவுதான்! யாரும் சந்தேகப் படவேண்டாம். நான் பொய் சொல்லியோ, திருடியோ இதைச் சம்பாதிக்கலை..... உழைச்சு சம்பாதிச்சிருக்கேன்..... எப்படின்னு கேக்கறீங்களா? கேக்கறதுக்கு உங்களுக்கு காது கூசலாம். ஆனா சொல்றதுக்கு எனக்கு நா கூசல!.... ஒரு நாள் நான் தேவன் வீட்டுக்குப் போயிருந்தப்ப, அவங்க வீட்டு செப்டிக் டாங்கி நிரம்பி வழிஞ்சது. அதை இறைச்சு ஊத்த அன்னிக்கு ஆள் கிடைக்கல. உழைப்பை மதிச்சு அதை நான் செஞ்சேன். காலப் போக்கில அதுவே எனக்குத் தொழிலாப் போச்சு. இராத்திரி பகல்னு பார்க்காம, பல வீடுகளுக்குப் போய் விசாரிச்சு, நிரம்பி வழியிற செப்டிக் டேங்கை சுத்தம் செய்து கொடுத்தேன். பணம் சேர்த்தேன். நான் இதை உங்கக்கிட்டச் சொன்னா, உங்க மனசும், தன்மானமும், இடம் கொடுக்காதோன்னு தான், நான் இதைச் சொல்லலை....!" எனக் கண் கலங்கி நின்ற இந்துவைக் குறை சொல்ல யாருக்குத்தான் மனம் வரும்?

தன்னுடைய தன் மானம் காக்கப்பட்ட பெருமையுடன்- பெருமிதத்துடன், தலை நிமிர்ந்து நின்றான், இந்து...!

---

# தகுதி

ரூபராணி

சிவகாமி எப்படியோ தட்டுத் தடுமாறி அக்கல்லூரி மாணவிகள் விடுதிக்கு வந்து சேர்ந்து விட்டாள். அரண்மனை போன்ற அந்தக் கட்டிடத்தை அவள் அண்ணாந்து பார்த்தாள். கழுத்தை வலித்தது; சுற்றும் முற்றும் தன் பார்வையைச் செலுத்தினாள். அவள் அந்த விடுதிக்கு வந்து இதுதான் முதல்முறை. ஒழுங்காக அலங்கரித்தாற்போல் கத்தரிக்கப்பட்ட குரோட்டன் செடிகளைச் சற்று நேரம் நின்று வியப்புடன் பார்த்தாள்.

"அம்மா'! உன்னை நான் எப்படி என் நண்பிகளுக்கு அறிமுகப்படுத்துவது?"

போகன் விலாச் செடிகளில் பலநிறங்களில் பூக்கள் சிரித்து நிற்கும் அழகைக் கண்டு அதிசயப்பட்டாள். வரிசையாகத் தலைவிரித்து நின்ற சவுக்கு மரங்களைக் கண்டு மகிழ்ந்தாள். பார்க்கும் இடம் எல்லாம் பளிச்சென்று தெரிந்தது.

'கன்னியாஸ்திரிகளின் கல்லூரி என்றால் இப்படித்தான் இருக்குமாக்கும்' தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

'அடேங்கப்பா எம்புட்டு ஒசரமான பள்ளியில என் மக பூரணி படிக்கிறா. சும்மா சொல்லப்புடாது என்மக குடுத்து வச்சவ. எப்படியாச்சும் பூரணியை ஒரு டீச்சரம்மாவாக்கிப் பாத்துப்புட்டுத்தான் சாகணும்' என்ற வைராக்கியம் சிவகாமிக்கு.

இத்தனைக்கும் சிவகாமி வசதிபடைத்தவளல்ல. அவளுடைய கணவன் அகால மரணமடைந்ததில் இருந்து தோட்டத்துப் பெரிய கிளாக்கர் குடும்பத்தோடு ஒன்றிப் போனாள். அவர்களுக்குப் பிள்ளைகுட்டி என்று ஏதுங் கிடையாது. கிளாக்கர் அம்மாளுக்குப் பக்கவாத நோய். ஒருகையும் காலும் அசையாது. இரவுபகலாய் அந்த அம்மாளை கவனிப்பது, சமைப்பது, துவைப்பது, கூட்டிப் பெருக்குவது, எல்லாமே சிவகாமிதான். எதைச் செய்தாலும் அன்போடு மனசு வைத்துச் செய்யும் சுபாவம் சிவகாமிக்கு. இதனால் பெரிய கிளாக்கரும் தாராள மனசுடன் பூரணியின் படிப்புக்கான செலவை எல்லாம் அவர் ஏற்றுக் கொண்டார். பூரணி படிப்பிலும் விளையாட்டிலும் படு சுட்டி. எல்லாம் பெரிய கிளாக்கர் குடும்பத்தின் தயவுதான் என்று தன் நினைவுகளுக்கு முற்றுப் புள்ளி வைத்த சிவகாமி, வெண்ணிற அங்கி அணிந்த சிஸ்ரர் ஒருவர் வருவதைக்கண்டு "தோத்திரம் சிஸ்ரர்" என்றாள்.

"நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்? "என்றார் சிஸ்ரர், மலர்ந்த புன்னகையோடு.

"என்மக பூரணி இங்க படிக்கிறா. இன்னிக்கு ஓய்வு நாள்தானே? நா அவளப்பாக்கணும்."

"எந்தப் பூரணி...? இங்க ரெண்டு பூரணி இருக்கிறா. ஒண்ணு தோட்டத்துப் பெரிய கிளாக்கரோட பெண். மற்றவ ராமநாதன் பிறின்ஸிப்பாலோட மகள். இதில எந்தப் பூரணி உங்க மகள்?. நான் முதலாகச் சொன்ன பூரணி கண்ணாடி போட்டிருப்பா. நீளக்கூந்தல் மெல்லிசாய்.. உசரமாய்." சிவகாமி கண்கள் பளபளக்க அவசரமாய்க் குறுக்கிட்டு "ஆமாம் தாயி அந்தப் பூரணிதான் என் மக" என்றாள்.

சிஸ்ரரின் நெற்றி சுருங்கியது. "எதற்கும் நீங்கள் பெரிய மதரைப்போய்க் கேளுங்கள்" என்று சொல்லிவிட்டுச் சிஸ்ரர் போய்விட்டார்.

சிவகாமிக்கு அழுகையும் குளப்பமுமாக இருந்தது. அப்போது வராந்தாப் பக்கமிருந்து பெண்கள் கூட்டம் ஒன்று பெரும் இரைச்சல் போட்டுக் கும்மாளம் அடித்து வந்தது. அத்தனை பேருக்குள்ளும் சிவகாமி பூரணியைக் கண்டு விட்டாள். சிவகாமிக்குத் தலை கால் தெரியவில்லை. அப்படி ஒரு சந்தோஷம். 'என்மக எம்புட்டு அழகு- சினிமாக்காரி பூரணியிட்டப் பிச்சை எடுக்கணும், என் கண்ணே பட்டிடும் போல' என்று நெட்டிமுறித்தபடி உள்ளே நடக்கலானாள். தான் கொண்டு வந்த சீனி முறுக்குப் பார்சல் அடிமடியில் பத்திரமாயிருக்கா என்று தடவிப்பார்த்துக் கொண்டு நடந்தாள்

அதே சமயம் பூரணியும் தன்தாயை அடையாளங்கண்டு கொண்டாள். "ஏய் வாலுகளா.. கொஞ்சம் நில்லுங்கடி இதோ வந்திடுறேன். எங்க வீட்ல வேலபார்க்கும் ஆயா வந்திருக்கா, எங்க மம்மி- டடி ஏதாச்சும் செய்தி அனுப்பி இருப்பா" என்று சொல்லி சிவகாமியிடம் பட்டாம் புச்சியாகப் பறந்தோடி வந்தாள்.

"என் கண்மணி ராசாத்தி. நீ எம்புட்டு



அழகு. ஒன்ன இப்புடிப் பாக்க ஒன் அப்பன் உசிரோட இல்லயே. "அவள் கண்களில் இருந்து கரகர வென்று நீர்வடிந்தது. முந்தானையில் வைத்திருந்த சீனி முறுக்குப்பார்சலை "சாப்பிடு கண்ணு" என்று நீட்டினாள்.

பூரணி அவள் தாயை ஒரு அதிசயப் பிராணியைப் பார்ப்பது போல் பார்த்தாள். "அம்மா, ஒனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா? அன்புமட்டும் இருந்தாப்போதுமா? கொஞ்சங்கூட நாகரிகந்தெரியாத அம்மாவா இருக்கியே. டீசன்சி, ஒரு மண்ணும் தெரியாது. நீதான் என் அம்மான்னு ஒன்ன எப்படி என் ஃபிறெண்சுக்கு அறிமுகம் பண்றது? இதனாலதான் நான் பெரிய கிளாக்கர் பெண் என்று சொல்ல வேண்டிய இடங்களில் சொல்லி வச்சிருக்கேன். இதைக் கெடுத்திடாதே! உனக்கும் எனக்கும் தாய்-பிள்ளை உறவு என்று தெரிந்தால் போதாதா?"

சிவகாமி அதிர்ந்து சிலையானாள். "அம்மா நீ இதயும் தெரிஞ்சுக்க. நான் எஞ்ஜினியரிங் படிக்கும் பையன் ஒருவனைக் காதலிக்கிறேன். அவனையே கலியாணமும் பண்ணிக்கப் போறன். அவருக்கு மாமியார் ஆகும் தகுதி உனக்கிருக்கா?" இவ்வளவு நேரமும் சிவகாமியின் கையிலே இருந்த முறுக்குப் பார்சல் நழுவி மண்ணில் விழுந்தது.

பூரணியே தொடர்ந்தாள்: "மாசாமாசம் காசை மட்டும் றைவரிடம் கொடுத்தனுப்பு. லீவுக்கு லீவு நானே வருவேன். நீ வந்து சிரமப்படாதே" என்று சொல்லிவிட்டுச் சிட்டாய்ப் பறந்து போனாள்

ஈட்டிகள் பாய்ந்த இதயத்தோடு சிவகாமி பெரிய கிளாக்கர் வீட்டை நோக்கி நடக்கிறாள்.



படிப்பகம்

www.padippakam.com

தருவது ரசிகன்

# தீர்ப்பு

## இலச்சிய நயம்

அரச சபை முழுவதும் அவள்மீது கவனத்தை குவித்திருந்தது. 'பேரழகிதான்' என்று சில மூத்த அமைச்சர்கள்கூட வெளியே தெரியாமல் வியந்துகொண்டனர். இளைஞர் களாக இருந்தவர்களுக்கோ அந்த கட்டழகி யின் மேனி எழில்கள்மீது வருடி விலகும் தம் விழிகளை கட்டுப்படுத்துவது கடினமாக இருந்தது.

மன்னன் மார்த்தாண்டன் தன் ஆசனத் தில் அமர்ந்திருந்து, தன் அடர்த்தியான மீசையை ஆட்காட்டி விரலால் வருடிய படியே அவளை கூர்ந்து நோக்கினான். தன் பார்வையை அவள் துணிச்சலாக எதிர்கொள்வதைக் கண்டு 'தைரியசாலிதான்' என்று மனதுக்குள் குறித்துக் கொண்டான்.

தனக்கு நேர் எதிரே மந்திரி பிரதானிகள் மத்தியில் ஆசனத்தில் இருப்புக்கொள்ளாமல் தவித்துக்கொண்டிருந்த தன் உயிர்த் தோழனும், ஆலோசகனுமான ராஜசிம்மன் மீதும் மன்னன் விழிகள் பாய்ந்து, ஒரு நொடி தரித்து மீண்டன.

மார்த்தாண்டன் விழிகள் பொல்லாதவை. அவன் வாள் எதிரிகளின் உயிர் எடுக்கும். அவன் விழிகளோ எதிரே இருப்பவரின் இதயம் வரை சென்று அளவெடுக்கும்.

"பெண்ணே! உன் பெயர் என்ன?"

"வணக்கம் மன்னா. வசந்தாதேவி!"

மன்னன் தனது வலதுபுறம் திரும்பி வழக்குரைக்கும் சொக்கரைப் பார்த்தான்.

நரைத்தமுடியில் தன் மூப்பைக் காட்டிய சொக்கர் எழுந்து தலைவணங்கினார். 'வழக்கைச் சொல்லலாம்' என்றான் மன்னன் தன் விழிகளால்.

சொக்கர் தொண்டையைச் செருமி குரலைச் சரிப்படுத்திக் கொண்டார்.

"பெண்ணே! பெயர் சொல்லு!" சம்பிர தாயக் கேள்வி. "வசந்தாதேவி!" என்றாள் சலிப்புடன்.

"மன்னா! வாலிபத்தின் வண்ணத் தோரணவாயிலில் நிற்கும் வயது இவளுக்கு!"

மன்னன் சற்றுப் பொறுமையிழந்து, "நேரடியாகவே சொல்லும்!" என்றான்.

"பதினெட்டு வயது!" என்றார் சொக்கர். பின்னர் அவரே தொடர்ந்தார்.

"மன்னா! உடலை வைத்து உழைப்பது தான் இவள் தொழில்!" மன்னன் குறுக்கிட்டுக் கேட்டான்.

"கல்லுடைக்கிறாளா? கழனியில் களை பிடுங்குகிறாளா?"

"இல்லை மன்னா; காளையர்கள் மனதை உடைக்கிறாள்! காமக் கடலில் தினமும் குளிக்கிறாள்!"

"அதாவது?"

"விபச்சாரம்!"

'அபச்சாரம். அபச்சாரம்' என்று முணு முணுப்புக் கேட்டது சபையில். மன்னன் வசந்தாவைப் பார்த்தான். அவள் இதழில் ஒரு அலட்சியப் புன்னகை. முணு முணுத்த வர்கள்மீது பார்வையை வீசினாள். அடங்கிப் போயினர். மன்னன் மனதுக்குள் புன்னகைத் தான்.

"மன்னா! மானத்தை செலவில்வைத்து, வருமானத்தை தேடிக்கொள்ளும் சரசக்காரி. சல்லாபராணி. இவளை இப்படியே விட்டு வைத்தால் இளைஞர்களின் சிந்தனை பட்டுப் போய்விடும் மன்னா!"

"ஒரு பெண்ணால் அத்தனை கேடா?"

"ஆம் மன்னா! விரகதாபத்தை விசிறிவிடும் வித்தைகள் யாவும் இவளுக்கு அத்துப்படி! கட்டழகு மேனிதான் வலை! விழுந்தவர் பலர். விலை கொடுத்தே அழிந்தவரும் பலர்!"

"விலை அதிகமோ?"

"தரத்திற்கு ஏற்ற விலைதானே!"

"தரம் எப்படி?"

"கரம் பட்டாலே போதும் மனதில் சுரம் எழும்! மஞ்சத்தில் மல்லிகைச் சரமாவாள். இன்பத்து ஊருக்கு இவளே வடமாவாள்! நெஞ்சுக்குள் சுகம் எழும்! இவள் கண்ணுக்குள் நாம் விழுவோம்! பெண்ணுக்குள் இத்தனை புதையல்களா என்று கலந்தவர் வியப்பர்! கலக்கும் ஆசையை பலருக்கும் விதைப்பர்!"

"சொக்கரே" என்றான் மன்னன்."

"மன்னா?"

"இதெல்லாம் உமக்கு எப்படித் தெரியும். நீரும் கலந்ததாலா? கதை அறிந்ததாலா?" மன்னன் கேட்க தடுமாறிப்போனார் சொக்கர்.

"அது வந்து.. மன்னா.. அது!"

"போதும் நிறுத்தும்! முடி நரைத்தாலும் தலைசாய இளம் மடி தேவைப்படுகிறதோ உமக்கு?" மன்னன் குரலில் இருந்தது கோபமா, கேலியா என்று இனம்பிரித்தறிய முடியாமல் தவித்தார் சொக்கர்.

மன்னன் இப்போது வசந்தாவின் பக்கம் திரும்பினான். அவள் இதழில் அதே அலட்சியப் புன்னகை.

"பெண்ணே! நீயென்ன சொல்கிறாய்?"

மன்னன் கேட்க வசந்தா சபை முழுவதை யும் தன் விழிகளால் ஒரு சுற்றுவிட்டு நோக்கினாள்.

"ஒப்புக்கொள்கிறேன்."

"எதை?"

"உடலை வைத்துப் பிழைப்பு நடத்தினேன்! பிறரின் உணர்ச்சிகளைச் சீண்டி செல்வம் தேடினேன்!"

சொக்கர் மகிழ்ந்தார். "மன்னா! என் வேலை சுலபமாயிற்று! குற்றத்தை ஒப்புக் கொண்டாள் கோதை!" என்றார்.

குறுக்கிட்டாள் வசந்தா.

"நான் இன்னமும் முடிக்கவில்லை மன்னா! இதோ இருக்கிறாரே இந்தச் சொக்கர். இவரது மகள் வயதுதான் இருக்கும் எனக்கும்!



இவருக்கு நான் வேண்டுமாம்! என்னோடு பசையாகிவிடு! இல்லாவிட்டால் வழக்கு மன்றத்தில் வசை பாடுவேன் என்று மிரட்டி னார்? என் வண்ண உடலில் தவழ விட்டிருந் தால், இவரது வயதுக்கு மீறிய ஆசைக்கு வளைந்து கொடுத்திருந்தால் தொடுத்திருப்பாரா வழக்கு? காளையர் கெடுகிறார்களே என்று துடித்திருக்குமா இவர் நாக்கு!"

சொக்கர் ஏதோ சொல்ல வாயெடுத்தார். மன்னன் தடுத்துவிட்டான்.

"அதோ இருக்கிறாரே ராஜசிம்மன்! கட்டிக்கொள்! கொட்டித் தருகிறேன்! என்னை உன் தேனியாக ஏற்றுக்கொள். நாளை உன்னை ராணியாக மாற்றுகிறேன் என்றார். எப்படி? என்றேன் நான்! மன்னன் இருப்பது என் பிடியில்! நான் நினைத்தால் முடிவு ஒரு நொடியில்! என்றார்."

ராஜசிம்மன் துள்ளியெழுந்தான். "ராஜ சிம்மா! அமர்!" என்றான் மன்னன்.

"மன்னா! கற்புக்கரசிபோல நாடகம் ஆடுகிறாள் இவள்! நாவறுக்க வேண்டும்!" என்றார் அமைச்சர்.

"இவர் ஒரு அமைச்சர்! மாலை மயங்கி னால் போதும், கொஞ்சும் பெண் வேண்டும்! கோல இதழ் வேண்டும்!"

"பொய்! அபாண்டம்!"

"எது பொய் அமைச்சரே! உமது இடது தொடையிலே ஒரு மச்சமிருக்கிறதே அது பொய்யா? இன்னும் சொல்லவா? மேலே செல்லவா?"

அமைச்சர் மௌனமானார்.

"எது மன்னா கற்பு! கற்பு என்பது நம்பிக்கைக்கு துரோகம் செய்யாமல் இருத்தல்! கற்பு என்பது மனதிலே கறையில்லாமல் இருத்தல்! கற்பு என்பது ஆணுக்கும் தேவை. பெண்ணுக்கும் தேவை! கற்பு என்பதை பெண்ணின் உறுப்புத் தொடர்புடையதாக உருக்குலைத்துவிட்டீர்கள்! உள்ளத்தில் கற்பு வேண்டும். உண்மையாய் இருத்தல் வேண்டும்."

சபை நிசப்தமாக இருந்தது.

"இங்கே உண்மையாய் இருப்பவர் யார்? வீட்டிலே துணைவி இரவில் காய, வெளியிலே வந்து சுகம் தேடுபவன் கற்பிழந்தவன் இல்லையா? உயிர் நண்பனாய் நினைத்து பதவி தந்து பக்கத்தில் வைத்திருக்க, விஷநாக மாய் சதி செய்பவன் கற்பிழந்தவன் இல்லையா? விபச்சாரம் கூடாது என்று சட்டத்தில் பொறித்து வைத்துவிட்டு இரவு கொட்டத்துக்கு பெண் தேடும் அமைச்சர் கற்பிழந்தவர் இல்லையா?"

மன்னன் மௌனமாக இருந்தான்.

"நான் உடலை வைத்துப் பிழைப்பு நடத்தினேன். இவர்களோ தங்கள் உதட்டையும், நாவையும் வைத்து அதிலே பொய் முறு வலையும், மெய்யற்ற வார்த்தைகளையும் வைத்து பிழைப்பு நடத்துகிறார்கள்! நான் யாருக்கும் துரோகம் செய்தேனா? நம்பிக்கைத் துரோகம் இழைத்தேனா? இல்லையே! ஆனால் இவர்கள் பதவியை வைத்து பிழைத்தார்கள். நட்பை வைத்து பிழைத்தார் கள். நாளை நாட்டையே விற்றுப் பிழைப்பார் கள்! கற்பிழந்த கூட்டம் மன்னா இவர்கள்! இவர்களது சுட்டுவிரல் எப்படி என்மீது திரும்பமுடியும் மன்னா? சொல்லுங்கள்?"

வசந்தா மூச்சுவிடாமல் பேசி களைத்துப் போனாள்.

மன்னன் தீர்ப்பை ஒத்திவைத்தான். தீர ஆராய்ந்தான்! இறுதியில் தீர்ப்புச் சொன்னான்.

"கற்பு என்பது உடல் சம்பந்தப்பட்ட தல்ல. அது உள்ளம் சம்பந்தப்பட்டது! துரோகமான செயலுக்கு துணை போகாமல் அரசனைக் காத்து நாட்டுக்கு உண்மையாக இருந்த வசந்தா உயர்ந்தவள்! கூட இருந்தே குழி பறிக்க நினைத்த என் நண்பனும், நாட்டின் விதிகளை தம் விருப்பப்படி வளைக்க விரும்பிய சொக்கரும், அமைச்சரும் உள்ளத்தால் கெட்டவர்களாயினர்!"

வசந்தா மகிழ்ந்தாள்.

**"மன்னா! நடுவு நிலை காத்து, நிதானம் காத்து, பக்கம் சாராமல், யார் என்று பாராமல் தீர விசாரித்து தீர்ப்புச் சொன்னீர்கள்! நீரே மன்னர். உயர்ந்தது செங்கோல்!"**

**"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்**
**தேர்ந்துசெய் வஃதே முறை."**

குறள்-541. அதிகாரம்-55

## சிந்தியா பதில்கள்

**★ தமிழ்நாட்டு தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கிறது?**

செல்வி. எஸ். சுமதி கொழும்பு-10.

எதிர்பார்த்ததுதான்! என்றாலும் எதிர்ப்பு அலை இப்படி அசுரவேகத்தில் செல்வியையும் அடித்துச் செல்லும்- கவிழ்த்து விடும் என்று எதிர்ப்பார்க்கவே இல்லை. 'நம்மை ஏய்ப்பவர் கையில் அதிகாரம் இருந்திடும் என்ற நிலை மாறும்.' வாத்தியார் படப் பாடலை நினைவுவைத்துக் கொண்டு வாக்களித்துவிட்டார்கள். சபாஷ். சரியான தீர்ப்பு!

**★ நடிகை ரேவதி என்ன ஆனார்?**

பூ. பாலேந்திரன், மொரட்டுவ.

முரசின் வாய்க்கு சர்க்கரை போடலாம். சொன்னது போலவே, கட்டுக்காசையும் கைநழுவவிட்டுவிட்டாரே ரேவதி! இம் முறை தமிழகத் தேர்தலில் மூன்று நடிகைகள் போட்டியிட்டனர். ஜெயலலிதா, ரேவதி, வெண்ணிற ஆடை நிர்மலா. கட்டுக்காசை காப்பாற்றியது ஜெயா மட்டும்தான். நடிகை களுக்கு பட்டை நாமம் போட்டு விட்டனர் தமிழக வாக்காளர்கள்.

**★ நடிகர் ரஜினிகாந்தின் அடுத்த கட்ட நடவடிக்கை என்னவோ?**

மா. ஜவாஹர், நீர்கொழும்பு.

அதெல்லாம் இருக்கட்டும் ஜவாஹர். தேர்தலுக்கு முன்னர் ரஜினி ரஜினி என்று அடிக்கொரு தடவை உச்சரித்த கலைஞர் தேர்தலின் பின்னர் பத்தோடு பதினொன்றா கத்தான் ரஜினிக்கும் நன்றி சொல்லி யிருக்கிறார். கவனித்தீரா? சோவும், மூப்பனா ரும் மட்டும்தான் "ரஜினி அலையால் வெற்றி" என்று அடித்துச் சொல்லியிருக்கிறார்கள். ரஜினியை வைத்து மூப்பனாரையும் சேர்த்து புதிய அணி ஒன்றை உருவாக்கும் யோசனை சோ போன்றோருக்கு இருப்பது மெய். காலம் கைகொடுத்தால் புதிய அணி கருக் கொண்டு கலகலவென்று பிறக்கலாம்.

**★ இந்தியாவின் அடுத்த பிரதமராக யார் வரவேண்டும் என்பது சிந்தியாவின் விருப்பம்?**

அ. சிவஞானம், கண்டி.

ஜோதிபாசு! மத சார்பற்ற நாடாக இந்தியா தொடர்ந்திருக்க வேண்டுமானால் அதுதான் நல்லது.

**★ மைக்டைசன்மீது மீண்டும் புகார் கூறப்பட்டுள்ளதே. மீண்டும் சிறைதானா?**

என். யோகானந்தன், பசறை.

டைசன் தன்னை பூங்கொத்துப்போல அள்ளிக் கொண்டுபோய் பிய்த்தெறிந்து விட்டார் என்று அமெரிக்கப் பெண் ஒருவர் அழுதழுது சொல்கிறார். அதனை தொலைக்காட்சிகளும் சுவாரசியமாக ஒளிபரப்புகின்றன. டைசன் மீது முன்பும் புகார் இருந்தது, அந்தப் பெண்ணுக்குத் தெரியாதோ? தெரிந்தும் டைசனைத் தேடி எதற்குப் போனாராம்? யாருக்கு காது குத்தப் பார்க்கிறார்கள்? டைசனைப் பிடிக்காதவர்கள் வலை விரித்துப் பார்க்கிறார்கள். பணம் புரளும் குத்துச் சண்டை உலகில் இதெல்லாம் சகஜம்தான். வியாபாரம் என்றாலே அங்கே போட்டி வருகிறது. போட்டி பொறாமையாகிறது.

## டைசனுக்கு மீண்டும் சிறையா?

பொறாமை கயமையாகிறது. கயமை எதிரியின் முதுகில் குத்த ஆள் அனுப்புகிறது. அதுதான் கதை.

**★ டியர் சித்தியா! தமிழ் படங்களுக்கு தணிக்கை இருந்தும் கவர்ச்சிக் காட்சிகள் எப்படி தப்பிவருகின்றன?**

ஆர். பாஸ்கரன்- கம்பளை.

சென்சாரில் இருப்பவர்களும் மனிதர் கள்தானே. சில சமயங்களில் மெய் மறந்து விடுகிறார்களாக்கும். முன்பெல்லாம் எங்கு வேண்டுமானாலும் முத்தமிடலாம். உதட்டில் மட்டும் வேண்டாம், என்றார்கள் சென்சார். இப்போது அதற்கும் அனுமதி தாராளம். கையளவு துணியும் இல்லாமல் கண்களில் உறுத்தினால் மட்டும்தான் கத்தரிக்கோலை தூக்கி நறுக். நறுக். மற்றப்படி ஓசியில் இரசிப்புத்தான்!

**★ டியர் சிந்தியா! காதலித்து ஆண்களை ஏமாற்றும் பெண்களுக்கும், பெண்களை ஏமாற்றும் ஆண்களுக்குமுள்ள வேறுபாடு என்ன?**

சி. தயானந்தன், பேத்தாழை.

என்ன தயானந்தன் இதுகூடத் தெரியாதா? பால் வேறுபாடு!

**★ உலகில் உள்ள அனைவரும் ஒரேயொரு மொழியை மட்டும் தனித்து பயன்படுத்தி வந்திருந்தால் இன்றைய உலகநிலை எப்படியிருக்கும்?**

ஒஸ்லி கபூர், அநுராதபுரம்.

மொழிப் பிரச்சனைக்குப் பதிலாக வேறு ஒரு பிரச்சனையைக் கண்டு பிடித்து சண்டை பிடித்திருக்கலாம்.

**★ டியர் சிந்தியா! படிப்பதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்?**

வ.மஸாயிதீன், கிண்ணியா-03.

சிந்தனையை அங்கே இங்கே மேய விடாமல் ஒரே இடத்தில் பிடித்துவைத்திரும்.

**★ வைரமுத்து துப்பறியும் தொடர் எழுதினால் எப்படி இருக்கும்?**

பஹ்மியா ஷரீப், காத்தான்குடி-05.

வாழை இலை போட்டு 'நூடில்ஸ்' பரிமாறியது போல் இருக்கும்.

**★ டியர் சிந்தியா! இந்தியன் எப்படி?**

கமல்பிரியன் தாஸ், புத்தளம்.

பார்க்கவில்லை. பார்த்தவர்கள் அபிப் பிராயம்: மூன்றரை மணிநேர சுவாரசியம்!.

**★ மேற்கிந்திய அணிக்கும் இலங்கை அணிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி எப்படி?**

ஆ. பகீரதன், ஹட்டன்.

தொலைக்காட்சியில் காண்பித்த ஒருநாள் போட்டி தானே? போட்டி நடைபெறும்போது காண்பித்திருந்தால் 'திரில்' இருந்திருக்கும். போட்டி முடிந்தபின் காண்பித்தமையால் ஆறின கஞ்சிதான். ஆர்வம் மிஸ்ஸிங். ஜெயசூரியவின் அந்த ஒல்லி உடம்பில் எங்கிருந்து அத்தனை பலம் வருகிறது என்று யோசித்தேன். யப்பா, என்ன ஒரு அடி. மறுதரப்பில் லாராவும் லாவகம் காட்டினார். அவர் தரையோடு சாய்ந்து அடிக்கும் விதம் அலாதி.

**★ நட்பு காதலாக மாறினால் என்னாகும்?**

எஸ்.ரி.ரமீஸ், அக்கரைப்பற்று-06.

இடைவெளி இல்லாமல் போகும் (அந்தளவுக்கு அன்பு பெருகும் என்று சொல்ல வந்தேன்.)

**★ டியர் சிந்தியா! பெண்களின் ஆட்சி தமிழக மக்களுக்கு பிடிக்கவில்லையா?**

எல்.கதிரேசன், மாத்தளை.

பிடிக்காவிட்டால் 1991 இல் பிரமாதமான வெற்றியை 'இந்தா பிடி' என்று கொடுத் திருப்பார்களா? பின்னர்தானே தெரிந்தது அவர் உருவத்தில் மட்டும் பெண் என்று.

**★ ரசிய ஜனாதிபதித் தேர்தலில் கொர்ப்பச் சோவ் வெல்லுவாரா?**

வி. அகஸ்தியன், நுவரெலியா.

சோவியத் யூனியனை கேக் மாதிரி வெட்டி துண்டுபோட்டு அமெரிக்காவின் ஆசை நிறைவேற கடுமையாக முயன்றவர் அவர்தானே! ரசிய மக்கள் அநேகமாக பாடம் புகட்டுவார்கள் என்றே நினைக்கிறேன்.

**★ றொமேஷ் களுவித்தாரன லாராவின் சாதனையை உடைக்க போராடுகிறாராமே! உண்மையா?**

வேலு இராஜ்குமார், பலாங்கொட.

கேலிதானே!

**★சந்திரசாமியின் கதையைப் பார்த்தீரா? பரிதாபம்தானே?**

ஜெகநாதன், வவுனியா.

இல்லை, பாடம்! காஞ்சி பீடாதிபதிகள் சந்திரசுவாமி, சாமியாரே கிடையாது என்றுவிட்டார். அதனை முன்னே சொல்லியிருக்கலாம். இன்னமும் யார் யாரெல்லாம் போலிச் சாமியார்கள் என்பதை யாவது காஞ்சிப் பெரியவர் சொன்னால் நல்லது.

**★ நம்பக்கூடிய பொய் ஒன்று சொல்லுங்கள் பார்க்கலாம்?**

ரா. மகேந்திரன் மட்டக்களப்பு.

கிழக்கில் இனிமேல் மின்மாற்றிகளை தகர்ப்பதில்லை என்று தகர்ப்பவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

**★ குலுக்கல் நடிகைகளில் உமது முதல் பரிசு யாருக்கு?**

மு.ஸாதாத், திருமலை.

திருமணம் செய்து கொண்டு சென்று விட்டதால் இடைவேளை விட்டுள்ள டிஸ்கோ சாந்திக்கு ஆறுதல் பரிசு மட்டும் தரப்படு கிறது. போட்டி தொடர்ந்து நடப்பதால் முதல் பரிசு வழங்கி ஜொள்ளர்களை கவலைப்பட வைக்க விரும்பவில்லை.

**★ ஜெயலலிதா-பூலான்தேவி ஒப்பிடுங்கள்?**

செல்வன் அந்தனி, திருமலை.

ஜெயலலிதா:- ஊர் சொத்துக்களை கொள்ளையிட்டதாக குற்றம் சாட்டப்பட்டதால் அரசியலில் தோல்வி கண்டவர்.

பூலான்தேவி:- கொள்ளைக்காரியாக பிரபலமாகியதால் அரசியலில் வெற்றிபெற்று எம்.பியாகியிருப்பவர்.

**★ ஜெயலலிதாவின் தோல்விக்கு முக்கிய காரணம் ஊழல்தானே?**

கா.குமாரதாசன்-கொழும்பு-06.

மலையை விழுங்கிய மாதேவன்போல கப்சிப்பாக இருந்திருந்தா யாரும் கண்டு கொள்ளாமல் இருந்திருப்பார்கள். ஒரு ரூபாய் சம்பளத்தில்தான் சீவியம் என்று கதை விட்டதையும் நம்பியிருப்பார்கள். அந்த நூறு கோடி ரூபாய் திருமணம்தாங்க யானை தன் கையால் தனக்கு மண் போட்டதுமாதிரியாச்சு.






படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 31

## சூர்ப்பணகை மானபங்கம்

இராமரைக் கண்டதும் சூர்ப்பணகை நிலை தடுமாறிவிட்டாள். இராமருடைய பேரழகை அவள் அணுஅணுவாக இரசிப்பதாக கம்பர் எடுத்துக்காட்டுகிறார். கவிச்சக்கரவர்த்திக்கு இராமபிரான் மீது கட்டுக்கடங்காத காதல். இதனால்தான் இராமகாதையில் பல இடங்களில் இராமரின் அழகை விரிவாக வர்ணிக்க முற்படுகிறார். இப்பொழுது சூர்ப்பணகையின் கண்களினூடாக கம்பர் இராமரின் பேரெழிலை அங்கம் அங்கமாக இரசித்து வர்ணிக்கிறார்.



சூர்ப்பணகை இராமரை மும்மூர்த்திகளுள் ஒருவரோ என்று சந்தேகப்படுகிறாள். அதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை. மானிட உள்ளங்களில் வாழும் மன்மதனாக இருக்கலாமோ என்று ஐயுறுகிறாள். அவனோ கண்களுக்குப் புலப்படுவதில்லை. இந்திரனாக இருக்கக்கூடுமோ என்று சந்தேகம் எழுகிறது. ஆனால் இந்திரனுக்கு அங்கங்களெல்லாம் ஆயிரம் கண்கள் இருக்க வேண்டுமே! இவ்வாறு பலவாறாகக் கருதும் அவள், இராமரின் ஒவ்வொரு அவயவத்தையும் ஆராய முற்படுகிறாள்.

இராமரின் முக அழகினை வான் மதிக்கும் தாமரைக்கும் ஒப்பு நோக்க எண்ணுகிறாள்; தாமரைக்கு ஒப்பிட்டால் அம்மலர் காலையில் அழகாக மலரும்; மாலையானதும் கூம்பிவிடும். சந்திரனுடன் இராமரின் முகத்தை ஒப்பிட்டால் அதுவும் நிலையாக இருப்பதில்லை. அடிக்கடி அதன் கலைகள் தேய்ந்துவிடுகின்றன. அத்துடன் சந்திரனில் கறையும் இருக்கிறது. ஆகவே நிரந்தரமாக ஒளி வீசிக்கொண்டிருக்கும் இராமரின் வதனத்துக்கு சந்திரனோ தாமரையோ ஈடாக முடியாது.

இதனை கவிச்சக்கரவர்த்தி கம்பர் தனது அழகு நடையில் தருகிறார்:

**அதிகம் நின்று ஒளிரும்**<br>
**இவ் அழகன் வாள் முகம்**<br>
**பொதி அவிழ் தாமரைப்**<br>
**பூவை ஒப்பதோ?**<br>
**கதிர் மதி ஆம் எனின்**<br>
**கலைகள் தேயும்; அம்**<br>
**மதி எனின், மதிக்கும்**<br>
**ஓர் மறு உண்டு என்னுமால்.**<br>
**(ஆரணிய காண்டம்-2748)**

கம்பராமாயணம் ஆரண்ய காண்டத்தில் 'சூர்ப்பணகைப் படல'த்தில் 14 பாடல்களில் இராமரின் எழிலை வர்ணித்துள்ளார் கம்பர். சூர்ப்பணகை என்னும் அரக்கர் குலப் பெண் மூலமாக புலவர் வெளிப்படுத்தும் வர்ணனை உண்மையில், புலவர், இராமபிரானின் பேரழகினை தன் கற்பனையில் எவ்வாறு கிரகித்திருக்கிறார் என்பதனையே வெளிக்காட்டுகிறது.

### அழகின் இரசனை

இராமரின் அழகில் மோகித்த சூர்ப்பணகை, தன்னை ஒரு பேரழகியாக உருமாற்றிக் கொண்டு, இராமரை அணுகுகிறாள். அவள் அணிந்துள்ள காற் சிலம்பின் பரல்கள் ஒலிக்கின்றன; அவள் அணிந்துள்ள ஆபரணங்களின் மணிகளிலிருந்தும் ஒலி எழுகின்றது. அத்துடன் அவள் அணிந்துள்ள மலர்களில் மொய்த்திருக்கும் வண்டுகளின் ரீங்காரமும் எழுகின்றது. இத்தகைய ஓசைகள் வந்த திசையை இராமர் திரும்பிப் பார்க்கிறார்.

சூர்ப்பணகை, ஒப்பற்ற அழகிய வடிவம் பெற வேண்டும் என்று தன்னுடைய மாயாசக்தியின் மூலம் அத்தகைய அழகிய தோற்றம் பெற்று, மெல்லிய பூங்கொடிபோல் அசைந்து வருவதைக் கண்டதும் இராமர் துணுக்குற்றார். இவளைப் போன்ற பேரழகி வேறு எவரும் இருக்க முடியாதே என ஒரு கணம் திகைப்புற்றார்.

இராமர், மாயமோகினி உருவம் தாங்கி வந்த சூர்ப்பணகையின் அழகைக் கண்டு இரசித்தமைக்கும், சூர்ப்பணகை இராமரின் அழகைக் கண்டு மோகித்தமைக்குமுள்ள வேறுபாடுகளை அவதானிக்க வேண்டும். அழகினை இரசிப்பது இயல்பானது. ஒரு மலரின் எழிலைப்பார்த்து இரசிப்பதை ஒத்தது இராமரின் இரசனை. ஆனால் சூர்ப்பணகையோ இராமரின் அழகினை இரசிக்கவில்லை; அழகில் மயங்கிக்-காமுற்று அந்த அழகனைத் தழுவி இன்பம்பெற வேண்டும் என்று துடித்தாள்.

இராமர் இருந்த இடத்தை நாடி ஓடிச் சென்று அவருடைய இரு பாதங்களிலும் சரணடைந்தாள். இராமரோ மனதில் எள்ளளவும் கபடமில்லாமல் "அழகிய பெண்ணே! உன் வரவு நன்மை பயப்பதாக! உன் பெயர் என்ன? ஊர் எது? இங்கு வரக் காரணம் என்ன?" என்று பல கேள்விகளைக் கேட்டார்

### பிரம்மதேவனின் பூட்டி

இக்கேள்விகளால் புளகாங்கிதமடைந்த சூர்ப்பணகை, இராமரின் உள்ளத்தை தன்பால் ஈர்த்தெடுப்பதற்கேற்ப நாணத்தை வரவழைத்தாள்; நீள் விழிகளைச் சுழற்றி காமக் கணை தொடுக்கலானாள். தன்னைப் பற்றிய விபரங்களைக் கூறலானாள்: "நான் பிரம்மதேவனுக்கு மகனான புலத்தியனின் மகன் விச்சிரவசுவின் மகள். சிவபிரானின் நண்பன் குபேரனுக்கும் கைலையங்கிரியையே பெயர்த்தெடுத்த தசகண்ட இராவணனுக்கும் நான் தங்கை. கன்னிகையான என் பெயர் காமவல்லி" என்றாள்.

இராவணனின் தங்கை என்பதை அறிந்ததும் இராமருக்கு சூர்ப்பணகையின் பால் சந்தேகம் ஏற்பட்டது. அரக்கர் குலத்துக்குரிய அங்க லட்சணங்கள் எதுவுமின்றி அழகிய உருவுடன் வந்தமையினால் சூழ்ச்சி ஏதோ இருக்க வேண்டும் என்று கருதினார். அவளுடைய வாயிலிருந்தே விடயங்களைக் கறந்து கொண்டார். முன்னுக்குப்பின் முரணாகவே அவளுடைய பதில்கள் அமைந்தன. ஈற்றில் வெளிப்படையாகவே சூர்ப்பணகை தன் ஆசையை வெளிப்படுத்தினாள்:

"பெண்கள் தங்கள் ஆசைகளைத் தாமே வெளிப்படுத்துவதில்லை. அரக்கர் குலம் இழி குலம் எனக்கருதிய நான் அக்குலத்தை விட்டு வெளியேறி விட்டேன். தங்களைக் கண்டதும் தங்கள் மீது காதல் பிறந்து விட்டது. ஆகவே என்னைத் தாங்கள் உடனடியாக ஏற்று காந்தர்வ மணம் புரிந்து கொள்ள வேண்டும்" என்று கெஞ்சினாள்.

இதிலிருந்தே சூர்ப்பணகையின் சூது இராமருக்கு வெளிப்படையாகத் தெரிந்து விட்டது. அவளிடமிருந்து தப்பிக் கொள்வதற்காக-அரக்கியானாலும் அந்தண வம்சத்தின் தொடர்புள்ள ஒரு பெண் சத்திரிய குலத்தவனான தனக்குப் பொருந்தமுடியாதென இராமர் கூறினார். இதனைக் கேட்ட சூர்ப்பணகை தனது வம்ச முறைகளை விளக்கலானாள். தனது தந்தையான விச்சிரவசு ஓர் அந்தணரானாலும் தனது சகோதரர்கள் அரசர்களாகவே விளங்குவதாகத் தெரிவித்தாள். தான் அரக்கர் குலத்தவளாக இருந்தபோதிலும் அரக்க குணத்தையும் உருவத்தையும் வெறுத் தொதுக்கி விட்டு மானிட வேடந்தாங்கி, தவமியற்றும் முனிவர்களுக்கு உதவுவதாகப் பொய் கூறினாள். இவ்வாறு கூறியவள், தனது அண்ணன் இராவணன் முதலானோர் முனிவர்களை இம்சிப்பவர்கள். தன்னை மனையாளாக ஏற்றுக் கொண்டால், இராவணன் போன்றாரும் ரிஷி வேடத்திலிருக்கும் இராமருடன் நட்புறவு கொள்வார்கள் என்று இராஜதந்திர ரீதியாகவும் கருத்துக்களை வைத்தாள்.

### சீதைமீது சீறினாள்

இந்த வேளையில் சீதை பூங்காவில் பூக்கொய்து திரும்பிக் கொண்டிருந்தாள். சூர்ப்பணகையின் கண்களிலும் பட்டு விட்டாள். சீதையின் அடக்கமான அழகினைக் கண்டு சூர்ப்பணகை வெகுண்டாள். தன்னைப் போல் மாறு வேடம் பூண்ட மற்றுமொரு குலத்தைச் சேர்ந்த பெண்ணாக இருக்குமோ என்று சந்தேகம் கொண்டாள். சீதை இராமரின் இருக்கை அருகே வந்ததும், இராமரிடம் அதிக உரிமை கொண்டவள் போன்று முன்பாய்ந்த சூர்ப்பணகை, இராமரிடம், "இவள் ஒரு மாயக்காரி; உன்னை வஞ்சகத்தால் வளைத்துவிட முயற்சிக்கிறாள்." என்றாள். இராமரோ புன்னகை புரிந்து அவளை மேலும் கிறங்கச் செய்தார். சீதையோ எத்தகைய களங்கமுமற்றவளாக இராமரை நெருங்கி அவருடைய இரு தோள்களையும் பற்றினாள்.

இதனைக் கண்ட சூர்ப்பணகை இருவர் முன்பாய்ந்து சென்று தடுக்க முற்பட்டாள். இராமருக்கு இச் செய்கை சினமூட்டியது. "பெண்ணே! அடாத செயல்களில் ஈடுபடாதே. நான் ஏற்கனவே மணமானவன். இவளே எனது பத்தினி. உன்னுடைய தீய செயலை என் தம்பி கண்ணுற்றால் பெருந் தீங்கு நேரிடும். போய்விடு இவ்விடத்தை விட்டு." என்று எச்சரித்தார். இருவரும் பர்ணசாலையுள் சென்று மறைந்தனர். 'இந்தப் பெண் அருகில் இருப்பதனாலன்றோ இந்த அழகன் என்னை வெறுக்கிறான். இவளை எப்படியாவது இவனிடமிருந்து பிரித்துவிட வேண்டும் ' என்று தீர்மானித்தாள், சூர்ப்பணகை.

அன்றிரவு முழுவதும் சூர்ப்பணகை காமத்தீயில் வெந்தாள். அடுத்த நாள் உதயமானபின்னர் பர்ணசாலையை நோக்கி வந்தாள். கோதாவரி நதியில் நீராடி இராமர் காலைக் கடன்களை முடித்துக் கொண்டிருப்பதைக் கண்டாள். சீதை பர்ணசாலையில் தனித்திருந்தாள். சற்றும் தாமதியாமல் சீதையைக் கவர்ந்து செல்லும் எண்ணத்துடன் பர்ணசாலையில் புகுந்து தனது கரங்களை நீட்டினாள்.

**இராஜகுமாரி**

### இலக்குவனின் சீற்றம்

'நில்' என்று ஒரு கடுமையான உத்தரவு கேட்டுத் திரும்பினாள் சூர்ப்பணகை. சீதையைக் கண்ணிமைபோல் காத்துவரும் இலக்குவன், தூரத்தே நின்று பர்ணசாலையையே பார்த்துக் கொண்டிருப்பதை சூர்ப்பணகை காணவேயில்லை. உருவிய வாளுடன் வந்த இளைய பெருமாள் இலக்குவன், அரக்க உருவில் நின்றிருந்த சூர்ப்பணகையின் அடர்ந்த கூந்தலை ஒரு கையால் பிடித்து அவளை உதைத்தான். மண்ணில் விழுந்து உருண்ட சூர்ப்பணகை எழுந்து இலக்குவனைத் தாக்க முற்பட்டாள். இலக்குவன் அவளுடைய மூக்கையும் இரு காதுகளையும் இரு முலைக் காம்புகளையும் அறுத்தெறிந்தான். இரத்தம் பெருக்கெடுத்தோட அண்டமே கிடுகிடுக்கும் வண்ணம் பலமான சப்தமிட்டு அழுது புரண்டாள் அவள்.

சிறிது நேரத்தில் எழுந்து பெரும் சப்தத்துடன் அழுது புலம்பிய வண்ணம், அந்த ஆரண்யத்தை ஆட்சி புரியும் அவளுடைய தம்பி கரனை கூவி அழைத்த வண்ணம் ஓடினாள். அவளுடைய ஓட்டமும் ஒப்பாரியும் அக்கானகத்திலுள்ள கொடிய விலங்குகளையே அச்சமுறச் செய்தன.

(தொடர்ந்து வரும்)

**இராமாயணப் போட்டி:29**

**சரியானவிடை:- அகத்தியர்**

1. செல்வி. க. சந்திரகலா. 23/13, பன்சல வீதி, இராகலை பஜார், ஹல்கரனோயா.
2. எஸ். சத்தியமூர்த்தி. 202, செட்டியார் தெரு, கொழும்பு-11.
3. M.N.M. நியாஸ். "பர்வீன் மன்சில்" உடத்தலவின்னை.
4. செல்வி. அமுதா துரைசாமி. கிலார்னி, பொகவந்தலாவ.
5. செல்வி. எஸ். கவிதா. K/ சரஸ்வதி மகா வித்தியாலயம், புசல்லாவ.

**போட்டி இல. 31** கேள்வி:- சூர்ப்பணகையின் தந்தையின் பாட்டனார் பெயர் என்ன?

மே.25 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி–இல.31, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

---

தமிழக தேர்தல் முடிவுகளை அடுத்து ஜெயலலிதாவும்- சசிகலாவும் எவ்வாறு தமது பிரதிபலிப்புக்களை வெளியிட்டிருப்பார்கள்? நமது காதிலை பூ கந்தசாமியிடம் கற்பனைக் குதிரையைத் தட்டிவிடச் சொன்னோம். குதிரை பறக்கிறது.

# உள்வீட்டு ஊடல்

தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிந்துகொண்டிருக்கிறார் ஜெயலலிதா. தமது வீழ்ச்சி உறுதி என்று தெரிந்துவிட்டது. தொலைக் காட்சி பெட்டியை காலால் எட்டி உதைக்கிறார். உதைத்துவிட்டு உள்ளே போகிறார்.

அங்கே சசிகலா தனது உடமைகளையெல்லாம் சுருட்டி கட்டிக்கொண்டிருக்கிறார். உள்ளே வரும் ஜெயலலிதாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது.

ஜெயா:- அடியே சசி. என்னடி செய்கிறாய்?

சசி:- பார்த்தால் தெரியவில்லை?

ஜெயா:- கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் இது என்னடி பேச்சு?



**காதிலை பூ கந்தசாமி**

சசி:- ம்ஹூம், இதுக்கு ஒன்றும் குறைச்சல் கிடையாது. ஆட்சிதான் போயாச்சே. பிறகென்ன அதிகாரம் வேண்டிக் கிடக்கு?

ஜெயா:- என் காலடியில் கிடந்து நாக்கைத் தொங்கப்போட்டுக்கொண்டிருந்தவள் நீ. நாகூசாமல் பேசுகிறாயா? பாவி!.

சசி:- நான் மட்டும் இல்லையென்றால் தனிமையில் கிடந்து தவித்திருப்பீர்கள்! நாடாளும் ராணியின் தோழி என்று நாலுபேர் நாலுவிதமாகப் பேசியும் நான் பொறுத்துக் கொண்டிருந்தது எதற்காக?

ஜெயா:- அதுதான் உடன்பிறவா சகோதரி என்று அறிவித்தேனேயடி.

சசி:- உடன்பிரியா சகோதரி என்று சொல்லாமல் விட்டீர்களே, அது போதும். நான் போகிறேன். வழக்கென்றும், கணக்கென்றும் நாலு பக்கத்தாலும் நம்மை பிழிந்துவிடுவார்கள். என்னால் முடியாது.

ஜெயா:- சுருட்டும் போது கூடவே இருந்தாய். மாட்டிக்கொள்ள நேரும் போது நழுவப் பார்க்கிறாயே. நியாயமா?

சசி:- (விழுந்து விழுந்து சிரிக்கிறார்.)

ஜெயா:- என்ன சிரிப்பூபூபூ.

சசி:- நியாயம் என்றால் என்ன அர்த்தம்? அது உங்களுக்கும் தெரியாது. எனக்கும் தெரியாது. தெரியாததைப் பற்றி பேசுவானேன்.

ஜெயா:- எல்லாம் உன் சகவாசத்தால் வந்தது. அடியே சசி, உன்னாலே நான் இழந்தது எத்தனை? என் சொந்த அண்ணனைப் பிரிந்தேன். வீடு தேடி வந்தவரை விரட்டினேன். என் விசுவாசிகளாக இருந்த கட்சிக்காரர்களை கழட்டிவிட்டேன். வளர்ப்பு மகன் என்று உன் குடும்ப பிள்ளையை தத்தெடுத்தேன். தவித்தேன். சொத்துக் கொடுத்தேன். என்னை நீ வளைத்தாய். என் சொத்தை வளர்ப்பு மகன் என்ற பெயரால் அவன் வளைத்தான். அய்யே.... அய்யகோ..... உன்னால் என் ஆஸ்தி போனது. உன்னால்தானடி இன்று என் ஆட்சியே போனது. இப்போது நீயே போகிறாய்! போடி, போ!.

சசி:- நாக்கை சுழற்ற உங்களுக்கு மட்டும் தான் தெரியும் என்று நினைக்க வேண்டாம். என் நாவசைந்தால் என்னாகும் தெரியுமா?

ஜெயா:- தெரியுமடி தெரியும். நாவசைத்து நாவசைத்து தானேயடி என்னையே சிதைத்தாய்! உன் சொற்படியெல்லாம் ஆடித்தானே ஒரு பற்பொடி வாங்கக் கூட உன் கையை எதிர்ப்பார்க்கும் நிலைக்கு வந்திருக்கிறேன். (குலுங்கிக் குலுங்கி அழுகிறார்.)

சசி:- நடித்தது போதும்! தப்பைச் செய்து விட்டு நடித்து என்ன லாபம்? போட்ட வேஷத்திற்கு ஏற்ப உங்களால் நடிக்க முடிந்ததா? சே...வெட்கம்!

ஜெயா:- என்னடி சொல்கிறாய்?

சசி:- பின்னே என்ன, இரண்டு விரலைக் காட்டி ஏன் வாக்குக் கேட்டீர்கள்?

ஜெயா:- அதுதானடி இரட்டை இலைச் சின்னத்தின் அடையாளம்.

சசி:- மக்கள் என்ன நினைத்தார்கள் தெரியுமா?

ஜெயா:- என்ன நினைத்தார்கள்?

சசி:- இன்னமும் இரண்டு மடங்கு சம்பாதிக்க அனுமதி கேட்பதாக மக்கள் நினைத்துவிட்டார்கள்.

ஜெயா:- கருணாநிதி ஐந்துவிரலையும் விரித்து வாக்குக் கேட்டாரே. ஐந்து மடங்கு சம்பாதிக்க ஆசைப்படுகிறார் என்று ஏன் நினைக்கவில்லையாம் இந்தச் சனங்கள்?

சசி:- அவர் முன்பு சம்பாதித்ததைவிட 5 ஆயிரம் மடங்கு சம்பாதித்தால்கூட நம் சொத்து மதிப்பை எட்டமுடியாது என்று மக்களுக்கு தெரியும். அதனால் அனுதாபத்தோடு ஒரு சந்தர்ப்பம் கொடுத்திருப்பார்கள்.

ஜெயா:- எல்லாம் அந்த நடிகனால் வந்தது.

சசி:- உங்களால்தானே அந்த நடிகனே அரசியலுக்கே வந்தது.

ஜெயா:- தாத்தாவை நம்பியிருந்தேன். அவரே தள்ளாடுகிறார். இந்த மூப்பனாருக்கு இவ்வளவு ரோஷம் வரும் என்று யார் கண்டார்கள்.

சசி:- தட்டிக் கொடுத்து எழவைக்கத் தெரிந்தவர்கள் தட்டிக் கொடுத்தால் எழாதது எல்லாம் எழும். மூப்பனாரை உஷாராக எழவைத்தது நடிகர் கொடுத்த உற்சாகம். நம்மைத் தட்டிக் கொடுக்க யார் இருந்தார்கள்? (பெருமூச்சு விடுகிறார்.)

ஜெயா:- இருந்துபாரடி.. என்னி ஒரு வருடத்தில் இந்த ஆட்சியை வீட்டுக்கு அனுப்புகிறேன்.

சசி:- (சசியின் முகம் மலர்கிறது.) உண்மையாகவா சொல்கிறீர்கள்?

ஜெயா:- மத்திய ஆட்சியை கைக்குள் போட்டால் காரியம் முடியும்.

சசி:- அதற்கு முன் வழக்குகள் வருமே.

ஜெயா:- ஆட்சிக்கு வந்தவுடன் மிரட்டுவார்கள். சொத்தை பறிக்க மாட்டார்கள். நாளை அவர்களுக்கும் அந்தக் கதி ஏற்படலாம் என்று பயப்படுவார்கள். எல்லோர் மடியிலும் கனம். அதனால் பிறர் மடியில் கைவைத்து தம் மடியை கெடுத்துக்கொள்ளத் துணிய மாட்டார்கள். தவிர, நமக்கு லாபமும் உண்டு மறவாதே!.

சசி:- என்ன லாபம்?

ஜெயா:- நம்மீது வழக்கென்றும், கணக்கென்றும் அவர்கள் தொல்லை கொடுத்தால்தான், அய்யோ பாவம் என்று மக்கள் அனுதாபப்படுவார்கள்! அழுது நடிக்க வேண்டுமானால், அதற்கேற்ற கதை வேண்டாமா? கருணாநிதி கதை எழுதட்டும். நான் நடிக்கிறேன். அடுத்து ஆட்சியைப் பிடிக்க அனுதாப வலை விரிக்கிறேன்!

சசி:- அபாரமான திட்டம்! (கன்னத்தில் முத்தமிடுகிறார்.)

ஜெயா:- என்னடி முடிவை மாற்றி விட்டாயா?

சசி:- என்ன முடிவு?

ஜெயா:- வெளியேறுவது, என்னை விட்டு விலகுவது!

சசி:- (அசட்டுச் சிரிப்புடன்) சேச்சே....அது ஒரு நடிப்பு. உங்களை உருவேற்றிப் பார்க்கும் ஊடல்.

ஜெயா:- இயக்கம் யார், உன் கணவர் நடராஜனா?

சசி:- அவருக்கு இயக்கவெல்லாம் தெரியாது. நான் தான் அவரையும் இயக்க வேண்டும். இது என் சொந்த யோசனை.

ஜெயா:- என்னால் மறக்க முடியாதது என்ன தெரியுமா?

சசி:- எத்தனையோ இருக்கிறது நமக்குள். நீங்கள் எதனைச் சொல்கிறீர்கள்?

ஜெயா:- ஊழலும், உன் ஊடலும்!

சசி:- அம்மா–தாயே!

ஜெயா:- நிறுத்து, நிறுத்து, வளர்ப்பு மகளாக உன்னையும் தத்தெடுக்கச் சொல்லி விடாதே! (சிரிக்கிறார்.)

சசி:- என் ராசாத்தி. இப்போதாவது சிரிப்பு வந்ததே. இது என்ன கண்ணீர்?

ஜெயா:- ஆனந்தக் கண்ணீரடி, ஆனந்தக் கண்ணீர்!

**யாவும் சுத்தமான கற்பனை**



படிப்பகம்

www.padippakam.com



அருள் ஜீவலர்ஸ்
ARUL JEWELLERS
436331
பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# கலையும் – வதையும்



➜ சேற்றுக் குளியலில் ஈடுபட்டவர் போல காணப்படுபவர் யார் தெரியுமா? கமல்!

'இந்தியன்' படத்திற்காக கமல் போட்டுக் கொண்ட பலவித மேக்-அப் அசத்தலில் இதுவும் ஒன்று.

சிவாஜிகணேசன்தான் முன்னர் பாத்திரங்களுக்காக கடினமான மேக்-அப் போடுவதுண்டு. இப்போது கமல் போடுகிறார். உடல் நோவு, தோல் எரிச்சல் என்று பல சிரமங்களை பல்லைக் கடித்தபடி தாங்க வேண்டும்.

நடிப்பு ஒரு கலை. அதில் ஈடுபடுபவர்கள் வாழவும் வேண்டும் என்பதால் தொழிலாகவும் இருந்தாக வேண்டியுள்ளது.

கமல் கலையை தொழிலாக மட்டுமில்லாமல் ஆத்ம திருப்திக்காகவும் செய்பவர். அதனால்தான் இத்தனைதூரம் 'ரிஸ்க்' எடுக்கிறார்.

'இந்தியன்' தமிழ் சினிமா வரலாற்றில் தனியிடம் பெறும் படங்களில் ஒன்றாக இருக்கும்.



அம்மன் ஜீவல்
AMMAN JEWEL
332033
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
29 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# தருவது வியோடை

# அடுத்த பிரதமர்?

➜ பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் இம்ரான்கான் இப்போது பந்து வீசிக்கொண்டிருப்பது பெநாசீர் புட்டோவுக்கு.

பாகிஸ்தான் பிரதமர் பெநாசிரும், இம்ரான்கானும் இலண்டனில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஒன்றாகப் படித்தவர்கள். நல்ல நண்பர்கள்.

பின்னர் இம்ரான்கான் விளையாட்டில் வெளுத்துவாங்கினார். பெநாசீர் அரசியலில் புகுந்து பிரதமரானார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டனாக இருந்தபோது இம்ரானுக்கு பாகிஸ்தானில் பயங்கரசெல்வாக்கு. என்றாலும் அவர் அரசியலில் ஈடுபடுவார் என்று அப்போது யாரும் நினைத்தே பார்க்கவில்லை.

கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றபின்னர்தான் இம்ரான்கான் அரசியலில் குதிப்பார் என்று ஊகங்கள் வெளியாகின.

ரஜினியைப் போலவே இம்ரான்கானும் ஊகங்களை மறுக்காமல் புதிர் போட்டுக் கொண்டிருந்தார். அதே நேரம் புற்றுநோயால் பலியான தனது தாயாரின் நினைவாக பல இலட்சம் ரூபாய்களை கொட்டி புற்றுநோய் மருத்துவமனையை கட்டுவித்தார்.

இம்ரான்கான் அரசியலில் குதிப்பதற்கு ஒத்திகை பார்க்கிறார். அனுதாபம் தேடுகிறார் என்று நினைத்து உஷாரானார் பெநாசீர்.

இம்ரானின் மருத்துவமனைக்கு நிதி திரட்டிக்கொடுத்தார் இளவரசி டயானா. அதனை வைத்து டயானாவோடு இம்ரான்கானை முடிச்சுப்போட்டு வதந்திகளும் கிளப்பப்பட்டன.

இம்ரான்கானின் திருமணத்தை வைத்து, பாகிஸ்தானிய பெண்களை அவருக்கு பிடிக்கவில்லையாக்கும் என்று எதிர் பிரசாரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இறுதியாக, இம்ரான்கானின் மருத்துவமனையில் குண்டுவெடித்தது. இம்ரான்கான்தான் குண்டு வெடிப்புக்கு காரணம் என்று பெநாசீர் ஆதரவாளர்களால் கூறப்பட்டதுதான் பெரிய வேடிக்கை.

கிரிக்கெட்டை வைத்து வளர்ந்த இம்ரானை கிரிக்கெட்டை வைத்தே ஓரம் கட்டவும் பெநாசீர் முயன்றார். இந்தியாவிடம் பாகிஸ்தான் தோற்றதுக்கு இம்ரான்தான் காரணம். வாசிம் அக்ரமுக்கு பணம் வாங்கி கொடுத்தார் என்று பிரசாரம் செய்தார்கள்.

பொறுத்துப், பொறுத்துப் பார்த்த இம்ரான்கான் இப்போது தனிக்கட்சி தொடங்கிவிட்டார்.

பாகிஸ்தானில் புதிய சக்தி ஒன்று தேவை என்று மக்களால் உணரப்பட்டால் இம்ரான்கான் காட்டில் மழை பொழியும். அடுத்த பிரதமராகும் வாய்ப்பு முன்னாள் கப்டனுக்கு கிடைக்கும்.

இந்தியப் பத்திரிகைகள் இம்ரான்கானை பாகிஸ்தானின் ரஜினி என்று அழைக்கின்றன.

தனிக் கட்சி தொடங்குவதில் ரஜினியை முந்திவிட்டார் இம்ரான்கான்.



# முள்ளும் மலரும்




⬅ கல்லும்- முள்ளும் காலுக்கு மெத்தை. மனம் திடமாகி இறுகிவிட்டாலும் வலி தெரியாது.

சாமியார் தூங்குவது இரும்பு ஆணிப் படுக்கையில். அடடே.... என்ன சுகமான தூக்கம்! ஆத்மீக பலத்தால் இது கைகூடியிருக்கிறது.

இவர் டில்லியைச் சேர்ந்தவர். இவரது மகிமையை அறிந்த பஞ்சு மெத்தை நிறுவனம் ஒன்று இவரை விளம்பரத்திற்காகப் பயன் படுத்தியது.

ஆணியில் படுத்திருக்கும் ஆண்டி தமது பஞ்சு மெத்தையில் படுத்து 'ஆஹா மெத்து மெத்து என்று இருக்கிறதே' என்று சொல்வது போல ஒரு விளம்பரம் வெளியிட்டுள்ளது.


# விண்ணிலிருந்து ஒரு கிளிக்

விண்ணிலிருந்து கிளிக் செய்யப்பட்டு இருப்பது அவுஸ்திரேலியா கண்டம். வெட்டிப் போடப்பட்ட தங்கக் கட்டி போல எவ்வளவு அழகு!

செய்மதியின் உதவியுடன் அதியுயர் தொழில் நுட்ப கமராவால் இப்புகைப்படம் எடுக்கப்பட்டது. (வி. எச். ஆர் றேடியோ மீட்டர் கமரா)

அவுஸ்திரேலியா கண்டத்தின் பரப்பளவு 7,618,493 சதுர கிலோ மீட்டர்.

இப்புகைப்படம் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.



# பிறந்த நாள் வாழ்த்து



முதலாவது பிறந்த நாள் (25.5.1996)

செல்வி. செல்வராஜ் சுதாசினி

மெற்றோ எப்பாட்மென்ஸ்–இலக்கம் 8/3/2A, 55வது லேன், வெள்ளவத்தையைச் சேர்ந்த செல்வராஜ் கோகிலம் தம்பதியினரின் செல்வப் புதல்வி சுதாசினி தனது முதலாவது பிறந்த நாளை 25/5/1996 இல் தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடவுள்ளார். இவரை அன்பு அப்பா, ஆசை அம்மா, தாத்தாமார், பாட்டிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, மாமாமார், அண்ணன்மார், அக்காமார், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் விநாயகர் அருளால் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க, வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.


Vahini
JEWELLERY
For Genuine 22 kt. Gold Jewellery Of Excellent Craftsmanship
T.P 438019

T.P 438019
தரங்குறையா மனங்கவர் தங்க ஆபரணங்களுக்கு
47,1/3, 1ST FLOOR, SEA STREET, COLOMBO-11.


# இடியும் - மின்னலும்



➜ இரவு நேரங்களில் ஒவ்வொரு 12 மணி நேர இடைவெளிகளில் 35 பாகை வடக்கு அட்ச ரேகைக்கும் 35 பாகை தெற்கு அட்ச ரேகைக்குமிடையில் 3200 இடியுடன் கூடிய மின்னல்கள் தோன்றுகின்றன. அமெரிக்காவில் அரிஸோனா மாநிலத்திலுள்ள ரியுசன் நகருக்கருகில் கோடைகாலத்தில் ஒரு நாள் இடம்பெற்ற மின்னலின் தோற்றம் இது. ரியுசன் அட்ச ரேகை 32 பாகை வடக்கு பாகையில் அமைந்துள்ளது.

காதால் கேட்கும் இடியையும், கண்ணால் பார்க்கும் மின்னலையும் தத்ரூபமாக படம் பிடித்துள்ளார்கள். இது ஒரு உலக சாதனைப் புகைப் படமாக கின்னஸில் இடம் பெற்றுள்ளது.



இப்பத்திரிகை கொழும்பு ... 29, ... அச்சகத்தில் மே மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்